206

வசந்தம்

சர்வசித்து ஐப்பசி
அக்டோபர், 47.
ஓவியம் வி. எஸ். பிள்ளை

8
அணா

ANNOUNCING

THE

NEW INDIA ASSURANCE CO.,

LIMITED.

(H. O. BOMBAY)

Have much pleasure in announcing

HAVING COMPLETED
A NEW BUSINESS (LIFE) OF

Rs. 12,39,71,956 in 1946

Against a New Business of

Rs. 8,38,31,700 in 1945

Thus Registering an increase of
NEARLY 50 PER CENT

During this Year The Company has plans for an intensive organisation in the City & Districts undeveloped.

APPLICATIONS FROM PERSONS OF RECOGNISED ORGANISING ABILITY WILL BE CONSIDERED.

Apply to :

MADRAS BRANCH,
4 & 5, First Line Beach.

K. GANAPATHI,
Branch Manager.

15 JAN 1958



நம் நாட்டுத்தொழிலை
ஆதரியுங்கள்

மேனேஜிங் ஏஜண்ட்ஸ் & செக்ரடரீஸ்
R. K. ஷண்முகம் செட்டி
அண்டு பிரதர்ஸ்.

நூற்றல்:
20 நெ. முதல் 44 நெ. வரை ஒற்றை,
முறுக்கு, காரம் சலவை நூல்
தயாரிக்கிறோம்.

எல்லாவிதமான ஜவுளி
ரகங்களும்:
வேஸ்டிகள், லாங்கிலாத்,
டவல், சர்ட்டிங்,
மல், சதர்
தயாரிக்கிறோம்.

எங்களுடைய வி 116 நெ. லாங்கிலாத்
மார்க்கட்டில் பெயர் பெற்றது.
600 நெ. காடா தயாரிக்கும் உரிமை
எங்களுடையதே.

வசந்தா மில்ஸ் லிமிடெட்

ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்: சிங்காநல்லூர்.
தந்தி: "வசந்தா" கோயமுத்தூர்: போன்: நெ. 25.



ஒரு சுத்தமான ஊற்றிலிருந்து

இயற்கை மைசூர் காடுகளில் மிக உன்னதமான சந்தன மரங்களை உண்டாக்கி யிருக்கிறது. இது நாள் நூற்றுக்கணக்கான வருஷங்களுக்கு மிகவும் கீர்த்தியான சந்தன அத்தருக்கு ஆதாரம். இத்துடன் தற்கால விஞ்ஞான முறைகளும் சேர்ந்து நூற்றுக்கு நூறு சுத்தமான உயர்ந்த மைசூர் சந்தன அத்தர் கிடைக்கிறது. அது மருந்துகள், சோப், அலங்கார வாசனை திரவியங்கள் தயாரிப்பதற்கு இன்றியமையாதது.

மைசூர்
சந்தன அத்தர்

MSE 16 TM

மைசூர் கவர்ன்மெண்ட் தயாரிப்பு.

Telegrams :- "UMAYAL". Telephone :- 56 A.

UMAYAL WEAVING ESTT., LTD.,
Cannanore, N. Malabar.

Manufacturers of:- BEST "UMAYAL" HANDLOOM FABRICS.

BEDSPREADS
TABLE LINEN
FURNISHING FABRICS AND CURTAIN CLOTHS
DRESS MATERIALS FOR LADIES AND GENTS IN UP-TO-DATE DESIGNS AND CHARMING COLOURS
TURKISH TOWELS
BATH GLOVES
BATH MATS
MUFFLERS ETC.

ENQUIRIES EARNESTLY SOLICITED.

ENCOURAGE HANDLOOM INDUSTRY.

"UMAYAL" FABRICS
AN ASSET TO EVERY HOME
EVERYTHING MADE TO ORDERS
POPULAR FABRICS
THROUGHOUT INDIA AND CEYLON.

Distributors for Mysore State :-
SRI UMAYAL STORES,
363, Avenue Road,
BANGALORE CITY.

இவ்வுலகில் ஒவ்வொரு இடத்திலும் மணிக் கணக்கு ஒவ்வொரு விதமாக விருக்கிறது. ஆனல், 'வெஸ்ட் எண்ட்' கடிகாரம் மட்டும் மணிக் கணக்கில் தவறுவதே யில்லை.



மேலேயுள்ளது ஒரு சைத்ரிகனின் கற்பனையில் எழுந்துள்ள கெய்ரோவின் கோட்டை. கீழே யுள்ளது கல்கத்தாவிலுள்ள பிரசித்தி பெற்ற காளி கோவில்.

'வெஸ்ட் எண்ட்' கடிகாரப்படி.

எப்பொழுதாவது நீங்கள் எகிப்துக்கு போக வேண்டியிருந்தால், அங்குள்ள மணிக் கணக்குத் தகுந்தவாறு உங்களுடைய கடிகாரத்தில் சுமார் நான்கு மணி நேரம் பின்னல் தள்ள வேண்டியிருக்கும். உங்களுடைய கடிகாரம் 'வெஸ்ட் எண்ட்' கடிகாரமாயிருந்தால் அங்குள்ள மணிக் கணக்கைச் சரியாகக் காட்டும்! 'வெஸ்ட் எண்ட்' கடிகாரம் உறுதிப் பாட்டிற்கும் அழகிய தோற்றத்திற்கும் புகழ் பெற்றது. போதுமான ஸ்டாக் கிடைப்பது கஷ்டமாயிருப்பதால், எங்களால் இயன்றவரை உங்கள் தேவையைப் பூர்த்தி செய்கிறோம்.



The EXTRA RECTANGULAR West End Patent Everbright Steel Rs. 157.

West End
WATCH CO.
BOMBAY & CALCUTTA

வெஸ்ட் எண்ட் வாட்சு கம்பெனி,

பம்பாய் : : கல்கத்தா Oct. 1947.

தேசத்தின் கோடிக்கணக்கான மக்களுக்கு வீடுகள்...

யுத்த காலத்தில் (1939-45) இந்தியாவின் நகரங்களையும் பட்டிணங்களையும் சுற்றி ஏற்பட்ட மாறுதல்களில் ஒன்று தீவிரமான தொழில் பெருக்கம். இதனால் கிராமங்களிலிருந்து நகரங்களை நோக்கி ஜனங்கள் வெளியேற நேரிட்டு, நகரங்களில் ஜனநெருக்கம் அதிகரித்தது. ஆனால் அவ்வாறு அதிகப்படியாக வந்த ஜனங்கள் வசிக்க புதிதாக வீடுகளை அமைக்க முடியவில்லை.

ஆரோக்கியமான இடங்களில் நவீன முறையில் ஏராளமாக வீடுகளைக் கட்ட, இப்பொழுது சர்க்கார்களாலும் இதர தொழில் ஸ்தாபனங்களாலும் ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. இந்த திட்டங்களில் எஃகு பெருவாரியாக உபயோகிக்கப்படும்.

ஒவ்வொரு நகரிலும் பலமாதிரியான 100 வீடுகளை கட்ட, இவ்வகையான ஓர் திட்டம் சென்னை சர்க்காரால் தயாரிக்கப்பட்டு வருகிறது. ஜனங்களுக்கு அதிக வசதியும் ஆரோக்கியத்தையும் அளிப்பதே மேற்படி திட்டத்தின் நோக்கமாகும். ஜனங்களுக்காக கட்டப்படும் வீடுகளை, கம்பிகளாகவும், உத்தரங்களாகவும், தகடுகளாகவும் மற்றும் இதர தேவைகளாகவும் எஃகு பலப்படுத்தும்.

குறைந்த பக்ஷம் தேவையான பரப்பு

	100 சதுர அடி
பம்பாய்	27 சதுர அடி
ஆமதாபாத்	43 சதுர அடி
ஷோலாப்பூர்	24 சதுர அடி

அதிகாரிகளால் நிர்ணயிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொருவரின் குறைந்த பக்ஷ பரப்பு தேவைக்கு எதிராக பம்பாய், அஹமதாபாத், ஷோலாப்பூர் நகரங்களில் ஒவ்வொரு நபருக்கும் உள்ள இடப்பரப்பு இங்கு காட்டப்படுகிறது. குறைந்த பக்ஷ தேவைக்கு அதிகமாகவே பரப்புள்ள வீடுகளை ஜனங்களுக்கு அளிப்பதில் எஃகு இன்றியமையாதது.

TATA STEEL

டாடா எஃகு

ப்ளேட்டுகள் - தண்டவாளங்கள் - உத்தரங்கள் - தகடுகள் - வீல் டயரும் ஆக்ஸிலும் - ஹை கார்பன் எஃகு - விசேஷ உலோக கலப்பு எஃகும் ஆயுத எஃகும் - விவசாய கருவிகள்.

தி டாடா அயர்ன் அண்டு ஸ்டீல்
கம்பனி லிமிடெட்
தலைமை ஸேல்ஸ் ஆபீஸ்.
102 A, க்ளைவ் தெருவு, கல்கத்தா.

T. N 750

OUTSTANDING

Stately, modern buildings that stand out in any surroundings call for imagination in design, quality in materials and dependabilty in construction.

The Modern Housing Construction has started erecting many such buildings in Madras and elsewhere, and is willing to place its resources and experience at your service.

An enquiry involves you in no obligation whatever. Write to us today, giving necessary details.

THE MODERN HOUSING CONSTRUCTION
AND PROPERTIES LIMITED

13, West cott Road, Royapettah,
MADRAS.

Branches: Madura, Trichinopoly, Trivandrum, Hospet, Bezwada, Bombay and Delhi.

இந்தியன் பாங்க் லிமிடெட்

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ்,
நார்த் பீச் ரோட், மதராஸ்.

தென் இந்தியாவில் எல்லா முக்கியமான இடங்களிலும் பம்பாயிலும் கிளை ஆபீஸ்கள் உள்ளன.

வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	... ரூ. 72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	ரூ. 53,00,000
ரிஸர்வ் நிதி	... ரூ. 62,00,000

எல்லாவித பாங்கு அலுவல்களும் கவனிக்கப்படும்.

N. கோபால அய்யர்.
செக்ரெடரி.

IBN/10

மிகச்சிறந்த ஆயுர்வேத ஔஷதங்களும் சிகிச்சைகளும்!

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்

★

ஆர்யவைத்தியர்

பி. வி. ராமவாரியர்

ஆர்யவைத்ய பார்மசி

திருச்சி ரோடு :: கோயமுத்தூர்

★

கேட்லாக் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.

வசந்தம்

மலர் 6	சர்வஜித் ௵ ஐப்பசி ௴	இதழ் 7

பொருளடக்கம்

ஆசிரியர்	...		...	1
அந்தண முதலியார்	...	சுவாமி சுத்தானந்த பாரதியார்	...	2
நாங்கள்	...	டி. வி. சுவாமி நாதன்	...	6
ஸ்ரீகாந்தன்	...	ஆர். ஷண்முக சுந்தரம்	...	8
புது வீடு	...	வி. ராமதுரை	...	17
இந்தோனேஷியா	...	'அ. சி.'	...	24
மல்லிகை மொக்கு	...	தா. நாகலிங்கம்	...	29
ஒளியலைகள்	...	ஆர். கே. விசுவநாதன்	...	32
ஊதூது சங்கே	...	ராம சுப்ரமணியம்	...	36
தியாகி	...	கமலாட்சி ஸ்ரீனிவாசன்	...	37
சிந்தையறிந்துவாடி	...	எஸ். ஆறுமுகம்	...	41
ஊளை	...	கி. வே. துரைசாமி ராஜா	...	51
இரண்டு சொட்டுக் கண்ணீர்	...	வி. கிருஷ்ணன்	...	59
தத்துவ ஞானி	...	'அரவிந்தன்'	...	63
இருபத்தாறு ஆண்களும் ஒரு பெண்ணும்	...	மாக்ஸிம் கார்க்கி	...	72
புத்தக ஆராய்ச்சி	...	... ...	...	76
தீராத தாபம்	...	ப. தனுஷ்கோடி	...	77
இயற்கை இன்பம்	...	'அ. கி.'	...	87

'வசந்த'த்தில் வெளிவரும் கதைகளில் காணப்படும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனை.

The Fashionable Furnishing Fabrics

DRESS TEXTILES

Ladies', Gents', Children's, Underwear, Sport Shirts etc.,

S. BEEMIAH CHETTY,

"WHITE SHOP", Coimbatore.

சுளுக்கு, வாயுப்பிடிப்பு, நரம்பு வலி, கால்—கை மரத்துப் போதல்,
பார்சவாயு, அல்லது பல்வலி எதுவானாலும்

நிச்சயமாக
குணமடைய இதை
உபயோகியுங்கள்

பட்டவுடனே
பரிகாரம்

வாயுவால் இடுப்புப் பிடிப்பு, நரம்புநோய் தலைவலி, வாயு, உபத்திரங்கள் பூச்சிக்கடி மூக்குவலி, ஜலதோஷம், மார்ச்சளி, ஆஸ்துமா, தொண்டைக் கட்டு, இருமல் ஆகிய வைக்கும்:

கை கண்ட
ஔஷதம்

LITTLE'S
ORIENTAL BALM

இந்தியா முழுவதும் மிகவும்
பிரபலமான சிறந்த ஔஷதம்

தயாரிப்பவர்கள் :-
லிட்டில்ஸ் ஓரியண்டல் பாம் & பர்மசியுடிகல்ஸ் லிமிடெட்
தபால் பெட்டி நெ. 67 : : மதராஸ்.

DJK 18

துணி உற்பத்தியாளர் கவனிக்க

நீங்கள் உற்பத்தி செய்யும் சட்டைத் துணிகள், கோட்டுத் துணிகள், சேலைகள், வேஷ்டிகள் முதலிய சகலவிதத் துணிகளிலும் பளபளப்பும் கண் கவர் வனப்பும் உண்டாக்க 'காலண்டர்' செய்யுங்கள்.

குறைந்த சார்ஜில் நிறைந்த அழகுடன் 'காலண்டர்' செய்து தரப்படும்.

வெளியூரிலிருந்து வரும் துணிகள் உடனே கவனித்து 'காலண்டர்' செய்து அனுப்பப்படும்.

விபரத்திற்கு அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்.

TRINITY WEAVING ESTABLISHMENT Ltd.,

(Calendering Department)

CANNANORE : : NORTH MALABAR.



இந்த இதழில்...

அகில உலக காவிய அரங்கில் காளிதாசனின் அமர சிருஷ்டியான 'சாகுந்தல'த்திற்கு ஒரு உன்னத ஸ்தானம் உண்டு. சாகுந்தலத்தின் கதா பாத்திரங்கள் அமரத்துவம் பெற்றவை. இன்பமும் துன்பமும் பின்னிப் பிணைந்து செல்லும் இனிய காதல் நாடகமாகிய சாகுந்தலத்தின் கதாநாயகி சகுந்தலை, தன் தோழிகளான பிரியம்வதையையும், அநுசூயையும் தேடி வரும் அழகியகாட்சிதான் இந்த இதழ் வசந்தத்தின் மேலட்டையின் அழகுக்கு அழகு செய்கிறது.

பிரபல ரஷ்ய ஆசிரியரான மாக்ஸிம் கார்க்கியின் உணர்ச்சிச் சித்திரமொன்று இந்த இதழில் வெளிவருகிறது. 'இருபத்தாறு ஆண்களும் ஒரு பெண்ணும்' என்ற அக்கதையை சுவைததும்ப மொழிபெயர்த்துத் தந்திருக்கிறுர் அ. சிங்காரவேலு அவர்கள்.

இளம் எழுத்தாளர் எஸ். ஆறுமுகம் 'சிந்தையறிந்து வாடி' என்ற தலைப்பிலே எழுதியிருக்கும் சோகக் கதை ஒரு இளைஞனின் எண்ணத்துடிப்புகளை வாசகர்கள் உணர வைக்கிறது.

இந்தோனேஷியாவைப் பற்றிய சரியான புள்ளி விவரங்களுடன் வெளியாகியிருக்கும் கட்டுரை அத்தொடர்பில் பற்றுள்ளவர்களுக்கு மிகவும் பயனளிக்கக் கூடியது.

இன்னும் இந்த இதழில் எத்தனை எத்தனையோ விஷயங்கள் இருக்கின்றன, படித்துச் சுவைக்க.

அந்தண முதலியார்

[சுவாமி சுத்தானந்த பாரதியார்]

1921-ம் ஆண்டு ; திருச்சியில் புலவர் மகா நாடு கூடியிருந்தது; அப்போது நான் காட்டுப்புத்தூர் உயர்பள்ளி ஆசிரியர் ; நானும் என் அரிய நண்பர் கோவிந்தசாமிப் புலவரும் மகா நாட்டிற் கலந்து கொண்டோம். மாநாட்டுத் தலைவர் ப. வே. மாணிக்க நாயக்கர் ; அவர் தமிழக மேதாவிகளில் ஒருவர் ; கணக்கில், சிற்பத்தில், நூலாராய்ச்சியில், பேச்சில், எழுத்தில் வல்லவர் ; கிண்டலாகப் பேசுவதிலும் அவருக்கு இணையில்லை ; சினம் வந்தால் துப்பாக்கியை நீட்டுவதிலும் பின் வாங்க மாட்டார் ; மகிழ்ச்சி வந்தால் அள்ளி அள்ளிக் கொடுப்பதிலும் பின் வாங்க மாட்டார். அதே காலம் நான் பௌதிக, ரசாயன, தாவர, பூகோள, உடல், உயிர் நூல்களை யெல்லாம் ஆராய்ந்து இரவு பகல் பாராமல் கலைச் சொற்களைத் தேர்ந்து தமிழில் எழுதிக் குவித்தேன். அடிக்கடி திருச்சிக்கும் பொன்மலைக்கும் சென்று என் அறிவியல் நூல்களை மாணிக்க நாயக்கரிடம் காட்டுவதுண்டு ; அவர் கலைச் சொற்கள் அமைப்பில் தக்க துணை தருவார். என்னை மெச்சுவார் ; நான் எப்போதும் பால், பழம், கடலையுண்பவனாதலால் அவர் முன்னிலையிலேயே உண்பது வழக்கம் ; ஆனால் எனது நண்பர் கோவிந்தசாமி பிள்ளை வைணவ ஆச்சாரத்தில் அணுப் பிசக மாட்டார். நாலு பேருக்கு நடுவே நீர் பருக வேண்டுமானாலும் சுவர்ப் பக்கம் திரும்பிக் கொண்டு, துணியால் முகத்தை மறைத்துக் கொண்டே பருகுவார். சமபந்தி என்றால் நடுங்குவார்.

நாங்கள் திருச்சிக்கு வரும் போதெல்லாம் அவர் ஸ்ரீரங்கம் சென்றே ஸ்ரீரங்கநாதர் மடப் பள்ளியில் பிரசாதம் வாங்கித் தூண் மறைவிலிருந்து சாப்பிட்டு விடுவார். அவர் மீசை வைத்துக் கொள்ள மாட்டார். ஆனால் நான் நன்றாக மீசை வளர்த்து முறுக்கி விட்டு ஜம் என்றிருப்பேன். நல்ல சட்டைகளை அணிவேன். அக்காலம் சாரணத் தலைவனாயிருந்ததால் வெள்ளைச் சாரப் பண்பிலும் உடுப்புகள் அணிந்து கையில் அழகான ஒற்றை முழிப் பிரம்பு பிடித்து வருவேன். புலவர் மகா நாட்டில் என்னைப் பார்த்த நாயக்கர் "முதலியார் வர வேண்டும்" என்றார், நான் "தமிழ்த் துடிப்பு" என்ற தலைப்பில் சில கவிதைகள் எழுதி மேடையில் படித்தேன். "முதலியார் நல்ல கவிச் செல்வம் பெற்றவர்கள் — இளம் உள்ளத்தில் இளந் தமிழ்த் தென்றல் தவழ்கிறது" என்று மெச்சினார். அவரை ஒட்டி அப்போது கரந்தைத் தமிழ்ச் சங்கத் தலைவராயிருந்த இராதாகிருஷ்ண பிள்ளையும் முதலியார் தமிழ் மிக வினிது என்று போற்றினர். முறுக்கு மீசை என்னை முதலியாராக்கி விட்டது! நீண்ட நாளாக நாயக்கர் என்னை முதலியார் முதலியார் என்றே அழைத்து வந்

தார். ஒரு நாள் நான் பொன்மலையில் அவர் பங்களாவிலேயே குளித்து — சந்தி ஜபம் செய்து தியானத்தில் அமர்ந்திருந்தேன்; அப்போது அவர் என் உடலில் பூணூல் இருக்கிறதா என்று பார்த்தார். நான் பூணூலை எடுத்துத் துறவறம் பூண்டு வெகுநாளாய் விட்டது; அவர் என் தியானத்தைக் கூர்ந்து பார்த்துக் கொண்டே நின்றார்; நான் தியானமானதும் சில வேத மந்திரங்களை முணு முணுத்துக் கொண்டே எழுந்தேன்.

"ஆரியம் தெளிவாகச் சொல்லுகிறீர்களே; அந்தணர் ஒழுக்கமும் போற்றுகிறீரே; நீர் முதலியார்; எப்படி அந்தணர் கலை கற்றீர்?" என்று வினவினர்.

நான் "அந்தண முதலியார்" என்றேன். பிறகு என்னை அந்தணர் என்றும் எனக்குச் சாதி மத வேறுபாடில்லை என்றும் அறிந்து அவர் முன்னினும் மகிழ்ச்சியடைந்தார்.

வள்ளுவர் – மனிதர்

புலவர் மகா நாடு நடந்தபோது அவர் திருச்சியில் முருகன் தமிழகம் என்று தமது மாளிகைக்குப் பெயரிட்டுத் தமிழறிஞரை யெல்லாம் அதில் வரவேற்றுப் போற்றினர். அங்கே எப்போதும் புலவர் கூட்டமும் செவி விருந்தும் இருக்கும். வரலாற்றுப் புலவர் பி. டி. ஸ்ரீநிவாச ஐயங்கார் என் மதிப்பிற்குரிய பெரியார். அவருடன் நான் முருகன் தமிழகம் புகுந்தேன். அங்கே திருக்குறள் ஆராய்ச்சி நடந்தது.

"அவி சொரிந்து ஆயிரம்
வேட்டலின் ஒன்றன்
உயிர் செகுத்து உண்ணாமை நன்று"

என்ற குறளை ஒரு புலவர் அலசிப் பிழிந்து கொண்டிருந்தார். "ஆதலான், இக்குறளாற் போதருவதென்னெனின், திருவள்ளுவர் அந்தணர் அன்று; அவர் சமணரே; அந்தணர்க் குரிய வேள்வியை யுறுத்த தனாலென்க..."

ஒரு சைவப் புலவர் ஆத்திரமாக அவர் மேற் பாய்ந்தார் "வேத வேள்வியை நிந்தனை செய்துழலும் சமணருடனே எமது வள்ளுவரைச் சேர்ப்பீர்; நாம் இதை மறுக்கிறோம். சமணர் இறைவனை ஒப்பார்; வள்ளுவரோ

இருள்சேர் இருவினையுஞ்
சேரா இறைவன்
பொருள் சேர் புகழ் புரிந்தார்
மாட்டு

இருவினை ஒப்பு, மலபரிபாகம் அடைந்து அருளிறைவன் திருவடி சேரலே சைவமுத்தி; அதை வற்புறுத்தியதால் வள்ளுவர் சைவரே."

மற்றொரு புலவர் சைவரிலும் ஆதி சைவர் "ஆதி – மகனாதலின், பகவானை அந்தணன் மகவாதலின்."

இன்னொரு புலவர் பெருங் குரலெடுத்து; "ஒப்போம்! ஒப்போம்– வள்ளுவரைப் பார்ப்பனருக்கிய சூழ்ச்சியை மறுப்போம், ஒறுப்போம் –.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்
மற்றெல்லாம்
தொழுதுண்டு பின் செல்பவர்.

என்ற குறளை ஆயிரந் தடவை படிமின்; வள்ளுவர் வேளாண்மைக்கே முதன்மை தருகிறார். மற்றதை யெல்லாம் பின்னே ஒதுக்கி வேளாளரையே முன்னே வைக்கிறார். அதனால் வள்ளுவர் வேளாளரே. அதிலும் சைவ வேளாளர்.

இதற்குள் என் நண்பர் கோவிந்தசாமி பிள்ளை

அறவாழி அந்தணன் தாள் சேர்ந்
தார்க் கல்லால்
பிறவாழி நீந்தல் அரிது

என்ற குறளை முழக்கி, வள்ளு வர் ஸ்ரீ வைஷ்ணவர் – தென்கலை யார் என்று நாட்டினர். பலர் சீறினர். நண்பர் விடவில்லை. கீதையில் "அர்ஜுனா மூவுலகிலும் எனக்கு அடைய வேண்டிய பொருளும் அடையாத பொரு ளும் இல்லை;" என்கிறான் கண்ண பிரான்.

வள்ளுவரும் "வேண்டுதல் வேண்டாமையிலான்" என்று இறைவனைப் போற்றுகிறார். ஆதலால் இறைவனும் வைணவன், வள்ளுவரும் வைணவர்" என்று ஒரு அடி அடித்தார்.

"இல்லவே யில்லை வள்ளுவர் சரி யான முதலியார் – வள்ளுவர் பகவன் என்ற பார்ப்பானுக்குப் பிறந்த கதை பார்ப்பனச் சூழ்ச்சி கட்டி விட்டது. பார்ப்பனர் உலகிற் சிறந்த மக்களை யெல்லாம் தம் இனத்தவர் என்பது ஒரு சூழ்ச்சி; உலகிற் சிறந்தார். நாம் சைவ வேளாளர் என்றே நாட்டு வோம்; வள்ளுவர் வேளாளர்

தெரிதலும் தேர்ந்து செயலும் ஒரு தலையாச்
சொல்லும் வல்ல தமைச்சு

என்ற குறளை நோக்குமின்! அக் காலப் பாண்டி நாட்டில் முதலியார்களுக்கு அமைச்சுரிமை யுண்டு – ஆரியப்ப முதலியார் எடுத்துக் காட்டு. வள்ளுவர் நெடுமாறன் என்ற பாண்டிய னுக்கு அமைச்சரா யிருந்தார். அப்போதே குறள் எழுதிச் சங் கத்தில் அரங்கேற்றினர்; மன்னன் இறந்த பிறகே அவர் மதுரையை நீத்து திருமயிலைக்கு வந்து மாண வருக்குக் குறள் பாடம் சொன் னார். அவர் மாணவன் ஏலேல சிங்கரும் வேளாள முதலியார். இந்த முதலியாரிடமே அந்த முதலியார் நூல் வாங்கித் தறி நெய்து எளிய முறையில் இல்லறம் நடத்தினர்; மனைவி வாசுகியாரும் வேளாள முதலியார் மகளே; அவள் இயற் பெயர் பாப்ப லம்மா! மனைவி யிறந்த பிறகு வள்ளுவர் துறவறம் பூண்டு

யாதெனின் யாதெனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்

என்ற குறளுக்கு இலக்காக வாழ்ந்தார் – வள்ளுவ முதலியார்" என்று முடித்தார்.

மாணிக்க நாயக்கர் என்னைப் பார்த்து "நமது முதலியார் பக்கம் சீட்டு விழுந்தது" என்றார். இச்சண்டை எனக்குப் பெரிய தலைவலியாயிருந்தது.

"புலவர் மணிகாள், நான் முதலி யாரா ஐயரா என்பது நமது நண்ப ருக்குத் தெரியாது. வள்ளுவர் அந்தணரா, வேளாளரா, சைவரா, வைணவரா என்பதிலும் மறுப்பு கள் உண்டு. வள்ளுவர் மனிதரா இல்லையா? திருக்குறள் மனிதருக் குரியதா இல்லையா" என்று கேட் டேன்.

நல்ல வேளையாக இதில் யாருக் கும் மறுப்பில்லை. வள்ளுவர் மனிதரே; திருக்குறள் மனித சமுதாயத்திற்கே என்று ஒப்பி னர். வள்ளுவருக்குச் சாதி மத மில்லை. அவர் மனித சமுதா யத்தை இரண்டாகப் பிரிக்கிறார்.

அன்பிலார் எல்லாம் தமக்குரியர்; அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு —

அன்பிலார்; அன்புளார் என் பதே அவர் செய்யும் பிரிவு; அன் பில்லார் சுயநலக் கும்பல்; அன்பு ளார் பொது நலப் பண்பர். நீங் கள் எந்தப் பிரிவிற் சேருவீர்கள் – அன்புடையார் பக்கமே. அன் பின் வழியது உயிர் நிலை என்கி றார் வள்ளுவர். வள்ளுவர் இல்ல றத்துறவி. இல்லறத்திற்கு அன் பும் அறமும் இழி கண் என மதிக் கிறார். ஆதலால் வள்ளுவர் உள்

ளம் அன்பு; அன்பிற்குச் சாதி மதமில்லை. நந்தனர், கண்ணப்பர், திருநீலகண்டர், யாழ்ப்பாணர் அப்பர், சம்பந்தர் அனைவரும் ஒரே அன்புக் குலமே — அன்பு வளர சாதிக்குலப் பேச்சே ஒழியும்.''

இவ்வாறு நான் பேசியதை மாணிக்க நாயக்கரும் புலவர்களும் மெச்சினர். இந்தப் பேச்சிலிருந்து கால நிலைக்குச் சிலர் தாவி சாதி வாதத்தில் இறங்கி பார்ப்பானைத் திட்டத் தொடங்கினர். அப்போது திருச்சி நாஷனல் கல்லூரிப் புலவர், மதுரை கோபால கிருஷ்ணையர் அங்கிருந்தார். அவர் சண்டமாருதப் பேச்சாளர் — அவருக்கு மீசை துடித்தது. வசைப் புலவரைச் சிலர் அடக்கி 'பொது இடத்தில் அந்தணர் எதிரேயே — அந்தணரைத் திட்டற்க' என்றார்.

முருகன் தமிழகத்திலிருந்து நாங்கள் திரும்பி வந்து 'கிளைப்ஸ் ஹௌஸில்' (Clives House) தங்கியிருந்த போது வசைப் புலவர் வந்து ஒரு மணி நேரம் வசைப் புராணம் பொழிந்தார். கோவிந்தசாமி பிள்ளை பொறுமை யிழந்தார்.

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று.

என்ற குறளைக் கொண்டு, தூற்றலை அடக்கினர். இந்தக் கதை எதற்காக எடுத்தேனென்றால் தமிழரிடையே படர்ந்த ஒரு வீண் சச்சரவைக்குறிக்கவே.

தமிழர் இச் சச்சரவை ஒழிக்க வேண்டும். புதிய தமிழுலகில் இந்தச் சாதி மத வேறுபாடே இராது. சாதி மதங்களைக் கால வெள்ளம் அள்ளிச் சென்று சுத்த சமரஸக் கடலில் தள்ளிக் கொண்டிருக்கிறது. கால சக்தி ஒரே உலகம்; ஒரே கடவுள்; ஒரே ஆன்மா, ஒரே மனித சமுதாயத்தின் பால் நம்மை நடத்துகிறது. இனி உலகில் சாதி பிராமணனுமில்லை, சாதிப் பறையனுமில்லை. தீண்டாமை ஓடிப்போய் விட்டது. வைதீகம் தட்டுப் பறந்து போனது. வேத வேள்வி செய்யும் பிராமணர் எத்தனை பேர்; சந்தி ஜபமாவது சரியாகத் தெரிந்தோர் எத்தனை. மாமூலுக்குப் பூணூல் மாட்டினால் அந்தணனாவானா? கால வேகம் பூணூலையும் உச்சிக் குடுமையையும் அறுத்தெறிந்தது. இனிப் பிறப்பில் உயர்வு தாழ்வு இராது. சிறப்பான அறிவாற்றலால் சமுதாயத்தில் யாரும் உயரலாம். இப்போது அமுலுக்கு வரும் இந்துச் சட்டம் சாதி பேதத்தைத் தகர்க்கும். நேற்றிருந்த சமுதாய ஊழல்கள் இன்றில்லை; நாளை புதிய சமரஸம் துலங்கும். ஆதலால் தமிழகத்தில் பிறந்தவர் அனைவரும் தமிழரே — சிவன், ராமன், காளியப்பன், காதர் மியான், சாமுவேல், அப்பாண்டை, சாம்பான், சங்கிலி — எல்லாரும் தமிழரே; இந்த ஒருமை யுணர்ச்சியே சமுதாய வளர்ச்சியின் ஆணி வேர்.

சாதி மத வேற்றுமையைப் போக்
குவோம் — சுத்த
சன்மார்க்க ஒற்றுமையை
ஊக்குவோம்
சோதனை செய் இடர்களைத்
தாண்டுவோம் — மனந்
துணிந்த வீரவொளி
தூண்டுவோம்.

என்னருமைத் தமிழர்காள்! நேற்றைய விவகாரத்தை மறந்து விடுங்கள். புதிய வாழ்வு வாழ வாருங்கள்.

புதிய தமிழுலகைத் தோற்று
வோம் — புவி
புகழக் கலைத்திறமை காட்டுவோம்.
முதிய நலங்களெல்லாம் போற்று
வோம் — இன்று
முளைத்த அருஞ்சுவைகள் கூட்டு
வோம்.

நாங்கள்

டி. வி. சுவாமிநாதன்

சொல்லிற்கு அமுதான சந்தங் கூட்டி
சோர்வுற்ற சிந்தைக்கு வாழ்வைக் காட்டி
கல்லிற்கு இறவாத எழிலை ஊட்டிக்
கற்பனையின் கொற்றவராய் ஆள்வோம் ஏட்டை!

நற்கமலத் தாசனத்தின் புனிதச் செல்வி
நாமகள்தன் மலர்க்கரத்தால் கவிதை தந்தாள்;
மற்றவர்கள் யாருமிங்கே பெற்றில் லாத
மாண்புடைய ஒருகலையின் உற்பவத்தால்

விண்ணுலகும் மண்ணுலகும் ஒன்றோடொன்று
வியன்மேகத் தடிவானில் தொட்டுத் தழுவ
பெண்ணரசி பூமியுறும் வெட்கச் சிவப்பைப்
பெருவானில் கண்டிடுவோம் கவிஞர் நாங்கள்.

அற்பமெனத் தான்மற்றோர் கருத்திற் கொள்ளும்
அர்த்தமற்ற சொற்களையே அடுக்கிக்கட்டி
அற்புதமென் றுலகோர்கள் அதிசயிக்குமாறே
அரும்பொருள்கள் பலதோன்ற அமைத்துத்
தருவோம்!

மதியத்தின் பால்நிலவில் மையல் மிஞ்ச
மணல்மீது நதிக்கரையில் காற்றின் காதில்
ரதிமங்கை போல்மயக்கும் ஒருகன்னி மீது
ராவெல்லாம் கவிபாடிக் காதல் செய்வோம்!

புதுரத்தம் 'குபுகுபு'த்துப் பொங்கித் துள்ள
போராட்டத் தணற்கங்கில் குதித்துச்சென்று
எதிருற்ற பலஇன்னல் மிதித்துத் தள்ளும்
எழுச்சிக்குப் பலபாடல் இயற்றிக் கொடுப்போம்!

உழவர்கள் உரிமைக்குப் படைதிரட்டி
உலகத்தின் எழிலுக்குப் பாட்டெழுதி
தொழிலுக்கும் திறமைக்கும் தோள் உயர்த்தி
தூய்மைக்கும் வாய்மைக்கும் கொடி விரிப்போம்!

புலமைக்குப் புதிதான எளிமை கூட்டிப்
புரட்சிக்கு விதைதூவ ஏர்நடத்தி
நிலைதன்னை உணராது துயில்கின்றோரை
நெருப்பான சொற்களினால் உந்தித் தள்வோம்.

மனமென்னும் ஒருமோகப் பெண்ணின் பிடியில்
மாறான பலவேறு சுழலிற்சிக்கி
தினந்தோறும் உழல்கின்ற அல்லல் பலவும்
தீட்டாத ஒருபடத்தால் விளக்கிக் காட்டி

சினமென்னும் பலவான களைகள் கொத்தி
சிந்தைக்குச் செழிப்பேற்ற எருக்கள் போட்டு
கனவென்னும் நிழலாட்ட வலையில் மீண்டு
கலையாத மோனத்தின் ஆழத்தில் உறைவோம்!

புலர்கின்ற குறியாக விடிவெள்ளி முளைக்கும்
பொழுதுக்கு இரவெல்லாம் தவம்நின்று முடிவில்
அலர்கின்ற கமலத்தின் மங்கை உள்ளம்
அடைகின்ற விம்மிதத்தை அறிவோம் நாங்கள்.

மறைகின்ற மாணிக்கச் செம்பருதி வட்டம்
மயக்கத்தைக் கொட்டுகின்ற மாங்குயிலின் இனிமை
இறைவன் படைத்திட்ட ஒவ்வோர் அணுக்கள்
இவையாவும் கொண்டிங்கு ஜாலங்கள் புரிவோம்!

மேகத்தின் கப்பல்கள் வானக்கடலில்
மெள்ளத் தொடுவானின் துறைவாயில் நோக்கிப்
போகின்ற பாதையில் செக்கர் பூக்கும்
பொன்னெளிக் கோலமும் எங்கள் கைக்கோடு!!

இரவிற்கு வானத்தில் குழைத்துப்பூச
இதயத்தில் இழைகின்ற இருளைக் கவ்விச்
சரவிளக்குப் போல்மிளிரும் மின்னற் றுகளின்
சலியாத துயில்விழிப்பு சந்தம் சிந்தும்.

உலகத்தில் ஒருஜாதி கவிஞர் நாங்கள்!
உள்ளத்தில் ஊடாடும் உணர்வின் குரலால்
உலகத்தின் வழிச்சுவடைக் கணித்துக் கூறும்
உயர்வற்ற ஒப்பற்ற அமரர் குலத்தோர்!!!

ஸ்ரீகாந்தன்

ஆசிரியர்:
சரத்சந்திரசட்டர்ஜி

மொழிபெயர்ப்பு:
ஆர்.ஷண்முகசுந்தரம்

மிச்சப் படுத்திப் படித்தும் அந்த அந்நியக் கல்வி அவரைத் தேற விடவில்லை. இதைத்தான் விதியின் விளையாட்டு என்பது.

அன்று இரவும் வெளியில் கனத்த இருள் பரவியிருந்தது. வெளியில் அந்த மூன்று கிழவர்களும், உள்ளே நாங்கள் நால்வரும் சிரத்தையுடன் படித்துக் கொண்டிருந்தோம்.

சின்ன அண்ணா திரும்பி வந்ததும் எனக்குத் தாகம் எடுத்தது. நான் டிக்கட்டை அவர் முன் வைத்து அனுமதியை எதிர் பார்த்துக் கொண்டிருந்தேன். நடு அண்ணா ரிஜிஸ்டரை எடுத்து முன்னால் வைத்துக் கொண்டு நேற்று எந்நேரத்தில் நான் தண்ணீர் குடிக்கப் போனேன் என்பதை ஆராய்ந்து கொண்டிருந்தார்.

திடீரென எனக்குப் பின்னாலிருந்து 'ஐயோ!' என்ற கூச்சலும் அதைத் தொடர்ந்து 'செத்தேன்' என்ற கூக்குரலும் எழுந்தது. யார் செத்தது என்று திரும்பிப் பார்ப்பதற்குள் நடு அண்ணா ஓடி வந்து தீபத்தை அணைத்துவிட்டார். இருளில் ஒன்றுமே தெரியவில்லை.

நடு அண்ணாவிற்கு ஏற்கனவே வலிப்பு நோய் உண்டு. ஆகையால் அவர் 'ஓ! ஓ!' என்று கீழே மயங்கி விழுந்து விட்டார்.

தடுமாறிக் கொண்டு வெளியில் வந்தேன். அத்தை தனது இரு குழந்தைகளையும் அணைத்துக் கொண்டு தொண்டை கிழியக் கத்திக் கொண்டிருந்தாள். அம்மூவரும் ஒருவர்க்கொருவர் குறையாமல் சத்தமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

இந்தச் சமயத்தில் ஒரு திருடன் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தான். வேலைக்காரன் அவனைப் பிடித்துக் கொண்டான். அத்தை தொண்டை கிழியச் சத்தமிட்டு, "அடி, படிவாவை நல்லா உதை" என்று உத்திரவிட்டுக் கொண்டிருந்தாள்.

நொடிப் பொழுதில் விளக்கு வந்து விட்டது. வேலைக்காரர்களும், அண்டை அயலார்களும் கூடி விட்டார்கள். இதற்குள் வேலைக்காரன் திருடனைப் புடைத்து விளக்கு வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து தள்ளினான்.

ஆனல் திருடன் முகத்தைப் பார்த்ததும் அனைவரும் திடுக்கிட்டார்கள். அட, கடவுளே இவர் பட்டாசார்ய மகாஷயரல்லவா!

அவசரமாக ஒருவர் ஓடி தண்ணீர் கொண்டு வந்தார். இன்னொருவர் விசிறி வீசினர். உள்ளே நடு அண்ணவிற்கும் இந்த உபசாரங்கள் நடந்து கொண்டிருந்தன.

தண்ணீர் குடித்து தெம்பு வந்த பிறகு அவர் அனைவரையும் பார்த்து விக்கி விக்கி அழத் தொடங்கினர். எல்லோரும், "நீங்கள் ஏன் இவ்வளவு வேகமாக ஓடினீர்கள்?" என்று கேட்டார்கள். பட்டாச்சார்யா அழுது கொண்டே, "அப்பா அது புலி அல்ல, ஒரு கரடி. கூண்டிலிருந்து ஓடி வந்திருக்கிறது" என்ருர்.

சின்னண்ணவும் ஜதீனும் ஒரே மூச்சில், "அது கரடி அல்ல. ஓநாயாக்கும். திண்ணை மீது உட்கார்ந்து கொண்டிருக்கிறது" என்ருர்கள்.

நடு அண்ண மூர்ச்சை தெளிந்து எழுந்து உட்கார்ந்து கொண்டு, "திராயல் பெங்கால் டைகர்" என்று சொன்னர்.

ஆனல் எங்கே இருக்கிறது? நடு அண்ணவின் திராயல் பெங்கால் டைகராய் இருந்தாலும் சரி அல்லது ராம்கமல் கூறிய கிழட்டுக் கரடியாயிருந்தாலும் சரி, அது இங்கே எப்படி வந்தது? அது இங்கிருந்து எவ்விதம் போயிற்று, இத்தனை பேர் பார்த்தோமென்று கூறும் பொழுது ஏதோ ஒன்று அவசியம் இருந்திருக்க வேண்டும் அல்லவா?

சிலர் நம்பினர்கள்; சிலர் நம்பவில்லை. இருந்தாலும் அனைவரும் பயத்துடன் கையில் விளக்கை எடுத்துக் கொண்டு நாலு புறத்திலும் தேடத் தொடங்கினர்கள்.

திடீரென பயில்வான் கிசோரிசிங் 'அது உட்கார்ந்து கொண்டிருக்கிறது' என்று கூறிக் கொண்டு ஒரே தாவில் திண்ணை மீது ஏறிக் கொண்டான். அதற்கப்புறம் அங்கே ஒரே குழப்பம். அனைவரும் ஓடி வந்து திண்ணை மீது ஏறிக் கொண்டார்கள். வாசலில் ஒரு புறத்தில் மாதுளை மரங்கள் இருந்தன. அம்மரக் கிளைகளுக்கிடையில் ஒரு மிருகம் உட்கார்ந்து கொண்டிருப்பது தெரிந்தது. அது புலி மாதிரி தான் இருந்தது. கண நேரத்திற்குள் திண்ணையில் இருந்த அனைவரும் வீட்டுக்குள் ஓடி வந்து விட்டார்கள். அக் கூட்டத்தில் அத்தை மட்டிலும், "கத்தி எடு, துப்பாக்கி எடு," என்று கூறிக் கொண்டு இருந்தாள். எங்கள் பக்கத்து வீட்டு ககனபாபுவிடம் ஒரு பழைய துப்பாக்கி இருந்தது. அந்த ஆயுதத்தை மனதில் நினைத்துக் கொண்டு தான் அத்தை கூறிக் கொண்டு இருந்தாள்.

ஆனல் யார் கொண்டு வருவது? கதவுக்குப் பக்கத்தில் தான் மாதுளை மரம் இருக்கிறது. அதன் மேல் ஓநாய் உட்கார்ந்து கொண்டு இருக்கிறது. ஒருவரும் இடத்தை விட்டு அசையவில்லை.

இந்த ஆபத்து வேளையில் தான் இந்திரன் எங்கிருந்தோ வந்து சேர்ந்தான். வீதியில் சென்று கொண்டிருந்தவன் இந்தச் சத்தத்தைகேட்டு உள்ளே நுழைந்தான். உடனே அனைவரும் "அடடே, புலி, புலி, ஓடு ஓடு," என்று சத்தமிட்டனர்.

முதலில் அவன் வேகமாக உள்ளே வந்தான். பிறகு விஷயத்தைக் கேட்டு விட்டு விளக்கை எடுத்துக் கொண்டு வெளியில் வந்து பார்த்தான். வீட்டுக்குள்ளிருந்து சன்னல் வழியாக எட்டிப் பார்த்துக் கொண்டிருந்த பெண்கள் தெய்வத்தை வேண்டிக்

கொண்டார்கள். கூட்டத்திலிருந்த இந்துஸ்தானி வேலைக்காரன் "கையில் ஏதாவது ஆயுதம் இருந்தால் நான் கூடப்போய்ப் பார்ப்பேன்" என்று கூறிக் கொண்டான்.

இந்திரன் நன்கு பார்த்து விட்டு, "துவாரகா பாபு, இது புலி அல்லப் போல இருக்கிறதே" என்று கூறினான். அவன் கூறி முடிப்பதற்குள், "ராயல் பெங்கால் டைகர்" கையை எடுத்துக் கும்பிட்டுக் கொண்டு மனிதக் குரலில் அழுது கொண்டு, "இல்லை பாபுஜி நான் புலியும் அல்ல கரடியும் அல்ல. பல் வேஷக்காரன்" என்றது.

இந்திரன் கலகலவென்று சிரித்தான். பட்டாச்சாரியார் முன்னால் ஓடி வந்து, "திருட்டுப் பட்வா பயப்படுத்துவதற்குவேறு இடம் இல்லையா?" என்றார். அத்தை மிகுந்த கோபத்துடன், "பயலை காதைப் பிடித்திழுத்துக் கொண்டுவா" என்று உத்தரவிட்டாள்.

கிஷோரி சிங் தான் அவனை முதல் முதலாகப் பார்த்தார். ஆகையால் அனைவரையும் விட அவருக்குத் தான் பொறுப் பேற்பட்டது. அவர் சென்று காதைப் பிடித்து இழுத்துக் கொண்டு வந்தார். பாட்டாச்சார்யா அவன் முதுகில் நன்கு குத்தினார். கோபத்தில் அடித்துக் கொண்டு, "இந்தப் படுபாவியினால் என் முதுகெலும்பெல்லாம் ஒடிந்தது."

இந்த ஸ்ரீநாத் மேற்குப் பிரதேசத்தைச் சேர்ந்தவன். பிரதி வருஷமும் ஒரு தடவை இந்தத் தொழில் புரிவதற்காக இங்கு வருவான். நேற்றுக்கூட இதே வீட்டிற்கு நாரதர் வேஷம் போட்டுப் பாடிக்கொண்டு வந்திருக்கிறான். அவன் பட்டாசார்யா காலையும், அத்தை காலையும் பிடித்துக் கொண்டான். "பையன்கள் உண்மையிலேயே பயந்து கொண்டு என்னையும் கலவரப் படுத்தி விட்டார்கள். நான் அந்த மரத்தில் சென்று ஒளிந்துகொண்டேன். அமைதி ஏற்பட்ட பிறகு வெளியில் வந்து என் சுயரூபத்தைக் காண்பித்து விட்டுப் போகலாம் என்று இருந்தேன். ஆனால் பின்னால் நடந்த சம்பங்களால் நான் வெளியிலேயே வர முடியாமல் போய் விட்டது" என்று அழுது கொண்டு கூறினான்.

ஸ்ரீநாத் கெஞ்சிக் கூத்தாடினான். ஆனால் அத்தை மட்டும் மனமிளகவில்லை. "ஏதோ நல்ல காலம் இருக்கத்தான் உண்மையிலேயே புலி, கரடி வரவில்லை. அப்படி வந்திருந்தால் இந்த வேலைக்காரனை நம்பி என்ன செய்வது? ஒரு சிறு பிள்ளைக்கு இருக்கும் தைரியம் இத்தனை பெரிய ஆண்களுக்கு இல்லையே!" என்று கூறினாள். அத்தை அதற்குமேல் ஒன்றும் கூறவில்லை. அங்கிருந்தவர்கள் யாரும் இந்தக் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்க வில்லை. பெண் பிள்ளையிடம் எதற்கு விவாதம் செய்யவேண்டும் என்று பேசாமலிருந்துகொண்டார்கள் போலும்.

"சரி, அவன் வேஷத்தைக் கலையுங்கள்" என்றார்கள். அவனுடைய சாமானங்களைப் பிடுங்கிக் கொண்டு துரத்தி விட்டார்கள்.

இந்திரன் என்னைப் பார்த்து "நீ இங்குதானிருக்கிறாயா, ஸ்ரீகாந்தா?" என்று கேட்டான்.

"ஆமாம் நீ இரவு இந்நேரத்தில் எங்கு போகிறாய்?" என்றேன்.

இந்திரன் சிரித்துக் கொண்டு "இரவு எங்கடா வந்தது? இப்போதுதானே பொழுது மறைந்தது! நான் படகில் போய் மீன் பிடிக்கப் போகிறேன்" என்றான்.

நான் பயத்துடன் "இந்த இருளில் படகில் போவாயா?" என்றேன்.

அவன் மறுபடியும் சிரித்தான் "இதில் பயமென்னடா! இதில் தான் இன்பம் இருக்கிறது. இருட்டு என்று பார்த்தால் மீன் கிடைக்குமா? உனக்கு நீந்தத் தெரியுமா?"

"தெரியும்"

"அப்படியானல் நீயும் வாப்பா" என்று கூறி என் கையைப் பிடித்துக் கொண்டான். "நான் இதுவரையிலும் அந்தப் பக்கம் தனியாகப் போனதில்லே. துணைக்கு ஒரு ஆள் பார்த்துக் கொண்டிருந்தேன்" என்ருன்.

நான் வேறு ஒன்றும் பேசவில்லே. அவன் கையைப் பிடித்துக் கொண்டு தெருவிற்கு வந்து விட்டேன். அந்த இரவு படகில் போகப் போகிறேம் என்று முதலில் என்னல் நம்பவே முடியவில்லே. நான் எந்த சக்தியால் உந்தப்பட்டு வீட்டுக் கட்டுத் திட்டங்களே எல்லாம் பொருட் படுத்தாது வெளியில் வந்தேன் என்று அப்போது நினேத்துக்கூடப் பார்க்க முடியாது. சிறிது நேரத்திற்குள் அந்தப் பயங்கர கோசாள தோப்பிற்கெதிரில் வந்து விட்டோம். இந்திரனுக்குப் பின் கனவில் நடப்பவனேப் போல் நடந்து தோப்பைக் கடந்து கங்கைக் கரையையும் அடைந்து விட்டோம்.

தலேக்குமேல் ஒரு பெரிய ஆல மரம் இருளில் நின்று கொண்டிருந்தது. எதிரில் மேலும்கீழும் அலேகள் புரள நதி வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. இந்திரனுடைய படகு அங்குதான் கட்டப்பட்டிருந்தது. மேலிருந்து பார்ப்பதற்கு ஒருவாழைப் பூ நீரில் மூழ்கி எழுவது போலிருந்தது.

நான் இயற்கையில் பயந்த சுபாவமுடையவனல்ல. ஆனல் இந்திரன் மேலிருந்து தொங்கும் ஒரு கயிறைச் சுட்டிக் காட்டிக் கொண்டு "ஜாக்கிரதையாக இறங்க வேண்டும். நழுவினயானல் தேடிக்கூட கண்டுபிடிக்க முடியாது" என்று சொல்லும் போது என் நெஞ்சு படபடவென அடித்தது.

"சரி, நான் கயிற்றைப் பிடித்து இறங்கிக் கொள்கிறேன். நீ என்ன செய்வாய்?"

"நீ கீழே இறங்கியதும் நான் கயிற்றை அவிழ்த்து விட்டு கீழே இறங்குவேன். நான் கீழே இறங்குவதற்கு எத்தனேயோ விழுதுகளிருக்கின்றன!"

நான் வேறு ஒன்றும் பேசாமல் கயிற்றைப் பிடித்துக் கீழிறங்கி படகில் உட்கார்ந்து கொண்டேன். அதன் பிறகு அவன் கயிற்றை அவிழ்த்து விட்டு விட்டான். அவன் எப்படிக் கீழிறங்கினன் என்று இன்றும் எனக்குத் தெரியாது. பயத்தால் அவனேக் கூட என்னல் பார்க்க முடியவில்லே. இரண்டு மூன்று நிமிஷங்களுக்கப்புறம் நீரின் சப்தத்தைத் தவிர வேறு ஒன்றும் கேட்கவில்லே. திடீரென சிரிப்புச் சத்தத்தைக் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். இந்திரன் வேகமாக படகு தள்ளிக் கொண்டிருந்தான். படகும் மிகுந்த வேகத்தில் போய்க் கொண்டிருந்தது.

2

சிறிது நேரத்தில் நாற்புரத்திலும் இருள் சூழ்ந்து கொண்டது. இரு புறங்களிலும் ஜலப் பெருக்கம். அவற்றின் மீது வேகமாகச் செல்லும் படகில் இரண்டு சிறுவர்கள்? இயற்கை அன்னேயின் கம்பீரத் தோற்றத்தைக் கண்டு களிக்கும் வயதல்லத்தான். ஆனலும் அதை இன்றும் என்னல் மறக்க முடியவில்லே. அவளுடைய கருங் கூந்தல் ஆகாயத்தையும் பூமியையும் மறைத்திருந்தது. அந்த இருளேக் கிழித்துக் கொண்டு செல்லும்

ஒளி ரேகை போல நதி வேகமாக ஓடிக் கொண்டிருந்தது. சில இடங்களில் நெளிந்தும் வளைந்தும் வேகமாகவும் மெதுவாகவும் தன் போக்கில் போய்க் கொண்டிருந்தது.

எங்கள் படகு ஒரு கோடியிலிருந்து இன்னொரு கோடிக்குப் போவது தான் தெரிந்தது. ஆனால் அந்தக் கோடியில் எந்தப் பக்கத்திற்கு போவதிற்காக துடுப்பைக் கையில் பிடித்து இருளில் மௌனமாக உட்கார்ந்து கொண்டிருக்கிறான் என்பது எனக்குத் தெரியாது. இந்தச் சிறு வயதிலேயே அவன் எவ்வளவு பெரிய மாலுமி ஆகி விட்டான் என்பதை என்னால் ஊகிக்கக் கூட முடியாது.

திடீரென அவன், "ஏண்டா ஸ்ரீகாந்தா! உனக்குப் பயமாக இருக்கிறதா?" என்று கேட்டான்.

"இல்லை."

இந்திரன் உற்சாகத்துடன், "அப்படித் தானிருக்க வேண்டும். நீந்தத் தெரிந்திருந்தால் எதற்காகப் பயப்பட வேண்டும்?" என்றான். நான் ஒன்றும் பதில் அளிக்கவில்லை. இந்த இருண்ட இருளிலே, ஜன சந்தடியற்ற ஆற்றுப் பெருக்கிலே நீந்தத் தெரிந்தால் தான் என்ன? தெரியாவிட்டால் தான் என்ன? அவனும் மறுபடி ஒன்றும் பேசவில்லை. இப்படியே சிறிது தூரம் சென்றபிறகு எங்கிருந்தோ லேசாக சத்தம் கேட்டது. கொஞ்சம் கொஞ்சமாக சத்தம் பலமாகக் கேட்டது. இடையிடையே 'குப் குப்' என்ற ஒலியும் கேட்டது.

"இந்திரா இது என்ன சத்தம்?" என்று கேட்டேன்.

"வெள்ளம் அந்தப் பக்கத்தில் அடித்து மோதிக் கொண்டு விழுகிறது. அந்த சத்தம் தான்" என்றான்.

"அப்பா! எவ்வளவு பயங்கரமான வெள்ளம்!"

"ரொம்ப பயங்கரமான வெள்ளம் தான். நேற்று மழையும் பெய்திருக்கிறது. அதனுடைய பலன் இல்லாமல் போகுமா? எங்காவது கரை உடைப்பு எடுத்துக் கொண்டால் படகும் நாமும் போன இடம் தெரியாமல் போய் விடுவோம். உனக்குப் படகு தள்ளத் தெரியுமா?"

"தெரியும்."

"சரி, நீ படகு தள்ளு."

நான் படகு தள்ளத் தொடங்கினேன். இந்திரன், "அங்கே பார், இடப் புறத்தில் கறுப்பாகத் தெரிகிறதே, அவைகளெல்லாம் திட்டுகள். அதற்கு நடுவில் ஒரு மதகு இருக்கிறது. அதற்குள் புகுந்து போக வேண்டும். ரொம்ப மெதுவாகப் போக வேண்டும். கொஞ்சம் தவறினாலும் நாமும் இந்தச் சேற்றில் அமுந்த வேண்டியது தான்" என்றான்.

என்னடா இது! நான் பயத்துடன், "அப்படியானால் அந்த மதகு வழியாகப் போகாமல் விட்டு விடலாமே?" என்றேன்.

இந்திரன் சிரித்துக் கொண்டு, "வேறு வழியில்லையே. அதற்குள் புகுந்து தான் போக வேண்டும். வரும் போது வர முடியும். ஆனால் போக முடியாது" என்றான்.

"அப்படியானால் மீன் பிடிக்க வேண்டியதில்லையப்பா" என்று கூறித் துடுப்பை நீரிலிருந்து மேலே எடுத்துக் கொண்டேன். ஒருகணத்திற்குள் படகு திரும்பிப் போகத் தொடங்கியது. இந்திரன் துடுப்பைப் பிடுங்கிக் கொண்டான். "பின் ஏண்டா வந்தாய்? சரி, வா. உன்னைக் கொண்டு விட்டு வருகிறேன் சுத்தப்பேடி" என்றான்.

நான் பேடியா? மறுபடியும் துடுப்பை வாங்கி தள்ளத் தொடங்கினேன். இந்திரன் சந்தோஷமடைந்து, "அது தான் சரி. அடே, மெதுவாகப் போ. பயல்கள் பெரிய திருடர்கள். அந்தப் பயல்களுக்குத் தெரியாமல் நான் அந்த வயலுக்குள் புகுந்து போவேன். சரி, தெரிந்தால் தான் என்ன செய்து விடுவார்கள்? சுலபத்திலே பிடித்து விடுவார்களா? என்னடா ஸ்ரீகாந்த் அவர்களிடம் நான்கு படகுதானிருக்கிறது. நம்மால் தப்பிப் போக முடியாவிட்டால் தண்ணீரில் குதித்து ரொம்ப தூரம் போய் மேல் வருகிறது. அவ்வளவு தான். இந்த இருட்டில் கண்டு பிடித்து விட முடியாது. அப்புறம் சூர்யோதயத்திற்கு கங்கைக் கரைஓரமாக நடந்து வீடுபோய்ச் சேர்ந்தால் போகிறது. பிறகு இந்தப் பயல்கள் நம்மை என்ன செய்து விடுவார்கள்?" என்றான்.

அந்த இடம் எனக்குத் தெரியும். "அது ரொம்ப தூரமாச்சே அதை எப்படி நீந்திக் கடப்பது?" என்றேன்.

"என்னடா ரொம்ப தூரம்? ஆறு, ஏழு மைல் இருக்கும். நீந்திக் களைப்படைந்தால் கொஞ்சம் இளைப்பாறிக் கொள்வது. பிணம் சுடுவதற்கு உபயோகித்த கட்டைகள் ஏராளமாகக் கிடைக்கும்."

பிராணனைக் காப்பாற்றிக் கொள்வதற்கான வழிகளையும் சொல்லி விட்டான். இனி அதைப் பற்றி வாதம் செய்வதில் பிரயோசனமில்லை. திக்குத் தெரியாத அந்த இருளில் அடிக்கு அடி ஆபத்து நிறைந்த அந்த ஆற்று வெள்ளத்தில் ஆறு, ஏழு மைல் நீந்திக் கரை ஏறுவதா! விடிவதற்கு முன் இந்தப் பக்கத்திலிருந்து எவ்விதமும் கரை ஏற முடியாது.

இவைகளை எல்லாம் நினைக்க நினைக்க என் மனம் நடுங்கியது. சிறிது நேரம் துடுப்புத் தள்ளி விட்டு, "ஆனால் நம் படகு என்னவது?" என்றேன்.

"அன்றும் இப்படித்தான் நான் தப்பி ஓடி வந்து விட்டேன். மறு நாள் வந்து தான் படகை எடுத்துக் கொண்டு போனேன்." என்றான் இந்திரன்.

இவைகள் எல்லாம் அவனுடைய கற்பனைகள் அல்ல; அனுபவ உண்மைகள்! நாங்கள் மீன் பிடிக்க குறிப்பிட்ட இடத்திற்கு வந்து சேர்ந்தோம். எதிரில் செம்படவர்கள் தூரத்தில் மீன் பிடிப்பது தெரிந்தது. அவர்கள் படகில் கட்டியிருந்த விளக்குகள் மினுக் மினுக்கென எரிந்து கொண்டிருந்தன. மதகில் நீர் நிறைந்திருக்கும் போது இங்கு வலை வீசி மீன் பிடிப்பதும் உண்டு.

பத்துப் பதினைந்து மீன்களை கண நேரத்தில் பிடித்து படகில் வைத்தான் இந்திரன். அந்தச் சின்னஞ் சிறிய படகில் அவைகள் வீணாகத் துள்ளிக் குதித்தன.

"இத்தனை மீன்களை என்ன பண்ணுவது?" என்றேன் நான்.

"தேவையிருக்கிறது. சரி, வா நாம் ஓடிப் போய் விடலாம்" என்று கூறி வலையைச் சுருட்டி விட்டான். அப்புறம் படகு தள்ள வேண்டியே இருக்கவில்லை. நான் பேசாமல் உட்கார்ந்து கொண்டேன். ஆனால் ஒளிந்து கொண்டு தான் அங்கிருந்து வர வேண்டி இருந்தது. இரண்டொரு நிமிஷத்தில் எங்கள் படகு சிறிது தயங்கி பக்கத்து நெல் வயலுக்குள் பிரவேசித்தது. நான் திடுக்கிட்டு, "ஏன்? என்ன விஷயம்?" என்றேன்.

இந்திரன் மீண்டும் வேகமாக ஒரு தள்ளுத் தள்ளி விட்டு,

"பேசாதே, பயல்கள் கண்டு கொண்டார்கள். நாலு படகும் வருகிறது. அதோ பார்" என்ருன்.

இந்திரன் கூறியது உண்மை தான். நீரைப் பிளந்து கொண்டு மூன்று படகுகள் வேகமாக எங்களை நோக்கி வந்து கொண்டிருந்தது. அந்தப் பக்கம் வலை போட்டுவழி அடைபட்டிருந்தது. இந்தப் பக்கத்திலிருந்து அவர்கள் வந்து கொண்டிருந்தார்கள். தப்பித்துக் கொண்டு ஓடுவதற்கும் நேரமில்லை. இந்த வயலுக்குள் தான் ஒளிந்து கொள்ள முடியும். அதும் எனக்குச் சாத்தியமாகப் படவில்லை.

"என்ன ஆகுமப்பா?" என்று கேட்பதற்குள் என் குரல் பயத்தால் நடுங்கியது. இந்த இருளில், இந்தச்சூழலில் எங்களைக் கொன்று விட்டால் கூட கொன்று விடலாம்!

இத்தனை நாளும் இந்திரன் மிகுந்த சாமர்த்தியமாக இந்தத் திருட்டு வேலை செய்து வந்திருக்கிருன். ஆனல் இன்று!

"ஒன்றும் பயப்பட வேண்டியதில்லை" என்று அவன் சொன்ஞன். ஆனலும் அவன் குரல் நடுங்கியது. ஆனல் வார்த்தைகள் தடை படவில்லை. எங்களைச் சுற்றிலும் நெற் பயிர்களும் கமுகு மரங்களும் சூழ்ந்திருந்தன. அங்கும் மார்பளவு தண்ணீர் இருந்தது. சில இடங்களில் இடுப்பளவும், முழங்காலளவும் இருந்தன. ஆகாயத்தில் கும்மிருட்டு. சுற்றிலும் வனந்திரம். பின்னலிருந்து செம்படவர்களின் பேச்சுச் சப்தம் கேட்டது. அவர்கள் சந்தேகப்பட்டுத் தான் வந்து தேடிக் கொண்டிருக்கிருர்கள் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

திடீரென படகு ஒரு இடத்தில் கவிழப் போய் நிலைக்கு வந்தது. கண்ணைத் திறந்து பார்த்தேன். படகில் நான் ஒருவன் தான் இருந்தேன். நான் பயத்துடன் "இந்திரா!" என்றேன்.

நாலைந்து கஜத்திற்கப்பால் காட்டிற்குள்ளிருந்து, "நான் கீழே இருக்கிறேன்" என்று சத்தம் வந்தது!

"ஏன் கீழிறங்கி விட்டாய்?"

"படகை இழுத்துக் கொண்டு போக வேண்டும். என் இடுப்பில் கயிறு இருக்கிறது."

"எங்கே இழுத்துக் கொண்டு போகிருய்?"

"கொஞ்ச தூரம் போனல் பெரிய நதிக்கு வந்து விடுவோம்."

நான் மறுபடி ஒன்றும் பேசவில்லை. படகும் போய்க் கொண்டிருந்தது. திடீரென காட்டிற்குள் காற்றில் மூங்கில் ஆடும் சத்தத்தைக் கேட்டு பயந்து கொள்வேன். நான் இந்திரனிடம், "அது என்ன?" என்றேன்.

"குடியானவர்கள் பரண் மீது உட்கார்ந்து கொண்டு காட்டுப் பன்றியை விரட்டிக் கொண்டிருக்கிருர்கள்."

"காட்டுப் பன்றியா? அது எங்கே இருக்கிறது?"

இந்திரன் அலட்சியமாக, "அது முன்னல் நிற்கிறதா காட்டுவதற்கு? இங்கு எங்காவது இருக்கும்" என்ருன்.

இந்தப் பதிலைக் கேட்டு நான் பேசாமலிருந்து கொண்டேன். இன்று யார் முகத்தில் விழித்தோமோ என்று நினைத்துக் கொண்டேன். சாயங்காலம் வீட்டில் புலியிடம் அகப்பட்டுக் கொண்டோம். இப்போது காட்டில் பன்றியிடம் அகப்பட்டுக் கொண்டால் தான் இதில் ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது?

நானே படகில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன். அவனே மார்பளவு சேற்று நீரில் படகு இழுத்துக் கொண்டிருக்கிறன். ஒரு பதினைந்து நிமிஷம் இவ்விதம் கழிந்திருக்கும். பக்கத்திலிருக்கும் பயிர்கள் அடிக்கடி சாய்ந்து கொண்டிருந்தன. ஒரு தடவை என் கைக்குப் பக்கத்திலேயே ஏதோ ஒன்று உராய்ந்து கொண்டு போவது போலிருந்தது. "இது என்ன? ஏதாவது குட்டிப் பன்றியா?" என்று கேட்டேன்.

"அது ஒன்றும் இல்லை. பாம்பு சுற்றிக் கொண்டிருந்திருக்கும். சத்தத்தைக் கேட்டுத் தண்ணீரில் குதித்திருக்கும்" என்றான்.

"ஒன்றுமில்லை — பாம்பு!" நான் நடுங்கிக் கொண்டே நடுப் படகில் தள்ளி உட்கார்ந்து கொண்டேன். பிறகு மெதுவாக "அது என்ன பாம்பு?" என்றேன்.

"எல்லாம் தண்ணீர்ப் பாம்புகள். நீரில் நீந்திக் கொண்டு வந்து செடிகளில் சுற்றிக் கொண்டிருக்கும். காய்ந்த நிலமே எங்கும் கிடையாது, பாரு" என்றான்.

"அது தான் தெரிகிறதே" என்றேன் பயத்தால் ரோமங்கள் சிலிர்த்தன. ஆனால் அவன் ஒன்றையும் கவனிக்காமல் தன் காரியத்தைக் கவனித்துக் கொண்டு, "ஆனால் இவைகள் கடிக்காது. பயந்து கொண்டு ஓடிப் போகும். என் மீது இரண்டு மூன்று உராய்ந்து கொண்டு ஓடிற்று. ஒன்று ரொம்பப் பெரியது. அப்படித் தான் ஒரு வேளை கடித்து விட்டால் தான் என்ன செய்வது? ஒரு நாளைக்குச் சாகத்தானே போகிறோம்?" என்றான். இவ்விதம் இன்னும் என்னவெல்லாமோ பேசிக் கொண்டு வந்தான். ஆனால் அவைகள் ஒன்றும் என் காதில் விழவில்லை. நான் உயிரற்ற சவம் போல அசையாது உட்கார்ந்து கொண்டிருந்தேன் எங்காவது படகிற்குள் குதித்து விடுமோ என்று மூச்சு விடக் கூடப் பயந்து கொண்டிருந்தேன்.

இந்திரன் — அவன் யார் மனிதனா, கடவுளா, பேயா, பிசாசா? யாருடன் நான் இந்த காட்டிற்குள் திரிந்து கொண்டிருக்கிறேன்? அவன் மனிதனாக இருந்தால் பயமென்ற ஒரு வஸ்து இந்த உலகத்தில் இருக்கிறதென்பது அவனுக்குத் தெரியாதா? அவன் மனம் கல்லா? அவன் நம்மைப் போல் சுவாசிப்பதில்லையா? அன்று விளையாட்டு மைதானத்தில் எல்லோரும் ஓடிய பிறகும் எதிரிகளுக்கு மத்தியில் என்னைக் காப்பாற்ற ஓடி வந்தானே அந்த இரக்க உணர்ச்சியும் இந்தக் கல் மனதிற்குள் தான் மறைந்திருந்ததா? இன்று ஆபத்தைப் பூர்ணமாக உணர்ந்தும் தைரியமாக மரண வாயிலில் நிற்கிறானே! 'ஸ்ரீகாந்தா நீ கீழே இறங்கி வா' என்று ஒரு தடவை கூடச் சொல்லவில்லை. அவன் என்னைக் கட்டாயப் படுத்தி படகு இழுக்கச் சொல்லலாம். இது விளையாட்டல்ல. உயிருக்குப் போராடும் இந்தச் சமயத்தில் இந்த வயதில் எத்தனை பேர் இவ்விதம் சுய நலத் தியாகம் செய்திருக்கிறார்கள்? எவ்வித ஆடம்பரமுமின்றி 'ஒரு நாளைக்குச் சாகத் தானே போகிறோம்' என்று சொன்னான். இவ்விதம் கூறக் கூடியவர்கள் எத்தனை பேரிருப்பார்கள்? என்னை இந்த ஆபத்துக்கு உள்ளாக்கியது அவன் தான். இருந்தாலும் அவனுடைய இந்த சுய நலத் தியாகத்தை மனித தேகம் படைத்த நான் எவ்விதம் மறக்க முடியும்? இவ்வளவு தயாள சிந்தை படைத்தவனை நான் எப்படி மறக்க முடியும்? அதற்கப்புறம் நான் எவ்வளவோ சுக துக்கங்களை அடைந்திருக்கிறேன். இன்று நான் வயோதிக

மடைந்து விட்டேன். எத்தனையோ தேசங்கள், மலைகள் நதிகள் காடுகள் முதலிய இடங்களில் சுற்றி யலைந்திருக்கிறேன். எத்தனை விதமான மனிதர்களை இந்த இரண்டு கண்ணாலும் பார்த்திருக்கிறேன். இருந்தாலும் இவனைப் போல பெரிய மனிதனை நான் பார்க்கவே இல்லை. ஆனால் இன்று அவன் இல்லை. திடீரென ஒரு நாள் சூன்யத்துடன் கலந்து விட்டான். அவன் நினைவு வரும் போதெல்லாம் என் கண்களில் நீர் நிறைந்து விடுகிறது. ஒரு பயனற்ற குற்றச் சாட்டை ஆண்டவன் மேல் சுமத்தத் தோணுகிறது. 'ஆண்டவா!' நீ எதற்காக இம் மாதிரி ஒருவனை சிருஷ்டி செய்து அனுப்பி விட்டு வீணாகத் திருப்பி அழைத்துக் கொண்டாய்! சொத்து சுகம், அறிவு அழகு எதேஷ்டமாக கொடுத்திருப்பதைப் பார்த்திருக்கிறேன்.

ஆனால் இவ்வளவு பெரிய ஆத்மாவை எத்தனை பேருக்குக் கொடுத் திருக்கிறாய்?' சரி, அவைகள் போகட்டும். நீரின் சப்தம் படிப்படியாகக் கேட்டது. இந்த நீர்ப்பிரவாகம் – இதை ஸ்டீமர் கூடக் கடக்க முடியாது என்று நினைத்துக் கொண்டேன். இந்திரன் படகில் ஏறிக்கொண்டு அந்த நதியைக் கடக்க முயற்சித்தான். "இனிப் பயமில்லை. நாம் பெரிய கங்கைக்கு வந்து விட்டோம்" என்றான்.

'இனிப் பயமில்லா விட்டால் நல்லது. ஆனால் பயம் உனக்கு இருக்கிறதென்று எனக்குத்தெரியவில்லையே!' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டேன்.

ஒரு நொடிக்குள் படகு ஒரு குலுங்குக் குலுங்கி கங்கையில் கலந்து வேகமாகப் போய்க் கொண்டிருந்தது.

நாங்கள் பிரயாணத்தைத் தொடங்கும் போது இருந்த இருள் இப்போதில்லை. மேகத்தின் மறைவில் சந்திரன் உதயமாகிக் கொண்டிருந்தான். இப்போது வெகு தூரத்து வரையிலும் மங்கலாகத் தெரிந்தது. வலப் புறத்தில் வயல்களையும் மரங்களையும் விட்டு எங்கள் படகு நேராக கங்கையில் போய்க் கொண்டிருந்தது.

(தொடரும்)

★

வாபீஸ்......!

நியூயார்க் சலூன் ஒன்றில், "வாடிக்கைக்காரர்கள் திருப்தியடையும்படி முடி சிங்காரிக்கப்படும். அதிருப்தி பட்டால் தலை மயிரை மகிழ்ச்சியுடன் வாபீஸ் செய்ய உத்திரவாதம் கூறுகிறோம்!" என்பதாக ஒரு போர்டு தொங்கியது.

புது வீடு

[வி. ராமதுரை]

மனோகரமான மாலை நேரம். குளிர்ந்த காற்று, திறந்திருந்த ஜன்னல் வழியாக அறைக்குள் வீசிக் கொண்டிருந்தது. அப்போது உபாத்தியாயினி சாரதா ஜன்னலருகிலிருந்த நாற்காலியிலமர்ந்திருந்தவள் தனது கையிலிருந்த நாவலை முசுவாக வாசித்துக் கொண்டிருந்தாள்.

கதா நாயகனைப் பற்றி ஆசிரியரெழுதியுள்ள கீழ்க்கண்ட சொற்களை அவளது கண்கள் படித்தன:- 'வீட்டிலேற்பட்ட சிறு தகராறினால் மனக் கசப்படைந்த உள்ளத்தோடு அவன் ரஸ்தாவில் நடந்தான். அவனது மனதில் அவனது மனைவி கூறிய சொற்களே திரும்பத் திரும்ப ஒலித்து மறைந்தன. போக்கு வரத்து அதிகமாக உள்ள அந்த ரஸ்தாவில் செல்லும் வண்டி கார் ஆகியவற்றைக் கவனித்துக் கூட அவன் செல்லவில்லை. கலக்கமடைந்த மன நிலையில் அவனது கால்கள் திடீரென ரஸ்தாவின் குறுக்கே நடக்க வாரம்பித்தன.

தனது பின்புறத்திலிருந்து வேகமாக அலறிக் கொண்டு வரும் 'காரை' இந்நிலையில் அவன் எப்படிக் கவனித்திருக்க முடியும்? மோட்டாரோட்டி 'பிரேக்' போட்டும் நிற்காத கார் அவன் மீது மோதியது......'

மேற்கூறிய வாக்கியங்களை அவள் மீண்டுமொருமுறை வாசித்தாள். விநாடிகள் சுழல நிமிடங்களும் ஓடின. ஆனால் சாரதத்தின் கண்கள் அதே பக்கத்தை நோக்கிக் கொண்டிருந்தன. அவளது மனம் மாத்திரம் எண்ணச் சுழலில் வாழ்ந்திருந்தது. நான்கு ஆண்டுகளுக்கு முன் மனக்கவலையால் வீட்டை விட்டுச் சென்ற அவளது கணவனுக்கும் இம்மாதிரியான விபத்து ஏதாவது ஏற்பட்டிருக்குமோ என்ற எண்ணம் தான் அது.

இந்த எண்ணம் அவளது மனதைக் கலங்கச் செய்தது. அவளது கண்களினின்றும் கண்ணீர் பெருகியது.

சமையலறையில் வேலை செய்து கொண்டிருந்த அவளது தாய் இச்சமயத்தில் "சாரதா! சாரதா!" என்று கூப்பிட்டாள். கலங்கிய நிலையிலிருந்த சாரதாவின் காதில் இவ்வார்த்தைகள் எப்படிக் கேட்கும்?

அவளது தாயே சிறிது நேரத்திற்குப் பிறகு அவளிருந்த அறைக்குள் நுழைந்தாள். அப்போது மேல் வானத்தின் செக்கர் அறைக்குள் பரவிக் கொண்டிருந்தது. நாற்காலியில் புஸ்தகம் கையுமாக உட்கார்ந்து கொண்டு கண்ணீர் விடும் சாரதத்தை அவளது தாய் கண்டாள். உடனே அவளுக்கு விஷயம் விளங்கி விட்டது.

"என்னடி சாரதம்! அவனை நினைச்சுண்டு கண்ணீர் விட ஆரம்பிச்சாச்சா? யாரைச் சொல்லி என்ன பண்ணறது? எல்லாம் உன் தலைவிதிப்படி தானே நடக்கும்? உம்... இனிமேலாவது நீ அவனுடன் கூட வாழக் கொடுத்து வைத்திருந்தால் அவனிங்கு எப்படியும் வந்து சேருவான்" என்று அவளது தாய் கூறினாள்.

தாயாரின் பேச்சைக் கேட்ட சாரதம் தனது கண்களினின்றும் வழிந்த நீரைத் துடைத்துக்கொண்டாள். தனது கணவன் தான் எண்ணியதைப் போலன்றி ஒரு குறைவுமில்லாது மீண்டும் தன்னிடம் வந்து சேருவான் என்று நம்பினுள்.

"அம்மா! நீ மாத்திரம் போய் விட்டு வா. எனது மனது சரியா இல்லாததால் நான் வரவில்லே."

"சரி. ஆனல் அவர்கள் வீட்டில் கேட்டால்?......"

"எனக்கு தலே வலிக்கறதுனலே வரலேன்னு சொல்லி விடேன்."

"அதுவும் சரி தான். அப்போ நான் மட்டும் போயிட்டு வரேன்" என்று கூறி விட்டு அவளது தாயார் சென்ருள்.

வழக்கம் போலச் சாரதம் அன்று மாலேயில் பள்ளிக் கூடத்திலிருந்து தனது வீட்டை நோக்கி நடந்து கொண்டிருந் தாள். தனது வீட்டிற்குள் செல்லும் தருணத்தில் அவளது கால்கள் சிறிது நின்றன. அவள் தனது முகத்தைத் திருப்பித் தெருக் கோடியிலுள்ள ஒரு வீட்டைப் பார்த்தாள்.

அவளும் அவளது கணவனும் வாழ்ந்தது அந்த வீட்டில் தான். வாழ்வில் இன்பத்தையும் சாந்தியையும் அவள் அனுபவித்தது அந்த வீட்டில் தான். ஆனல் இன்று......?

"ஆமாம் உன்கிட்டே பாடம் படிச்ச பெண்ணுடைய கல்யாணத்தில் சாயங்காலம் ஊஞ்சல்னு ஒரு சிறுமி வந்து அப்பொழுதே சொல்லி விட்டுப் போச்சே. நாம ரெண்டு பேரும் போயிட்டு வரலாம் வரயா?"

அந்த வீட்டின் முன்பு பத்து அல்லது பனிரண்டு வேலேயாட்கள் நின்றிருந்தனர். அவள் அவர்களென்ன செய்கிருர்கள் என்று கவனித்தாள். அவர்கள் அவ்வீட்டை இடித்துக் கொண்டிருப்பதை யறிந்தாள்.

கடந்த வாழ்வின் எண்ணங்களின் சின்னமாக விருந்த அந்த வீடு இன்று அழிந்து கொண்டிருந்தது. வீட்டை இடித்த போதிலும் அவ்வீட்டில் நடந்த வாழ்க்கைச் சம்பவங்களைப் பற்றிய எண்ணம் அவள் மனதை விட்டு அழியுமா? அவள் வீட்டிற்குள் சென்றாள். காப்பி சாப்பிட்டு, வீதி அறையிலுள்ள நாற்காலியில் வந்து உட்கார்ந்தாள். அவளது மனம் பழய கனவுகளைக் காண ஆரம்பித்தது.

சாரதம் மிக்க செல்வம் படைத்த குடும்பத்தில் பிறந்தவளல்ல. ஏதோ சாதாரணமான குடும்பத்தில் பிறந்தவள். அவளுக்கு ஒரே ஒரு அண்ணனைத் தவிரக் கூடப் பிறந்தவர்கள் வேறொருவருமில்லை. அண்ணனது சம்பாத்தியத்தைக் கொண்டு தாய் தந்தையர்களையும் அவர்களிருவரையும் கொண்ட அச்சிறு குடும்பம் நடந்து வந்தது. சாரதத்தை அவளது அண்ணன் இண்டர்மீடியட் வரையில் படிக்க வைத்தான். அண்ணனது முயற்சியால் தான் அவளுக்கும் ஆத்மராமனுக்கும் விவாகம் நடந்தது. விவாகத்திற்குப் பிறகு சாரதம் சேலத்திலிருந்த தனது கணவனது வீட்டிற்கு வந்து சேர்ந்தாள்.

ஆத்மராமன் பி. ஏ. வரை படித்திருந்தான். அவனது பெற்றோர்களுக்கு அவன் ஒரே பிள்ளை. அவன் பத்தாவது படிக்கும் போது தாயார் பரலோகம் போய் விட்டாள். தமக்கிருந்த சொற்ப நிலத்தையும் விற்று அவனை பி. ஏ. வரை படிக்க வைத்தார். அவன் பீ. ஏ. வரை படித்திருந்தும் ஒரு நன்மையுமுண்டாகவில்லை. ஏனெனில் அவனுக்கு ஒரு கம்பெனியில் 'டைபிஸ்டு' உத்தியோகம் தான் கிடைத்தது!

அவள் அவளது கணவன் மாமனார் ஆகிய மூவரும் முன்பு அதே வீட்டில் தான் குடியிருந்தனர். வீடு பெரிய வீடாகத்தானிருந்தது. வீட்டிற்கு வந்த புதிதில் அவ்வீட்டிலிருப்பதற்கு அவளுக்குச் சிறிது பயமாக விருந்தது. அவர்கள் மூவருக்கும் ஒரு சிறு வீடே குடியிருக்கப் போதும் போல் அவளுக்குத் தோன்றியது. இதைப் பற்றி ஒரு நாள் அவள் கணவனிடம் கேட்டே விட்டாள்.

காலையில் ஆத்மராமன் கிணற்றடியில் தண்ணீர் இழுத்துக் கொண்டு இருக்கையில் சாரதம் பக்கத்தில் நின்று கொண்டிருந்தாள். "நாம் மூவரும் இருக்க ஒரு சின்ன வீடே போதும் போலத் தோன்றுகிறதே, இவ்வளவு பெரிய வீடு எதற்கு?" என்று சாரதம் கேட்டாள்.

"இதுவா பெரிய வீடு? எனக்கென்னமோ இது ஒரு பெரிய வீடாகத் தோன்றவில்லை. அம்மா இருந்த போதிலிருந்து நாங்கள் இங்கு தான் இருந்து வருகிறோம். அம்மா இவ்விடத்தில் தான் இறந்ததால் அப்பா இவ்விடத்தை விட்டுச் செல்லப் பிரியப்பட மாட்டார். உனக்கு இங்கிருக்க ஏதாவது பயமாக இருக்கோ?" என்று கேட்டு விட்டு அவளை நோக்கினான்.

அவன் அவளை நோக்கிய அந்தப் பார்வையை அவளால் மறக்க முடியுமா? அவளையுமறியாமல் அவளது வாயினின்றும் 'இல்லை' என்ற பதில் தான் வெளிவந்தது.

துன்பச் சம்பவங்கள் வாழ்வில் வரும் போது தனியாக எப்போதும் வதில்லை. அதோடு பல துன்பங்கள் இணைந்து வருவதே வழக்கம்.

சாரதத்தின் விவாகமான ஒரு வருஷத்திற்குள் அவளது மாமனார் இறந்தார், துன்பம் அத்துடன் நிற்கவில்லை. மீண்டும் தொடர்ந்து வந்தது.

ஒரு நாள் மாலை ஏழு மணி சமயமிருக்கும் அப்போது தான் கம்பெனியிலிருந்து திரும்பி வந்த ஆத்மராமன் தாழ்வாரத்தில் போடப்பட்டிருந்த நாற்காலியில் உட்கார்ந்திருந்தான். அவனுக்குக் காப்பியைக் கொண்டு கொடுக்க வந்த சாரதா அவனது முகத்தைப் பார்த்தாள். "முகமெல்லாம் ஏன் இப்படியிருக்கு! ஏதோ மனசு கவலைப் படுவது போல் தோணறதே என்ன விசேஷம்?" என்று கேட்டாள்.

"வி...சேஷம்...... ஒன்றுமில்லையே" என்று அவன் தயக்கத்துடன் கூறினான்.

"உங்களது மனதில் என்னமோ இருக்கு அதைத் தயவு செய்து கூறுங்களேன்"

"மனதிலிருப்பதை உடைத்துக் கூறிவிடுகிறேன். எனக்கு வேலை போய் விட்டது."

"என்ன நிஜமாகவா?"

"ஆம் நிச்சயமாகத்தான் வேலை போய் விட்டது."

"என்ன காரணத்திற்காகத் தங்களை வேலையை விட்டு நீக்கினார்கள்?"

"வேலையை விட்டு நீக்குவதற்குக் காரணம் வேறு வேண்டுமாக்கும்! ஒரு மாதத்திற்கு முன்பு தான் கம்பெனியில் ஒரு புது மானேஜர் வந்தான். தினமும் நான் வீட்டிற்குப் புறப்படும் ஐந்தரை மணிக்கு என்னிடம் வந்து பத்து 'லெடர்'களைக் கொடுத்து சீக்கிரம் 'டைப்' அடித்து விட்டுச் செல்லும்படி என்னிடம் கூறுவான். மானேஜர் என்ன தினமுமா நம்மிடம் அதிகப்படி வேலை வாங்குகிருரென்று நான் சில நாட்கள் வரையில் பொறுமையாகயிருந்தேன். வரவரமானேஜர் என்னிடம் வேலை கொடுப்பது வழக்கமாகி விடவே எனது பொறுமை எல்லையை மீறியது. முகம் சுளித்தேன் உடனே வேலையும் போற்று!"

"வேலைக்கு என்று ஓரிடத்தில் சென்று விட்டால் அங்கு அடங்கித்தான் வேலை செய்ய வேண்டும். அடங்கியிரா விட்டால் வேலை போவதிலொன்றும் அதிசயமில்லையே!" என்ற துடுக்கான வார்த்தைகள் அவளது வாயினின்றும் வெளிப்பட்டன.

இவ்வார்த்தைகள் அவனது மனதை எவ்வளவு புண்படுத்தியிருக்குமென்று அன்று அவளது உள்ளம் அன்று உணரவில்லை. மனதில் தோன்றியதைச் சொல்லி விட்டாள்.

அத்துடன் சாரதத்தின் சுழல் முடிந்தது.

மறு நாள் மாலை சாரதத்தின் கண்கள் ஜன்னலின் வழியாக தெருக் கோடியிலுள்ள வீட்டை மீண்டும் நோக்கின. இன்று அவர்கள் அவ் வீட்டின் முன்னறையிலுள்ள ஜன்னலொன்றை சிலர் பெயர்த்துக் கொண்டிருப்பது தெரிந்தது. அந்த ஜன்னலைக் கொண்ட முன் அறையில் நடந்த பழய சம்பவம் அவளது உள்ளத்தினின்றும் பெயர்ந்து மனக்கண் முன் ஊசலாடத் தொடங்கவே அவள் அருகிலிருந்த நாற்காலியில் அமர்ந்தாள்.

ஆம் அந்த ஜன்னலுக்கருகில் போடப்பட்டிருந்தது ஒருமேஜை. அதற்கு அருகில் போடப்பட்டிருந்த நாற்காலியில் ஆத்மராமன் அன்று கவலையுடன் உட்கார்ந்திருந்தான். அன்றும் அவனுக்கு எங்கும் வேலை கிடைக்க வில்லை என்று அறிந்தாள். பெண்களின் சுபாவப்படி அவளது துக்கம் கோபமாக வெளிப் பட்டது! 'பட பட" வென்று வார்த்தைகள் அவளது வாயினின்றும் வெளிப் பட்டன.

"இந்தக் கம்பெனி இல்லேன்னு வேறு கம்பெனிகளே கிடையாதா? அல்லது வேலை தான் கிடைக்காமல் போறதா? என்று அன்றெல்லாம் பெருமையா அளந்தீங்களே வேலை கிடைக்கிறது குதிரைக் கொம்புன்னு இப்பவாவது தெரியறதா? உங்களைப் போலுள்ள அடங்காப் பிடாரிகளுக்கு வேலையை வேறே யாரோ வெச்சுக் காத்திட்டு இருக்காளாக்கும்!" என்று கூறினுள் சாரதம்.

"சாரதம்! வரவர பேசறதுக்கு கற்றுக்கொண்டாச்சா? இத்தனை நாட்களாக அடங்காப் பிடாரியாகப்படாத நான் இன்றுதான் உனது கண்களுக்கு அவ்வாறு படுகிறேன் அல்லவா?" என்று கேட்டுவிட்டு அவன் அவளை நோக்கினுன். அவனது கண்கள் சிவந்திருப்பதை அவள் கண்டாள். உடைந்த உள்ளத்தின் காரணமாக அவனது வாயினின்றும் கோபத்துடனும், உரத்த சப்தத்துடனும் பல வாக்கியங்கள் வெளிப்பட்டன. அதன் பிறகு அவன் ஒன்றுமே பேசவில்லை. அன்றிரவு சாப்பிடாமலேயே அவன் படுத்துக்கொண்டான்.

மறு நாட்காலையில் சீக்கிரம் எழுந்த சாரதம் ஆத்மராமனது படுக்கை காலியாக இருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள். வீட்டிற்குள் தான் எங்காவதிருப்பான் என்று அவள் எண்ணிக்கொண்டு தாழ்வாரத்திற்குச் சென்ருள். அப்போது வீதிக் கதவு திறந்தபடி இருப்பதை அவள் கண்டாள். என்றுமே இத்தனை சீக்கிரம் வீட்டை விட்டு வெளிச் செல்லாத அவன் இன்று மட்டும் வெளியில் சென்றதன் காரணம்?

அவளுக்கு ஒன்மே செய்யத் தோன்றவில்லை. கால்கள் மாத்திரம் வீட்டின் முன் அறையை நோக்கி நடந்தன. அங்கு மேஜையின்மீது நான்காக மடிக்கப்பட்ட காகிதம் ஒன்றிருந்தது. அதை அவள் பிரித்துப் பார்த்தாள். அதில்,

சாரதத்திற்கு,

நான் வீட்டை விட்டுச் செல்கிறேன். எங்கு செல்கிறேன் என்று எனக்கே தெரியாது. நான் உன்னைவந்து கூட்டிச் செல்லும் படி உன் தாயாருக்கு ஒரு கடிதம் எழுதி என் கையில் கொண்டு செல்கிறேன். அதை நான் 'போஸ்ட்' செய்துவிட்டுத் தான் செல்வேன். நீ உன் தாய்வீட்டுக்குச்சென்று சௌக்கியமாக இரு.

ஆத்மராமன்.

என்று எழுதியிருந்தது. இதைப் படித்த அவளுக்கு உலகமே சுழல்வது போலிருந்தது.

பிறந்தகத்திற்கு உடைந்த மனதுடன் வந்த சாரதத்தை அவளது அண்ணன் தேற்றினுன். அவனது முயற்சியால் அவள் பி. ஏ. படித்து 'பாஸ்' செய்தாள். சேலத்துப் பள்ளிக்கூடம் ஒன்றில் உபாத்தியாயினி வேலை காலியிருப்பதைப் பத்திரிகை மூலம் அறிந்த சாரதம் தனது தாயுடன் மீண்டும் சேலத்திற்கே வந்து சேர்ந்தாள். அவளது எண்ணப்படி வேலையும் கிடைக்கவே முன்பு தனது கணவனுடன் வாழ்ந்த தெருவிலேயே வேறு ஒரு வீட்டில் குடிபுகுந்தாள்.

மன ஓட்டத்தினின்றும் விழிப்படைந்த சாரதம் எழுந்து ஜன்னலருகில் சென்ருள்.

அவள் வெளியே நோக்கிய போது நன்ருகத் தரை மட்டமாக ஆக்கப்பட்டு இருந்த இடிந்த வீட்டின் தோற்றம் அவளது கண்ணில் பட்டது.

அன்று வெள்ளிக்கிழமை. அன்று சாரதம் பள்ளிக்கூடத்தில் இருந்து வீட்டிற்கு வந்தபோது மாலை ஆறுமணியிருக்கும். கை, கால்களைச் சுத்தம் செய்து கொண்ட பிறகு அவள் முன் அறையை அடைந்தாள். மேஜையின் மீது வைக்கப்பட்டிருந்த 'டேபிள் லேம்பை' அவள் துடைத்து வைப்பதில் முனைந்தாள். அப்போது தான் அறைக்குள் நுழைந்த அவளது தாய் அவளைப் பார்த்து, "உனக்கு வந்த 'லெட்டர்' ஒன்றை மேஜையின்மீது வெச்சிருந்தேனே அதை நீ பார்த்தாச்சா?" என்று கேட்டாள்.

"இன்னும் பார்க்கவில்லை" என்று கூறிக் கொண்டே விளக்கேற்றினாள். அப்போது மேஜையின் ஒரு மூலையிலிருந்த 'கவர்' கண்ணில் படடது. கடிதத்தை எடுத்துப் பார்த்தாள். அது தனக்குத்தான் வந்திருக்கிறது என்பதை அறிந்ததும் கடிதத்தைப் பிரித்தாள். கடிதத்திலுள்ள எழுத்துக்களை உற்று நோக்கினாள். எழுத்துக்கள் தெரிந்தவருடைய எழுத்தாகக் காணப் பட்டது. ஆம், அது அவளுடைய கணவனின் கையெழுத்துதான். நாற்காலியில் உட்கார்ந்தபடி கடிதத்தைப் படிக்கத் தொடங்கினாள். அவளது தாயும் அருகிலுள்ள நாற்காலியில் உட்கார்ந்தாள். கடிதத்தில்,

அன்புக்குரிய சாரதத்திற்கு,

ஆசி. வாழ்க்கை என்ற நாடக அரங்கினின்றும் பிரிக்கப்பட்ட நாமிருவரும் மீண்டும் வாழ்க்கைப் பாதையில் வெகு சீக்கிரத்தில் ஒன்று கூடப்போகிறோம். ஆனால் நமது தனிமை வாழ்க்கையைப் பற்றிய எண்ணங்கள் மனதை விட்டு அகலுமோ?

வாழ்க்கையில் பெரும் மாறுதல்கள் எல்லாம் சிறு நிகழ்ச்சிகளில் இருந்துதான் உண்டாகின்றன என்று அறிந்தோர் கூறுகின்றனர். அதேபோல் ஒரு சிறு சம்பவம் தான் நமது பிரிவுக்குக் காரணம். அன்றே நான் எனது கோபத்தை அடக்கியிருந்தால் நிலைமையைச் சரி செய்திருக்கலாம். பேசிப் பயனென்ன? எல்லாம் வல்ல விதியின் முன் நாம் என்ன செய்ய முடியும்?

வீட்டை விட்டுச் சென்ற எனக்குக் கடவுள் தகுந்த தண்டனை அளித்தார். வீட்டிலிருந்து சென்ற நான் இந்திய விமானப் படையில் சேர்ந்தேன். சேர்ந்த மூன்று மாதத்திற்குள் 'காப்டனுக' உயர்வு கிடைத்தது. கல்கத்தாவிலிருந்து என்னை பர்மாப் போர் முனைக்கு அனுப்பினர்கள். போர்முனையில் நான் சென்ற விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதால் நான் கைதியாக ஜப்பானியர்கள் கையில் சிக்கினேன். கைதியான என்னிடம் அவர்கள் நன்ருக வேலை வாங்கினர்கள். அவற்றையெல்லாம் உன்னிடம் கூறி உன்னைக் கஷ்டப்படுத்த நான் விரும்பவில்லை!

சன்டை முடிந்தது சமாதானம் வத்தது. சுமார் மூன்று ஆண்டுச் சிறை வாசத்தின் பிறகு நான் இரண்டு மாதங்களுக்கு முன் சென்னை வந்து சேர்ந்தேன், இந்தியாவுக்கு வந்த பிறகு எனக்கு இத்தனை நாட்களாகக் கிடைக்க வேண்டிய சம்பளம் பூராவும் கிடைத்தது. நான் மிகவும் பலவீனமான நிலையிலிருப்பதால் இரண்டுமாத காலம் 'மிலிடரி' ஆஸ்பத்திரியிலிருந்து செல்வது நலமென்று ஆபீஸர் கூறினர். அதன்படி ஆஸ்பத்திரியிலிருக்க நான் சம்மதித்தேன்.

ஆஸ்பத்திரியிலிருக்கும் போது நீ எங்கு கஷ்டப்பட்டுக் கொண்டு இருப்பாயோ என்ற கவலைதான். இக்கவலையை நாம் முன்பு குடி இருந்த வீட்டுச் சொந்தக்கார

ரான சிவராமய்யர் தீர்த்தார். தினமும் நான் மாலையில் 'பீச்'சுக்குச் செல்வது வழக்கம் சுமார் பத்து நாட்களுக்கு முன் 'பீச்'சில் அவரைப் பார்த்தேன். அவர் மூல மாகத்தான் உனது விலாசத்தை அறிந்தேன். அதன் பிறகுதான் என்னிடமுள்ள பணத்தை என்ன செய்வதென்ற முடிவுக்கு வந்தேன். முன்பு எப்போதோ நீ ஒரு சிறு வீடு வேண்டுமென்று சொன்னதாக ஞாபகம். அதன் படி சிவராமையரிடம் இருந்து நாம் முன்பு குடியிருந்த வீட்டையும், நிலத்தையும் வாங்கியுள்ளேன், பழைய வீட்டை இடித்து புது வீடு கட்டுவதற்கான 'பிளான்' போட்டு பணத்தையும் அவரிடமே கொடுத்து அனுப்பியுள்ளேன்.

இன்னும் இரண்டு நாட்களுக்குப் பின் என்னை வேலையிலிருந்து நீக்கி விடுவார்கள் வேலை போனதற்கு இப்பொழுது சந்தோஷப் படுகிறேன்! நீயும் சந்தோஷப் படுவாய்! அதன் பிறகு நான் புறப்பட்டு வருகிறேன்.

உன் தாயாருக்கு என் நமஸ்காரம் சொல்லவும்.

இப்படிக்கு,

ஆத்மராமன்.

என்று படித்ததும் சாரதம் தாங்க முடியாத மகிழ்ச்சி அடைந்தாள். அவளது கை கடிதத்தைத்தாயிடம் கொடுத்தது. தாயார் கடிதத்தைப் படித்து முடித்த பின் சாரதம் எழுந்து ஜன்னலருகே சென்றாள். அவளது தாயும் அவளை நெருங்கினாள்.

இத்தனை நாட்களாகத் தனது கணவனுடன் வாழ்வோமா என்று அவள் கனவு கண்டாள். அக்கனவின் நனவுச் சின்னம் போல் விளங்கிய புது வீட்டின் அஸ்திவாரம் நிலா ஒளியில் ஜன்னலின் ஊடே தெருக்கோடியில் அவளது கண்ணுக்குப் புலப்பட்டது!

★

மரியாதை !

மேல் நாட்டு ஓட்டல் ஒன்றிலே கீழ் கண்ட வாசக மடங்கிய போர்டு தொங்குகின்றது.

"நான் அற்பம், ஆனல் அர்த்தபுஷ்டி நிரம்பிய வஸ்து. எல்லோருக்கும் உதவி அளிக்கின்றேன். கதவுகளைத் திறப்பதும், இதயங்களையே திறப்பதும், பொருமையை ஒழிப்பதும் நானே. நட்பையும் தன்னம்பிக்கையையும் வளர்க்கிறேன். பிறருடைய போற்றுதலுக்கும், வணக்கத்திற்கும் வித்து. யாவரும் என்னை விரும்புகின்றனர். எவரையும் தொண தொணக்கமாட்டேன். சட்டங்களை மீறியதும் இல்லை, என் விலை சொற்பம். பலர் புகழ்ந்துள்ளார்கள்; எவரும் என்னை வெறுத்தது இல்லை. உயர்ந்தோருக்கும், தாழ்ந்தோருக்கும் உகந்த பொருள். ஒவ்வொரு நிமிஷமும் நான் உபயோகம் ஆகிறேன். என் பெயர் மரியாதை !"

இந்தோனேஷியா

[அ. சி.]

இரண்டாவது உலக யுத்தத்தின் இறுதியில் இந்தோனேஷிய மக்கள் நடத்திய சுதந்திரப் போராட்டத்தின் காரணமாக, அந்தப் பெயர் இந்திய மக்கள் அனைவரின் மனதிலும் மறையா வண்ணம் நன்கு ஸ்திரம் பெற்று விட்டது. அஃதன்றியும் 'இந்தோனேஷியா, என்ற அந்தப் பெயர், மறந்து போன பல அரிய சம்பவங்களையும், அனுபவங்களையும் மீண்டும் நம் நினைவுக்குக் கொண்டு வருவதாயிற்று.

"இந்தோனேஷியா" என்ற சொல் "இந்திய" என்ற சொல்லை இணைத்துள்ளதிலிருந்து இந்தியாவிற்கும் இந்தோனேஷியாவிற்கும் ஏதோ நெருங்கிய சம்பந்தம் இருக்கத்தான் வேண்டுமென்று சாதாரண மக்களுங்கூட தயங்காமல் கூற முன் வருவர்.

உண்மைதான். சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு திரினில் பள்ளத்தாக்கில் (Trinil River Valley) புதை பொருள் ஆராய்ச்சியாளர் நடத்திய மா பெரும் சோதனைகட்குப் பின்னர், பல அரிய ஆதார பூர்வமான விஷயங்கள் அறிவிக்கப் பட்டிருக்கின்றன. பல எலும்புக் கூடுகளிலிருந்தும், மற்றும் பல புதையுண்ட பொருள்களிலிருந்தும், நடாத்திய ஆராய்ச்சிக்கும், சோதனைகட்கும் பின்னர் நல்ல சில விஷயங்கள் நமக்குத் தெளிவு படுத்துகின்றன.

"இந்திய மக்கள், அதிலும் குறிப்பாக தென்னிந்தியர்கள் அங்கே சென்று வாழ்ந்து அவர்களது கலாச்சார நாகரீகத்தை வளரச் செய்திருக்கின்றனர்கள்" என்பது. அதோடு பல முக்கிய மரங்களும், செடிகளும் கூட (அதாவது) மூங்கில், கரும்பு, நெற்பயிர், வாழை ஆகியவைகள் இந்தியாவிலிருந்து இந்தோனேஷியாவிற்குக் கொண்டுசென்று, அந்த மண்ணில் வளமுறச் செய்ததாகும்.

தவிர, இந்திய காவியங்கள் பலவற்றுள்ளும் அதிலும் முக்கியமாக பல கிரந்த நூல்களிலும் ஒருவாறு இந்தோனேஷியாவைப் பற்றிய பல குறிப்புகள் காணப் படுவதாக ஆராய்ச்சியாளர் பகர்கின்றனர்.

கி. மு. 2000 முதல் கி. மு. 1000 வரையில் இந்தோனேஷியாவுக்கும், இந்தியாவிற்கும் உள்ள கலாச்சார தொடர்புகளைப் பற்றிய பல குறிப்புகள் இன்னும் ஸுமத்திராவிலும், ஜாவாவிலும் காணக் கிடக்கின்றன.

இந்திய வர்த்தகர்களும், இந்திய யாத்ரீகர்களும் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்தே இந்தோனேஷியாவிற்கு சென்று, அங்கே குடியேறியும் இருக்கின்றார்கள். அப்பொழுது இந்தோனேஷியாவிற்குச் செல்வதற்கு வங்காளத்திலுள்ள டாம்லுக்கும், கஞ்சம் ஜில்லாவில் உள்ள பலோரா என்ற இடங்களும் இரு துறை முகங்களாக இருந்து வந்திருக்கின்றன. அப்படி இந்தோனேஷியாவில் குடியேறிய இந்திய மக்களையும், இந்திய யாத்ரீகர்களையும் அக்காலத்தில் "ஓராங் கிளிங்" என்று மலேயா மொழியில்

அழைப்பார்களாம். அதாவது, அல்லது "கலிங்கத்து மக்கள்" (People of Kalinga) என்பதாக.

இந்தியாவில் பல்லவ ராஜ்யம் ஏற்பட்டிருந்த காலே, இந்நாட்டு மன்னனுன முல்லவர்மன் என்பவனுல் ஜாவாவும் ஆளப்பட்டதாக சரித்திரம் கூறுகின்றது.

அதன் பின் பல ஏராளமான புத்தமத பிரச்சாரகர்கள் அங்கு சென்று புத்தமதப் பிரச்சாரம் செய்து புத்தமதக் கொள்கைகளே ஸ்தாபனமும் செய்துள்ளார்கள். புத்த மதம் பரவியது அக்காலத்தில். அதோடு மற்ற இந்தியர்களும் அங்கு சென்று இந்து மத கலாச்சாரத்தை பரப்பியும் வந்திருக்கின்றனர்.

கி. பி. 8-ம் நூற்றுண்டிலிருந்து 13-ம் நூற்றுண்டின் மத்திய காலம் வரை தென்னுட்டு மன்னர்களான சோழ மன்னர்களின் காலத்தில் இந்தோனேஷிய யாத்ரீகர் பலரும் இந்தியாவில், அதிலும் குறிப்பாக தமிழ் நாட்டில் வந்து தங்கியும் இருந்திருக்கின்றனர் என்பதும் அறியற்பாலது. கீழக்கடலே (வங்காள விரிகுடா) யொட்டிய நாகபட்டனத்தில் கிடைத்த சில புதை பொருள்களினின்றும் ஆராய்ந்த ஆராய்ச்சியின் பயனுய் மேலும் பல உண்மைகள் புலனுவதாக ஆராய்ச்சியாளர் எடுத்துச் சொல்கின்றனர்.

எனவே இந்து மதத்தினரும், இந்திய கலாச்சார நாகரீகத்தை அடிப்படையாகக் கொண்ட இந்திய மக்களும் 15-ம் நூற்றுண்டின் முற்பகுதி வரையில் அங்கே இருந்து வந்திருக்கின்றனர் என்பதை பல்வகைச் சான்றுகளாலும் நாம் தெரிந்துள்ளவர்களாகின்ருேம். இந்தோனேஷியாவிடம் உலகின் மற்ற பகுதிகளில் உள்ளவர்களேக்காட்டிலும் ஆத்மார்த்திகமாக உறவையும், க்ஷேமத்தையும் சகல துறைகளிலும் இந்தியர் எதிர்பார்ப்ப தென்பது முற்றிலும் விரும்பத் தக்கதே யாகும்.

இந்து மதத்திற்கு அறிகுறியாக சிவாலயங்களும், விஷ்ணுவாலயங்களும் ஜாவாவிலும், மற்ற இடங்களிலும் இருப்பதாகவும் சொல்லப்படுகின்றது.

பின் நிகழ்ச்சிகள் மாற ஆரம்பிக்கின்றன. சற்றேறக் குறைய பத்தாம் நூற்றுண்டின் ஆரம்பத்தில், இந்தியாவிலிருந்த இஸ்லாமிய மதம், இந்தோனேஷியாவிற்கும் சென்று வேரூன்றத் தொடங்கியது.

பதினைந்தாம் நூற்றுண்டில் முகமதியர்கள் இந்தோனேஷியத் தீவுகளே ஆக்கிரமித்து இந்தியர்களின் ஆதிக்கத்துக் குட்பட்டிருந்த சுமார் இருபது நாடுகளேக் கைப்பற்றி, தங்கள் ராஜ்யத்தை ஸ்தாபிக்கலானுர்கள். இஸ்லாம் எங்கும் வியாபிக்கத் தொடங்கியது. மக்களும் பெரும்பாலோர், இஸ்லாமிய மதத்திற்கு அடி பணிந்தும், தழுவியும் நிற்கலானுர்கள். இன்றும் சரி. இந்தோனேஷியாவின் ஜனத்தொகையில் பெரும்பாலோர் இஸ்லாம் மதத்தைச் சார்ந்தவர்களே யாவர்.

பின் சரித்திர வாயிலாக டச்சுக்காரர்களின் ஆதிபத்திய வேட்டையைத்தான் நாம் நன்கு காண முடிகிறது.

ஆங்கிலேயர்கள் வியாபார நிமித்தமாக இந்திய நாட்டில் பிரவேசித்து, கிழக்கிந்தியக் கம்பெனியை நிறுவி, பின்னிட்டு பரத கண்டம் பூராவுக்குமே "யூனியன் ஜாக்" கொடியை பறக்கவிட்ட கதை போலத்தான், டச்சுக்காரர்களும் வியாபார நிமித்தமாக இந்தோனேஷியாவிற்குள் அடி வைத்தார்கள். அம்பேய்னு என்ற இடத்தைக் கைபற்றினுர்

கள் ; 1619-ம் ஆண்டில் பட்டாவியாவில் வியாபார ஸ்தலத்தையும் நிறுவி விட்டார்கள்.

பதினேழாம் நூற்றுண்டின் முற்பகுதி சரித்திரத்தில் குறிப்பிடத்தக்க தொழிற் புரட்சி உண்டான காலம் என்று சொல்வது தவறல்ல. டச்சு ஏகாதிபத்தியத்தின் கை அப்பொழுதுதான் உரம் பெறத் தொடங்கிற்று. ஆங்கில வர்த்தகர்கள் இந்தியாவிலிருந்தும், ஸயாமிலிருந்தும் வெளியேறிய காலம் அது. போர்ச்சுகீஸியர்கள் ஜப்பானிலிருந்து விரட்டப்பட்ட காலம் அது. டச்சின் கண்ணோட்டம் கிழக்கிந்தியத் தீவுகளின் மேல் போய் ஊடுருவிப் பாயலாயிற்று. இரண்டே நூற்றுண்டுகளில் ஜாவாவை ஸ்வீகரித்தது ; செலபெஸ் தீவை போர்ச்சுகீஸியர்களிட மிருந்து கைப் பற்றியது. சுருங்கக் கூறின் நாளாவட்டத்திலேயே ஆங்காங்கு வேரூன்றி நிலைபெற்று சுரண்டுதலில் முனைந்து வந்தது.

செலபெஸ் தீவு டச்சுக்கு மாறியது 1666ல் ஆகும்.

இதைக் கண்ட ஆங்கில ஏகாதிபத்தியமும் சும்மா இருக்க வில்லை. 1685-ல் இந்தோனேஷியாவுற்குச் செல்லலாயிற்று. சுமத்திராவில் உள்ள பென்குலன் என்ற இடத்தில் ஆங்கிலேயர்கள் வியாபார ஸ்தலத்தை நிறுவினார்கள். என்றுலும் டச்சு ஆதிபத்தியத்தின் ஆதிக்கம்தான் வலுப்பெற்று அங்கு எங்கும் ஓங்கி நின்றது.

பின் 1783-ல் பாரீஸ் உடன்படிக்கையின் விளைவாக ஆங்கிலேயர்களுக்குக் கொஞ்சம் சலுகை அதிகரித்தது. டச்சு கிழக்கிந்தியத் தீவுகள் பூராவிலும் வியாபாரம் செய்யும் உரிமையை ஆங்கிலேயர்கள் பெறலானார்கள். 1795-96 யுத்தத்தில் டச்சுக்காரர்களிடமிருந்து சுமத்திராவையும், டெர்னெட்டையும் கைப்பற்றிக் கொண்டார்கள். 1798- லிருந்து டச்சு ஆதிக்கம் குலையத் தலைப்பட்டது.

பின் பல சரித்திர நிகழ்ச்சிகளுக்கும், ஏகாதிபத்தியப் போராட்டங்களுக்கும் பின்னர்–நெப்போலியன் வீழ்ச்சி யுற்றதும் ஐரோப்பிய சமாதான உடன்படிக்கையின் பயனாக, சுமத்ராவும், ஜாவாவும் டச்சுக்காரர்களுக்கு திரும்பக் கிடைத்தன. அது நிகழ்ந்து இன்றைக்குச் சுமார் 130 ஆண்டுகள் ஆகின்றன.

அதன் பின் இந்தோனேஷிய மக்களின் சுதந்திரப் போராட்டங்கள் உருவெடுக்க ஆரம்பித்தன. இந்தோனேஷிய சரித்திரத்திலேயே, அதிலும் அழகிய, வளமிக்க ஜாவாத் தீவின் சரித்திரத்திலேயே, முதன் முதல் 1825–30ல் ஓர் புரட்சி ஏற்பட்டது. டச்சு ஆதிக்கத்தை இந்தோனேஷிய மண்ணிலிருந்து விரட்டியடிக்க புரட்சி வீரனை டிப்போநெகோராவின் தலைமையில் இந்தோனேஷிய மக்கள் வீறிட்டு எழுந்தனர். டச்சு அரசாங்கத்தின் இரக்கமற்ற கொடிய ஆட்சி முறை மாபாதகச் செயல்களால் அப்புரட்சியை அடக்கி விட்டது. என்றுலும் புரட்சித் தீ அணைந்து போய் விடவில்லை.

ஆசியக் கண்டத்தின் சரித்திரத்திலேயே இந்த இந்தோனேஷியரின் சுதந்திரப் புரட்சி மிகவும் குறிப்பிடத்தக்க ஓர் மாபெரும் நிகழ்ச்சியாகும். இதை எல்லாச் சரித்திராசிரியர்களும் ஒப்புக் கொள்வர். அந்நிய நாட்டின் ஆதிக்கத்தை எதிர்த்து, அதனைத் தன் ஜன்ம பூமியினின்றும் வேரோடு களைய நினைத்துப் புரட்சித் தீயில் முதன் முதலில் குதித்த மக்கள் இந்தோனேஷியரே யாவர்.

இந்தப் புரட்சியின் காரணமாக டச்சு ஏகாதிபத்திய வாதிகள் பல கொடிய அடக்கு முறைகளைக் கையாள ஆரம்பித்தார்கள். புரட்சியை ஒடுக்க எண்ணி 1830ல் பல சட்ட திட்டங்களை ஏற்படுத்தலானார்கள். பண்டங்களுக்கு விலை நிர்ணயம் செய்து, அதன் வாயிலாக நல்ல கொள்ளை லாபம் அடிக்க ஆரம்பித்தார்கள். டச்சு மக்கள் மேன் மேலும் சுரண்டுதலுக்கு இலக்காகி நொந்து கெட்டு வாழ்ந்தனர்.

1859-ம் ஆண்டில் டச்சுக்காரர்களும், போர்ச்சுகீஸியர்களும் தங்கள் சொந்த நலனைக் கருதி டிமார் தீவை இரண்டாகப் பிரித்துக் கொண்டார்கள். 1870-ல் டச்சு அரசாங்கம் ஜாவாவிற்கு ஓர் புதிய சட்டம் கொண்டு வந்தது. "சர்க்கரைச் சட்டம்" என்று சர்க்கரைக் கட்டுப்பாட்டை ஜாவாவின் மீது டச்சு திணித்து வைத்தது.

இந்த நூற்றுண்டின் மத்தியிலிருந்துதான் அமெரிக்க ஏகாதிபத்தியமும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியமும் இந்தோனேஷ்யாவிற்கும் புகுந்து, அவர்களும் சுரண்டும் தொழிலை நடத்தி வரலானர்கள் என்பதை வாசகர்கள் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.

1849-க்கும் 1888-க்கும் இடையில் பல ஏகாதிபத்திய சூழ்ச்சிகளும், சண்டைகளும் இந்தோனேஷியாவில் ஏற்பட்டன.

ஒரு நூற்றுண்டிற்கு மேலாக நடந்து வந்த இந்தோனேஷியரது வீரச் சுதந்திரப் போராட்டத்தை ஆதரிக்கவில்லை. அதற்குப் பதிலாக அந்தப் போராட்டத்தை நசுக்கி வந்த டச்சு ஆதிபத்தியத்தை பிரிட்டிஷாரும், அமெரிக்கர்களும் ஆதரித்து வந்தார்கள். ஆனல் மறை முகமாக என்பது சர்வதேச கண்ணேட்டமுள்ள ஒவ்வொருவரும் தெரிந்துள்ளது.

இங்குதான் நாம் இந்தோனேஷியாவை ஓரளவு அறிந்து கொள்ளுதலும் அவசியமாகின்றது.

இந்தோனேஷியா என்பது ஜாவா, சுமத்ரா, போர்னியோ, செலிபிஸ், மதுரா, மொலுகஸ் ஆகிய பல நூற்றுக் கணக்கான தீவுகளைக் கொண்டது. அதன் விஸ்தீரணம் 1000000 சதுரமைல். டச்சு ஆதிபத்திய நாடான ஹாலந்தைக் காட்டிலும் சுமார் 56 மடங்கு பெரிது என அறிய வருகின்றது.

இந்தத் தீவுகள் மலேயா, பர்மா, வடக்கு போர்னியோ, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுக்கு மத்தியிலும் பிலிப்பைன் தீவுகள், பஸிபிக் தீவுகள் ஆகியவைகளின் மத்தியிலும் இருக்கின்றன. அதன் நீளத்தைப் பார்க்கும் பொழுது கிழக் கோடியிலிருந்து மேலக் கோடி வரையில் சுமார் 4000 மைல் நீளம் உள்ளதாகும்.

சுமார் 2,50,000 ஐரோப்பியர்களும், 12,50,000 சீனர்களும் அங்கே இருக்கின்றனர். மற்றும் உள்ள சிறுபான்மையான இனத்தவர்களும் இருக்கின்ருர்கள். இந்தோனேஷியாவின் மொத்த ஜனத்தொகை 720 லக்ஷம் மக்களைக் கொண்டது.

இயற்கைச் செல்வம் கொழிக்கும் வளமிக்க அழகிய நாடு இந்தோனேஷியா. எண்ணெய்க் கிணறுகள் ஏராளமாய் இருக்கின்றன. ஜாவாவிலிருந்து மட்டும் வருடந்தோறும் 10 லக்ஷம் டன் எண்ணெய் கிடைக்கின்றது. சுமத்திராவிலிருந்து மட்டும் வருடந்தோறும் 45 லக்ஷம் டன் எண்ணெய் கிடைக்கின்றது. போர்னியோவிலிருந்து மட்டும் 20 லக்ஷம் டன் எண்ணெய் கிடைக்கின்றது. எல்லாம் சேர்த்து இந்தோனேஷியாவின் உற்பத்தியைப் பார்க்கும் பொழுது அது வருடந்தோறும்

சுமார் 80 லக்ஷம் டன் அல்லது சரியான கணக்குப்படி 79,43,000 டன் எண்ணெய் கொடுத்து வருகின்றது. உலக உற்பத்தியில் இந்தோனேஷியா விலிருந்து கிடைப்பது 3 சத விகிதம் எனலாம்.

மற்றும் ரப்பர் உற்பத்தியில் மலேயாவிற்கு அடுத்த படியாக இந்தோனேஷியாவைத்தான் சொல்ல வேண்டும். வருடத்திற்கு 3,78,000 டன் ரப்பர் கிடைக்கின்றது. அதாவது உலக உற்பத்தியில் மூன்றில் ஒரு பாகம். அல்லது 33% விகிதம் ஆகும்.

தேங்காய் கொப்பரை பிலிப்பைன் தீவுகளுக்கு அடுத்தபடியாக இங்கேதான் அதிகம் கிடைக்கிறது. உலக உற்பத்தியில் 31·6% விகிதம். அதாவது வருடத்திற்கு 5,37,000 டன் எனக் கணக்கிடப்பட்டிருக்கின்றது.

இவைகள் தவிர வருடந்தோறும் 28,2000 டன் தகரமும், 16,66,000 டன் நிலக்கரியும் கிடைக்கின்றன.

உலகத்திலேயே அதிகம் கொயினா கொடுக்கும் நாடு இந்தோனேஷியா ஒன்றுதான். உலக உற்பத்தியில் 90% இங்கே கிடைக்கின்றது.

மற்றும் இரும்பு, ஈயம், தங்கம் ஆகிய தாதுப் பொருள்களும், சர்க்கரை, மிளகு, தேயிலை, கொயினா, கொக்கோ ஆகிய விளை பொருள்களும் ஏராளமாய்க் கிடைக்கின்றன.

இங்கே பார்க்கும் பொழுது, இந்தோனேஷியாவில் உற்பத்தியாகும் எண்ணெயில் 40 சத விகிதம் அமெரிக்க முதலாளிகளுக்குச் சொந்தம். பாக்கி உள்ளவை பிரிட்டிஷ்காரர்களுக்குச் சொந்தம்.

இந்தோனேஷியாவில் உற்பத்தியாகும் பொருள்களில் 61 சத விகிதம் டச்சு ஹாலந்துக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இதில் கிடைக்கும் லாபத்தைப் பார்க்கும் பொழுது டச்சு ஹாலந்தில் உள்ள முதலாளி மார்களுக்கு வருடத்திற்கு சுமார் 50 கோடி ரூபாய் கிடைப்பதாகக் கணக்கிடுகின்றனர்.

இவற்றை அறியும் பொழுது ஏகாதிபத்தியங்களின் அந்தரங்க நோக்கங்கள் நன்கு புலப்படுகின்றன. டச்சு ஆதிக்கத்துக்குத் தூபம் போட அமெரிக்காவும், இங்கிலாந்தும் தயாராக இருக்கலாம். ஆனால் உலக சரித்திரத்திலேயே சுதந்திரப் போராட்டத்தின் மூலம் தங்கள் உரிமையை நிலை நாட்ட வீறு கொண்டுள்ள இந்தோனேஷிய மக்கள் தங்கள் மண்ணில் ஓர் அங்குலத்தையும் பிறர் சுரண்ட விட்டுக் கொடுக்க மாட்டார்கள். இந்தியா போன்ற உலக சமாதான நாடுகளின் உதவியாலும், பலத்தினாலும் இந்தோனேஷியா தன் சுதந்திரத்தை நிலை நாட்டி, சமாதானத்தை நிலவச் செய்து உலகுடன் ஒன்று கூடி வாழும் என்பது நிச்சயம்.

ஏகாதிபத்தியங்களின் சூழ்ச்சிகளுக்கு அங்கு இனி இட மேற்படாது. இந்தோனேஷியாவின் சுதந்திர உதயம் டச்சு போன்ற ஏகாதிபத்தியங்களின் அஸ்தமனம் ஆகும்.

★

தொடர் கதை:

மல்லிகைமொக்கு

தா. நாகலிங்கம்

ஜெயாவின் வருகையை எதிர் பார்த்துக் கொண்டிருந்த தலைவர், முத்துசாமி முதலியோர் காதுகளில், ஒரு கார் வீட்டெதிரில் வந்து நின்ற சப்தம் விழுந்தது. அதையடுத்து "கொஞ்ச நேரம் காக்க வைத்துவிட்டேன் போலிருக்கிறது. மன்னிக்க வேண்டும். எல்லாம் தயாராகி விட்டது. புறப்படலாமா?" என்று கேட்டுக் கொண்டே வந்தாள் ஜெயா.

"பரவாயில்லை. இதோ புறப்படலாம்" என்று சொல்லிக் கொண்டே எழுந்தார்கள். மற்றவர்களும் அவர்களைப் பின்பற்றினர்கள். மிராஸ்தார் செல்வநாயகம் பிள்ளை அவர்களை வழியனுப்பிவிட்டு சற்று நேரத்தில் தாமும் பந்தலுக்கு வருவதாகச் சொல்லி யனுப்பினர். தலைவர் முத்துசாமி முதலியவர்களை ஏற்றிக் கொண்டு கார் விழாப் பந்தலுக்கு விரைந்து சென்றது.

பாதிப் பந்தலுக்கு மேல் ஆண்களும் பெண்களுமாகக் கூட்டம் நிறைந்திருந்தது. பல தொண்டர்கள் அங்கும் இங்கும் அலைந்து கொண்டிருந்தார்கள். மேடை 'சீன்'களாலும், மலர் மாலைகளாலும், வாழைக் கம்பம், மாவிலை முதலியவைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. பந்தலின் உட்புறம் இருந்த ஒவ்வொரு கம்பத்திலும் ஒரு அட்டை மாட்டப் பெற்றிருந்தது. அதில் ஒவ்வொன்றிலும் பாரதியின் மணிவாசகங்கள் அழகாக கண்ணையும் கருத்தையும் கவரும் வண்ணம் எழுதப் பெற்றிருந்தன. கூட்டத்தினர் அவைகளை ஒவ்வொன்ருய் உரத்த குரலுடன் படித்துத் தமக்குள் அது பற்றி தங்கள் பாஷையில் விமரிசனம் செய்து கொண்டிருந்தார்கள். மேடையின் ஒரு புறத்தில் பந்தலை ஒட்டினற் போல் ஒரு பெரிய பாரதியார் உருவப் படம் வைத்து அலங்காரம் செய்து ஒரு துணியால் அப்படத்தை மறைத்து வைத்திருந்தது, அப்படத்தை யாரோ திறந்து வைக்கப் போகிருர்கள் என்பதை வெளிப்படுத்தியது. பாரதி விழா பற்றிய ஏற்பாடுகளை யெல்லாம் அவரவர்களுக்குத் தோன்றியபடி பேசிக் கொண்டார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில்தான் தலைவர் முதலியோர் காரில் வந்து இறங்கினர்கள். கசமுசசப்தம் அடியோடு நின்று, வருபவர்களின் மேல் கவனம்

சென்றது. தலைவர், முத்துசாமி முதலியோர் ஒருவர் பின் ஒருவர் மேடை மேல் ஏறினர்கள். திருநெல்வேலியிலிருந்து வந்த இரு தமிழறிஞர்களும் மேடையேறி ஒருபுறம் அமர்ந்தனர். விழா ஆரம்பமாயிற்று.

மேஜையின் அருகேயிருந்த 'மை'க்கைச் சற்று முன்புறம் தள்ளி வைத்துக் காரியதரிசியின் கட்டளைப்படி ஒரு பெண்மணி பாரதியின் 'வந்தேமாதரம்' பாடலை ராகமாலிகையில் அமைத்து இனிமையாகப் பாடினாள். அதை யடுத்து ஜெயாபாய் கம்பீரமாக மேடையில் தோன்றி எல்லோரையும் ஆர்வத்துடன் வரவேற்று, பாரதி திருநாள் விழாவுக்குப் பேராசிரியர் சிவகுருநாத பிள்ளையைத் தலைமை வகித்து சிறப்பாக நடத்திக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டாள்.

கரகோஷத்தினிடையே சிவகுருநாத பிள்ளை தலைவர் பீடத்தில் அமர்ந்தார். அவர் கழுத்தில் கனமான பெரிய மாலையொன்று விழுந்தது. மாலையைக் கழற்றி மேஜையின் மேல் வைத்து விட்டுப் பேச ஆரம்பித்தார்.

"பெரியோர்களே, தாய்மார்களே, அருமைச் சகோதரர்களே! அமரகவி பாரதியார் நினைவு விழாவாகிய இந்த மகத்தான விழாவுக்கு எங்கேயோ இருந்த என்னைத் தலைவராக்கியது பற்றி எனக்கே வியப்பாகத்தான் இருக்கிறது. இந்த விழாவுக்கு என்னைத் தலைமை தாங்கச் சொன்னபோது நான் முதலில் மறுத்தேன், என் தகுதியில்லாமையைக் காரணமாகக் கூறி. ஆயினும் இந்த விழாவின் காரணஸ்தர்களான மாதர் முன்னேற்றக் கழகத்தின் காரியதரிசி அவர்கள் என்னை விடவில்லை. பாரதி அன்பர் என்ற முறையில் யாரும் பாரதி விழாவுக்குத் தலைமை வகிக்கலாம் என்று கூறி என் வாயை அடைத்து விட்டார்கள். எனவே பாரதி அன்பனாகிய அடியேன், பாரதி விழாவில் தலைமை வகிக்க நேர்ந்தது என் வாழ்நாளிலேயே எனக்குக் கிடைத்த ஒரு மகத்தான பாக்யம் என்று கருதி ஒப்புக் கொண்டேன்" என்று சற்று நிதானித்த சமயத்தில் ஜெயா குனிந்து அவர் காதில் ஏதோ சொன்னாள். அதைக் காதில் வாங்கிக் கொண்டு, "அன்பர்களே, விழா மாமூல்படி ஆரம்பமாவதற்கு முன்னால் கொடியேற்று விழாவை நடத்துவது அவசியமா யிருக்கிறபடியால், எனதருமை நண்பரும், பிரபல பேச்சாளருமான திரு. முத்துசாமி அவர்களை நமது மூவர்ணக் கொடியை ஏற்றி வைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். கொடி ஏற்றி முடியும் வரையில் சபையோர் அமைதியாய் இருக்குமாறும், கொடியேற்றப்படுகையில் எல்லோரும் எழுந்து நிற்க வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

சபையில் கலகலப்பு ஏற்பட்டு சிலர் அப்போதே எழுந்து கொடியேற்று விழவைப் பார்க்க பந்தலை விட்டு கொடிமரம் நாட்டப் பட்டிருந்த இடத்திற்குச் செல்லலானார்கள். தலைவர் முதலியோர் மேடையை விட்டுக் கீழிறங்கி பந்த

லுக்குச் சற்றுதூரத்தில் வானளாவி யிருந்த கம்பத்தை நோக்கிப் புறப்பட்டனர். நீண்ட கயிற்றில் கட்டப் பட்டிருந்த கொடியின் முடிச்சை அவிழ்த்து நிதானமாகக் கொடியை ஏற்றினார் முத்துசாமி. உச்சியில் சென்றதும் காற்றடித்த வேகத்தில் மூவர்ணக்கொடி கம்பீரமாகப் பறந்தது! அதைத் தொடர்ந்து 'தாயின் மணிக்கொடி பாரீர்' என்ற இனிமையான குரல் 'மைக்' கிலிருந்து வெளிக் கிளம்பியது. கூட்டம் அந்தக் கம்பீரமான பாட்டில் மனதைப் பறிகொடுத்து ஆடாமல் அசையாமல் நின்றது. இரண்டு சரணங்களுடன் பாட்டு முடிந்தது. பாட்டு நின்றதும் கம்பத்தைச் சுற்றிக் கூடியிருந்த கூட்டத்தின் முன்னிலையில் மணிக்கொடியின் மகிமை பற்றியும், அதை நாம் போற்றி மகிழ்ந்திட வேண்டிய அவசியம் பற்றியும் கால் மணி நேரத்திற்கு மேல் இனிய சொற்பொழிவு ஆற்றினார் முத்துசாமி. சொற்பொழிவு முடிந்ததும் எல்லோரும் தத்தம் இடங்களுக்குத் திரும்பி வந்து அமர்ந்தனர்.

இரண்டு சிறுவர்கள் ஒன்று போல்சேர்ந்து பாடிய 'எந்தையும் தாயும்' பாடலுக்குப் பிறகு தலைவர் சிவகுருநாத பிள்ளை தமது முன்னுரையைத் தொடர்ந்து பேச ஆரம்பித்தார். முக்கால் மணி நேரத்திற்கு மேல் வளர்ந்த முன்னுரைக்குப் பின் திருநெல்வேலியிலிருந்து வந்த அறிஞர்கள் இருவரும் ஒருவர் பேசிய பின் ஒருவராய் முறையே 'பாரதியும் பாப்பாவும்,' 'பாரதி சகாப்தம்' என்னும் பொருள்கள் பற்றி அழகாகப் பேசினார்கள். முத்துசாமியும் தலைவரும், சபையினரும் அப் பிரசங்கங்களை வெகுவாக ரசித்தார்கள். அவர்கள் பிரசங்கங்களுக்குப் பிறகு ஒரு பாரதி பாடலுடன் விழா இடைவேளை போஜனத்திற்காக ஒத்தி வைக்கப் பட்டது. ஜெயாபாய் மேடையின் முன் வந்து பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் விழா ஆரம்பமாகும் என்றும், முதலில் மாதர் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களின் ஆடல் பாடல் இசை நிகழ்ச்சிகள் நடைபெறும் என்றும் அதன் பின் விழா நிகழ்ச்சிகள் — குறிப்பாக பிரபல பேச்சாளர் முத்துசாமியின் சொற்பொழிவு இருக்கிறது என்றும் அறிவித்தார். கும்பல் கலகலப்புடன் கலைந்தது. தலைவரும், முத்துசாமியும் சற்று முன் சொற்பொழிவாற்றிய இரு அறிஞர்களையும் பாராட்டி அவர்களைப் பற்றி குசலம் விசாரித்து அளவளாவினர்கள். சிவகுருநாதபிள்ளை, அவர்கள் பிரசங்கத்தில் குறிப்பிடத்தக்க அம்சங்களைப் பற்றிச் சொல்லி அவர்கள் கருத்து தமக்கு மிகவும் பொருத்தமாகத் தோன்றுகிறது என்று புகழ்ந்தார். பரஸ்பரம் பாராட்டுதலுக்குப் பின் எல்லோரும் மிராஸ்தார் செல்வநாயகம் பிள்ளை வீட்டை நோக்கிக் கிளம்பினர்கள்.

(தொடரும்)

★

ஒளியலைகள்

ஆர். கே. விசுவநாதன்

தொன்று தொட்டு நம் முன்னோர்கள் பல நிறங்களைப் பார்த்து வந்த போதிலும் அவற்றின் தன்மையை அறியவில்லை. நீலவானமும் நீலத்திரைக் கடலும் நம்மிடையே என்றென்றும் இருந்து வருகிற காட்சிகள். மரம், செடி, கொடிகளின் பச்சை நிறமும் பறவைகளின் பலவித நிறங்களும் அவர்கள் மனதைக் கவர்ந்திருக்க வேண்டும். நிறங்களுக்குக் காரணம் கண்டு பிடிக்கும் சோதனைகளில் முதல் முதல் இறங்கியவர் நியூட்டன் என்ற விஞ்ஞானி. இவர் ஒரு இருட்டறையில் ஒரு சிறு துவாரத்தின் வழியாக சூரியனது ஒளியைப் புகச் செய்து அதன் வழியில் ஒரு முப்பட்டைக் கண்ணாடியை வைத்தார். அதன் பின்னால் ஒரு திரையைப் பிடித்து முப்பட்டையின் மூலம் வெளிவரும்ஒளியை ஏற்றுப் பார்க்கும் போது அதில் பலவேறு நிறங்கள் கொண்ட தொரு ஒளிப்பட்டை விழுவதைக் கண்டார். இப்பட்டையின் ஒரு முனை சிவப்பாகவும் மற்ற முனை ஊதா நிறமாகவும் இருந்தது. இவற்றினிடையே ஆரஞ்சு, மஞ்சள், பச்சை, நீலம், அவுரி முதலிய நிறங்கள் தோன்றுவதைப் பார்த்தார். ஒளிக்கு முப்பட்டை நிறங்களைக் கொடுத்திருக்குமோ என்று நினைத்து மற்றொரு சோதனை செய்து பார்த்து அவ்வாறு இல்லை என்று தெரிந்து கொண்டார். இந்நிற ஒளிகளில் ஒரு பகுதியின் வழியில் மற்றொரு முப்பட்டையை வைத்து அதிலிருந்து அந்நிறம் மட்டுமே வெளிவருவதைக் கண்டு முதல் முப்பட்டை ஒளிக்கு நிறம் ஊட்டவில்லை என்று தெரிந்து கொண்டார். எனவே இந்நிறங்கள் எல்லாம் சூரியனது ஒளியில் இருக்கின்றன என்றும் முப்பட்டை இவற்றைத் தனித்தனியே பிரித்ததே ஒழிய ஒளிக்கு நிறங்களை ஊட்டவில்லை என்றும் தெரிய வந்தது. நியூட்டன் இத்துடன் நிற்கவில்லை. வட்ட வடிவுள்ள காகித அட்டை ஒன்றை எடுத்து, அதன் நடுவே ஒரு ஊசியை செருகி, அட்டை ஊசியைச் சுற்றி சுழலுமாறு செய்து கொண்டார். அட்டையின் மீது நிறப்பட்டையில் இவர் கண்டது போல வர்ணங்களைத் தீட்டிக் கொண்டு அட்டையை வேகமாகச் சுற்றி அப்பொழுது இந்நிறங்கள் ஒன்று கூடி ஏறக்குறைய வெண்ணிற உணர்ச்சியை தோற்றுவிப்பதைக் கண்டார். ஆகவே வெண்ணொளி பலநிற ஒளிகளின் சேர்க்கை என்று திட்டமாக அறியப்பட்டது. இதை வேறொரு விதமாக எடுத்துக் கூறுவதும் உண்டு.

பிரதிபலனத்தைப்போல ஒளிக்கு மற்றோர் முக்கிய நிகழ்ச்சி உண்டு. இதற்கு ஒளிக்கோட்டம் (Refraetion) என்று பெயர். ஒரு சிறு குச்சியின் ஒரு முனையைத் தண்ணீரில் சிறிது முழுக்கி, அதைச் சற்று ஒருபுறமாகச் சாய்த்துப் பிடித்தால் நீரினுள்ளே முழுகி இருக்

கும் பாகம் நீர் மட்டத்திலே ஒடிந்து மேற் புறமாக மடங்கி இருப்பது போலத் தோன்றுவதைக் காணலாம். முழுகி இருக்கும் பகுதியிலிருந்து ஒளி நீர் மட்டத்தைத் தாண்டி வெளியே வரும் போது அதன் திசை மாறுவதினால் இப்படித் தோன்றுகிறது. இத்திசை வேறு பாட்டையே ஒளிக்கோட்டம் என்று கூறுவார்கள். கண்ணாடி முப்பட்டைகள், வில்லைகள் இவற்றைக் கொண்டு ஒளியை கோட்டமடையச் செய்யலாம். ஒரு முப்பட்டையில் சூரியனது ஒளி கோட்டமடைந்து வெளிவரும் போது அதில் அடங்கியுள்ள பலநிற ஒளிகள் பலவேறு அளவுகளுக்குக் கோட்டம் அடைகின்றன. அதாவது ஒவ்வொரு நிற ஒளிக்கும் ஏற்பட்ட திசை மாற்றத்தின் அளவு ஒவ்வொரு விதமாக அமைகின்றது. மற்ற நிறங்களைக் காட்டிலும் சிவப்பு நிற ஒளிக்கு குறைவாகவும் ஊதா நிற ஒளிக்கு அதிகமாகவும் திசை மாற்றம் ஏற்படுகிறது. எனவே வெண்ணொளியில் பலவேறு நிறங்கள் இருக்கின்றன என்று கூறுவதற்குப் பதிலாக பலவேறு கோட்ட விலைப்பு கொண்ட ஒளிகள் இருப்பதாகக் கூறுவார்கள்.

வெண்ணொளியில் இப்பலவேறு நிற ஒளிகள் அமைந்துள்ள விதத்தை எடுத்துக் காட்ட நியூட்டன் ஓர் ஊகத்தை வெளியிட்டார். இவர் ஒளியைத் தரும் எல்லாப் பொருள்களும் ஏராளமான சிறிய துகள்களை வீசிக் கொண்டிருப்பதாகவும் அவற்றின் பாதைகள் தான் ஒளிக்கிரணங்கள் என்றும் கருதினார். இச்சிறு துகள்கள் எல்லாம் பலநிற ஒளிகளுக்குத் தகுந்தாற் போல சிறிதும் பெரிதுமாக இருக்க வேண்டுமென்று நினைத்தார். மற்ற நிற ஒளிகளைக் காட்டிலும் சிவப்பு நிற ஒளியின் துகள்கள் பெரியதாகவும் ஊதா நிற ஒளியின் துகள்கள் சிறியதாகவும் இருப்பதாக அபிப்ராயப் பட்டார். இத்துகள்கள் செல்லும் வேகம்தான் ஒளியின் வேகம் என்று கூறினார். சூரியனது ஒளி முப்பட்டையில் நுழையும் போது இத்துகள்கள் எல்லாம் பலவேறு அளவுக்கு கவரப்படுவதாக நினைத்தார். ஊதாஒளித்துகள்கள் அதிகமாகவும் சிவப்பு ஒளித்துகள்கள் குறைவாகவும் கவரப்படுவதால் ஊதா ஒளிக்கு அதிக திசை வேற்றுமையும், சிவப்பு ஒளிக்குக் குறைவான திசை வேற்றுமையும் ஏற்படுகிறது. இதன் விளைவாக வெண்ணொளியில் உள்ள பலவேறு நிறங்கள் தனித்தனியே பிரிக்கப்படுகின்றன. மேலும் கண்ணாடியின் கவர்ச்சியினால் பல நிற ஒளித்துகள்கள் வெவ்வேறு வேகங்களுடன் கண்ணாடியில் பரவிச் செல்லுகின்றன என்றும் ஒளி விசும்பில் செல்லுவதைவிட கண்ணாடித் தண்ணீர் முதலிய பொருள்களின் மூலம் செல்லும் போது அதிக வேகத்துடன் செல்ல வேண்டுமென்றும் முடிவு கட்டினார். இவ்வாறு அவர் கூறிய விவரங்களை மற்ற விஞ்ஞானிகள் முதலில் ஒப்புக்கொண்ட போதிலும் வேறு சில நிகழ்ச்சிகளின் விளைவாக அவர்கள் கூறியது தவறு என்று உணர்ந்தார்கள்.

நியூட்டன் இறந்து போன சில ஆண்டுகள் கழித்து 'எங்க்', 'ப்ரெனல்' என்ற விஞ்ஞானிகள் ஒளியினிடத்தில் ஓர் நூதன பண்பைக் கண்டார்கள். ஒளியும் ஒளியும் சேரும்போது சில சந்தர்ப்பங்களில் அதிக ஒளி உண்டாகாமல் இருள் உண்டாவதைக் கண்டார்கள். ஒளி துகள்களாக இருக்குமானால் இரண்டு ஒளிகள் சேரும் போது அதிகத் துகள்கள் அல்லவா கிடைக்க வேண்டும். இவ்வாறில்லாமல் துகள்களே அற்றுப் போகும்

நிலைமையல்லவா ஏற்படுகிறது. பொருளுக்கு அழிவில்லாதபோது இது எவ்வாறு உண்மையாக இருக்கக் கூடும் என்று நினைத்தார்கள். ஒளி அலை இயக்கம் என்று கொண்டால் இச்சம்பவத்திற்கு காரணம் சுலபமாகக் கூறலாம் என்று காட்டினார்கள். நீர் அலைகளைப் பற்றிய விவரங்களை நாமறிவோம். அசைவற்றிருக்கும் நீரில் ஒரு கல்லைப் போட்டவுடன் அலைத் தொடர் ஒன்று நாலு திசைகளிலும் பரவுவதைக் காண்கிறோம். கல் போட்ட இடத்திற்கு அருகே மற்றொரு கல்லை அதே சமயத்தில் போட்டால் இரண்டு அலைத் தொடர்கள் ஒருங்கே கிளம்பி நீர்ப்பரப்பில் பரவுவதைப் பார்க்கலாம். இவ்வாறு அலைகள் பரவிச் செல்லும் போது சில இடங்களில் ஒரு அலைத்தொடரின் முகடுகள் (Crests) மற்றொரு அலைத் தொடரின் முகடுகளோடு சேருவதையும் வேறு சில இடங்களில் ஒன்றினது முகடுகள் மற்றதின் அகடுகளுடன் (Troughs) சேருவதையும் பார்க்கலாம்.

இதனால் முதற் சொன்ன இடங்களில் நீர்த்துளிகளின் துடிப்பு வீச்சு அதிகமாவதையும், இரண்டாவதாகச் சொன்ன இடங்களில் நீர்த்துளிகளின் துடிப்பு வீச்சு சூன்யமாகி துகள்கள் அசைவற்று இருப்பதையும், வேறு சில இடங்களில் அவை ஒருமைப்பட்டு வலிமை மிகுந்து இருப்பதையும், வேறு சில இடங்களில் முரணுகி வலிமை இழந்து விடுவதையும் பார்க்கலாம். ஒளி அலை இயல்பு கொண்டிருக்குமானால் இந்த உபமானம் அதற்குப் பொருந்தும். இரண்டு ஒளி அலைத் தொடர்கள் சேரும் போது சில இடங்களில் அவை முரணுகி வலிமை இழந்து இருள் உண்டாக வேண்டும். இதுதான் முற்சொன்ன விஞ்ஞானிகள் சோதனையினால் கண்ட முடிவும். ஒளியின் அலை இயல்பு வேறு வழியிலும் ஊர்ஜிதப் படுத்தப்பட்டது. நியூட்டன் கொள்கைப்படி கண்ணாடி, தண்ணீர் இவற்றில் ஒளியின் வேகம் விசும்பில் இருப்பதைவிட அதிகமாக இருக்க வேண்டும். ஒளியை அலை இயக்கமாகக் கொண்டு இப்பொருள்களில் ஒளியின் கதி விசும்பில் இருப்பதைவிடக் குறைவாக இருக்க வேண்டுமென்று காட்டினார்கள். எது சரியென்று அறிய ஒரு பிரபல பிரஞ்சு விஞ்ஞானி சோதனை செய்து பார்த்தார். அவர் நீரில் ஒளி செல்லும் வேகத்தை அளந்து அது விசும்பில் இருப்பதைவிட குறைவாக இருப்பதைக் காட்டினார். எனவே ஒளி அலை இயக்கமாகத்தான் இருக்க வேண்டுமென்று முடிவு கட்டினார்கள்.

தண்ணீரில் சிறிது எண்ணெய்யைத் தெளித்து அது மிதக்கும் இடங்களை கவனித்தால் வானவில்லில் தோன்றுவது போல பல நிறங்கள் தோன்றுவதைப் பார்க்கலாம். ஆனால் இங்கு வானவில்லில் உள்ள எல்லா நிறங்களும் தெரியாது. சில நிறங்கள் நீக்கப்பட்டிருக்கும். வெவ்வேறு சாய்வுகளிலிருந்தும் எண்ணெய்ப்படலத்தைப் பார்க்கும் போது இந்நிறங்களின் தராதரமும் மாறுவதைக் கவனிக்கலாம். இது ஒளி அலைகளின் சேர்க்கையினால் ஏற்பட்ட விசித்திரமே ஒழிய வேறில்லை. இதைச் சற்று விளக்குவோம். கடலில் நீளம் மிகுந்த அலைகளைப் பார்த்திருக்கிறோம். குளம், ஏரிகளில் நீளம் குறைவான அலைகளை பார்த்திருக்கிறோம். இதைப் போல காற்றலைகளிலும் நீண்ட அலைகளும் உண்டு. நீளம் குறுகிய அலைகளும் உண்டு. நீளம் அதிகமான காற்றலைகள் குறைந்த சுருதியுள்ள ஒலியுணர்ச்சியையும், நீளம் குறைவான காற்றலைகள் அதிக சுருதியுள்ள ஒலி யுணர்ச்சியையும் உண்டுபண்ணுகிறது. ஒளி அலைகளிலும் பலவேறு நீளம்

கொண்ட அலைகள் இருக்கின்றன. நிறத்திற்கும் அலைக்கும் என்ன சம்பந்தம் என்று பார்க்கும் போது நிற வேற்றுமைக்குக் காரணம் அலை நீளத்தில் ஏற்பட்ட வேற்றுமைதான் என்று தெரிந்தது. ஒவ்வொரு நிற ஒளியின் அலைகளின் நீளம் ஒவ்வொரு விதமாக இருப்பதையும் மற்ற நிறங்களைக் காட்டிலும் சிவப்பு நிற ஒளி அலைகளின் நீளம் அதிகமாக இருப்பதையும் ஊதா நிற ஒளி அலைகளின் நீளம் குறைவாக இருப்பதையும் பார்த்தார்கள். தண்ணீரில் எண்ணெய் விழுந்த இடங்களில் தோன்றும் நிறங்களுக்குக் காரணத்தை இப்பொழுது சுலபமாக அறியலாம். எண்ணெய்ப் படலத்தின் மீது விழும் வெண்ணொளியில் சிறிது பாகம்தான் மேற்பரப்பில் பிரதிபலனம் ஆகிறது. பெரும் பகுதி உட்சென்று அடிப்பரப்பில் பிரதிபலனம் ஆகி திரும்புகிறது. உட்சென்று வெளிவரும் போது அதில் அடங்கியுள்ள பலவேறு நிறங்களுக்குண்டான ஒளி அலைகள் அவற்றின் நீளத்திற்கு தகுந்தாற்போல வெவ்வேருக பிரிக்கப்படுவதுடன் அலைகளின் சேர்க்கையினுல் சில நிற ஒளி அலைகள் ஒன்றுக்கொன்று முரணுகி வலிமை இழந்து விடுகின்றன. எஞ்சி வெளிவரும் நிறங்களை மட்டும் நாம் பார்க்கிருேம். வெவ்வேறு சாய்வுகளிலிருந்து பார்க்கும் போது சாய்வுக்குத் தகுந்தவாறு நீக்கப்படும் நிறமும் மாறுபடுகிறது. இதனுல் நாம் பார்க்கும் நிறங்களின் தராதரமும் மாறுபடுகிறது. இதிலிருந்து ஒளியின் நிறத்திற்கும் அதன் அலை நீளத்திற்குண்டான உறவை உணரலாம்.

★

ராஜாங்கத்தின் லட்சியம்

"ராஜாங்கம் என்ருல் என்ன?"

"உண்ண நிறைய உணவு; போதுமான ராணுவம்; நம்பிக்கை."

"மூன்றில் ஒன்றை விட்டுக் கொடுக்கும் படி வற்புறுத்தப் பட்டால், எது இன்றி வாழ்வாய்?"

"ராணுவ மின்றி வாழ ஒப்புக்கொள்ளுவேன்"

"மிச்சமுள்ள இரண்டு அம்சங்களில் ஏதேனும் ஒன்றை விட்டுக் கொடுக்க முடிந்தால் எதை மறந்து விடுவீர்?"

"அவசியம் உணவைத்தான்; உணவு போதாமல் இறக்கலாம்: அப்படித்தான் நம்மில் பலர் சாகின்றனர். நம்பிக்கையில்லாத ராஜாங்கம் உயிரோடு நிற்காது" என்ருர் சீனஞானி கன்பூஷியஸ்.

ஊ தூது சங்கே!

ராமசுப்பிரமணியம்

உலகத்தை விழிப்பிக்க ஊதூது சங்கே!
உண்மைக்குள் செழிப்பிக்க ஊதூது சங்கே!
கலகத்தை ஒழிக்கத்தான் ஊதூது சங்கே!
கருணைக்குள் களிக்கத்தான் ஊதூது சங்கே!

அடிமைப்பேய் ஓடிற்றென் றூதூது சங்கே!
ஆனந்தம் கூடிற்றென் றூதூது சங்கே!
குடிமைக்குள் வாழ்வோமென் றூதூது சங்கே!
குணவாழ்வு வாழ்வோமென் றூதூது சங்கே!

தமிழ் வாழ்வு ஓங்கிற்றென் றூதூது சங்கே!
சமவாழ்வு ஓங்கிற்றென் றூதூது சங்கே!
அமிழ்தாகும் தமிழென்று ஊதூது சங்கே!
அருளாகும் தமிழென்று ஊதூது சங்கே!

கற்கண்டு தமிழென்று ஊதூது சங்கே!
கனியாகும் தமிழென்று ஊதூது சங்கே!
சொற்கொண்டு பணிவோமென் றூதூது சங்கே!
துணையாகும் தமிழென்று ஊதூது சங்கே!

தியாகி

[கமலாட்சி ஸ்ரீனிவாசன்]

காரிருளகன்றது. பட்சி ஜாலங்கள் இயற்கைத் தேவிக்குத் திருப்பள்ளி யெழுச்சி பாடின. சூரியன் தன் பொற்றேரின் மேல் சோதிப் பிழம்பாக வான வெளியிலே பவனி வருகிறான். பொன்னிறமான கிரணங்கள் கடலின் அலைகளிலே படிவதால் நீர்ப்பரப்பு தங்கத்தகடாகப் பிரகாசிக்கிறது. கடற்காற்றையும் இயற்கையழகையும் தன் கண்களால் பருகித் தன்னை மறந்து கண்மூடி யோகியைப் போல் அமர்ந்திருக்கிறான் ஓர் யுவன். இயற்கை அவனை பித்தனாக்கி விட்டது போலும்.

மாசற்ற மதி வதனம். ரோஜா மலர் போன்ற சிவந்த கன்னங்கள். நீலோத் பலம் போன்ற நீண்ட கூரிய விழிகள். அடர்ந்து சுருண்ட கூந்தல். தளர்நடை இவற்றுடன் கூடிய ஒரு யுவதி அவ்விளைஞனின் எதிரே வந்தாள். அவளது விழிகளில் கண்ணீர் தேங்கி நின்றது. சந்தியா தேவியின் வரவினால் உலகிலே இருள் பரவுவதுபோல் அவளது முகத்திலே துன்பத்தின் சாயை படர்ந்திருந்தது. அவளது இதயத்தாமரையிலே துன்பப்புழு புகுந்து விட்டது போலும். தன் நாதனைக் காணப்பெற்ற அம்மங்கை முதலில் தன் மலர்க்கரங்களைக் குவித்து சூரிய தேவனை வணங்கினாள். பின்னர் பாறையின் மேல் உலகையும் தன்னையும் மறந்து உட்கார்ந்திருக்கும் ஆநந்த குமாரின் காலடியில் மண்டியிட்டமர்ந்தாள். கண் வழி நுழைந்த இயற்கையன்னையின் அற்புத சௌந்தர்யத்தைத் தன் மன மாளிகையிலமைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருந்த அவன் இதை எவ்வாறு அறிவான். பார்த்தாள் யுவதி. பெண்மையின் சமயோசித புத்தி அவளுக்கு உதவியது. குயிலினு மினிய குரலில் ஒரு கீத மிசைத்தாள். கலைஞனின் உணர்வு இசை யின்பத்திலே திரும்பியது. கண்விழித்தான். எதிரிலே தன் மனைவியைக் கண்டதும், வியப்பும் திகைப்புமடைந்தான். "மாலா நீ இங்கு ஏன் வந்தாய்?" என்ற சொற்கள் தானாகவே அவன் வாயினின்று வெளிப்பட்டன.

"ஏன் வந்தேனா? சொல்கிறேன் ஸ்வாமி. என் வாழ்வின் ஒளி நீங்கள். ஒளியின்றி தீபம் எவ்வாறு எரியும்? அன்று என் அழகைப் புகழ்ந்து பாடினீர்கள், ஓவியமாகத் தீட்டினீர்கள். நிலவும், சகோரமும் போலவும், மேகமும் — மயிலும் போலவும், கண்ணும் — அதன் ஒளியும் போலவும் நாம் பிரியாது இன்பம் நுகர்ந்த நாட்களை நினைத்துப் பாருங்கள். இதோ கர்ஜிக்கும் கடலைக் காட்டிலும் சிறந்தது என்னுள்ளத்திலே கொந்தளிக்கும் பிரேமைக்கடல். காலை வந்து கட்டிய பச்சிளம் பாலகனை விடுத்து உங்களைத் தேடி காடுமலைகளெல்லாம் கடந்து வந்திருக்கும் எனக்கு அன்புப் பிச்சை கொடுங்கள்" என்றாள் மாலா.

"பிரியே, இந்த விசால உலகத்தைக் கண்ணெடுத்துப் பார். நீ அழியும் மலர். நீ தரும் சுகமும் நிரந்தரமானதல்ல. இயற்கையழகு அழிவற்றது. புதுமை நிறைந்தது. அந்த சௌந்தர்யத்திலே நான் நித்ய சுகத்தை யடைகிறேன். இந்த சுகத்திலிருந்து என்னை ஒருவராலும் பிரிக்க முடியாது. உன் முயற்சி வீண். நீ வீடு செல்லலாம்" என்று கூறி விட்டு விரைவாக அவ்விடத்தை விட்டகன்றான்.

"என்ன கடின நெஞ்சம். இயற்கையழகு அழிவற்றது. ஆம் உண்மை, ஆனால் என் அன்பு அழியாதது. அத்தகைய அன்பை இயற்கையில் காணமுடியாது என்பது நினைவிருக்கட்டும். உங்களைப் பிரிந்து நான் உயிர் வாழ விரும்பவில்லை. இதோ — இக்கடலின் அலைகளிலே ஐக்கியமாகி என் துன்பத்திற்கு முடிவு காண்கிறேன்" என்று சொல்லிக் கொண்டே கடலை நெருங்கினாள் யுவதி.

'அம்மா நில் இறங்காதே — என்று கூறிக் கொண்டே அவளை நோக்கி விரைந்து வந்தார் ஒரு துறவி. தடைபட்ட நாகம்போல் நின்றாள் மாலா. ஏதோ ஒரு சக்தி அவளைத் தடுத்தது. திரும்பி வந்து சாதுவை வணங்கினாள்.

"மகளே, உலகம் துன்பம் நிறைந்ததுதான். துன்பத்திற்கு விடுதலை மரணத்தில் காண முயல்வது தவறு. பிறருக்குச் சேவை செய்வதிலே விடுதலையுண்டு, இன்பம் உண்டு — சாந்தியுண்டு. இந்த வீண் முயற்சியை விட்டு உன் இருப்பிடம் சென்று தின ஜன சேவையில் ஈடுபடு உன் கணவனை யடையலாம்" என்றார் துறவி. அவரது குரலில் அன்பும் உருக்கமும் நிறைந்திருந்தது. மாலா சிந்திக்கலானாள். "ஆம், துறவி கூறுவதிலும் உண்மையிருக்கிறது. விரஹதாபத்தினால் உயிர் விடுவதில் ஒரு பயனுமில்லை. சாது கூறுவது தான் சிறந்த மார்க்கம்' என்ற முடிவுக்கு வந்து சாதுவை வணங்கித் தன் வீடு சென்றாள். அன்று முதல் தன் பெற்றோருடனும் குழந்தையுடனும் மாளிகையை விட்டு ஒரு குடிலில் வசிக்கலானாள். அக்கிராமத்திலே உணவும் ஆடையுமின்றி வருந்தும் மக்களுக்கு ஒரு கைத்தொழில் சங்கம் ஏற்படுத்தி அவர்களிடம் சிறிது உழைப்பைப் பெற்று வயிறார உணவும் உடையும் அளித்தாள். நோயுற்றவர்களுக்கு சிறிதும் அருவருப்பின்றி மாலா தானே மனமுவந்து பணிவிடை செய்தும், தகுந்த மருத்துவ வசதியளித்தும் காப்பாற்றினாள். மக்களின் அறியாமையைப் போக்க கல்வியும் அளிக்கப்பட்டது. 'ஆநந்தாஸ்ரம'த்தில் அடைக்கலம் பெற்ற ஏழைகளின் உள்ளம் ஆநந்தமயமாக விளங்கியது. மாலாவின் அன்பும், கருணையும் ஏழை மக்களை வசீகரித்தது. எல்லோரும் அவளைத் தெய்வமாகப் போற்றினர். அவள் மனம் அமைதியடைந்தது. ஆனால் தன் உள்ளக் கோயிலில் குடிகொண்டுள்ள கணவனை எவ்வாறு மறக்க முடியும்? என்றாவது ஒருநாள் அவரை யடைவோம் என்ற எண்ணமே அவளை உயிர்தரிக்கச் செய்தது.

கடற்கரையில் மாலாவை விட்டுச் சென்ற ஆநந்த குமார் தன் குடிசைக்குச் சென்றான். அவனது உள்ளம் ஒரு நிலையில்லாது தவித்தது. வழக்கப்படி அன்றைய காட்சியை ஓவியமாகத் தீட்டலாமென்று எண்ணி எழுது கருவியை எடுத்து சித்திரம் வரைய ஆரம்பித்தான். அவன் கண் முன்னால் மாலா நிற்பது போன்ற ஒரு தோற்றம் — கருவியை வீசி எறிந்தான் — சீ, இதென்ன, மனம் சஞ்சலமடைகிறதே — சரி ஒரு கவிதை புனைவோம்' என்று நினைத்து சுவடியும் — எழுத்தாணி

யும் எடுத்தான் — அதே சமயத்தில் ‘மகனே, என்ன செய்கிறாய்’ என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தான் — சாந்தமும், புன்னகையும் முகத்தில் தவழ அங்கு நின்றார் துறவி. அவரை வரவேற்று ஆசனமளித்தான் குமார். சாது அவனைத் தன்னருகில் உட்கார வைத்து ‘‘அப்பா, நீ ஏதோ கலக்கமடைந்தது போலிருக்கிறாயே — காரணமென்ன? ’ என்று கேட்டார்.

‘‘சுவாமி, இயற்கை சௌந்தர்யத்திலே ஈடுபட்டு இன்ப துன்பங்களைத் துறந்தேன். இன்று என் மனக் கலக்கத்திற்கு இதுதான் காரணம் போலும்'' என்றான் குமார்.

இதைக்கேட்ட துறவி ‘‘குமார், இறைவன், கருணை, தியாகம், பொறுமை, கலைத் திறமை ஆகிய நற்குணங்களை மனித சமூகத்திற்கு சேவை செய்வதற்காகவே உனக்குக் கொடுத்திருக்கிறார். நீ அதை நல் வழியில் உபயோகிப்பதை விடுத்து, தன்னலம் கருதி இயற்கையின்பத்தைத் தனிமையாக நுகர்வதினால் கடமையினின்று தவறியவனாவாய். உன்னைப் போன்ற ஒரு தியாகியை நாடித்தான் நம் தாய் நாடு தவிக்கிறது. இன்றே தேச சேவையில் ஈடுபடு, மனச்சாந்தியடைவாய் என்றார் துறவி. தேசத்தின் நிலைமையைப்பற்றி அப்பொழுதுதான் அறிந்தான் குமார். குருவின் ஆணையைச் சிரமேற்கொண்டான்.

காலச் சக்கரம் சுழன்றது. நாடு முழுவதும் சுற்றி கிராமங்கள் தோறும் சென்று மக்களின் நிலையை ஆராய்ந்தான் குமார். மக்கள் அடிமை வாழ்விலே மதி மயங்கி ஒருவருக்கொருவர் சண்டையிட்டனர். நெற்றிவியர்வை நிலத்தில் விழப் பாடுபட்டும் உண்ண உணவும் — நிற்க நிழலும் — உடுக்க உடையுமின்றி வாடும் ஏழை மக்களின் பரிதாபம் அவன் உள்ளத்தை உருக்கியது. அரசன் தன்னலத்தையே பெரிதாகக் கருதினான். மன்னனின் கொடுமையை எதிர்க்க மக்களிடம் துணிவு இல்லை. எங்கு நோக்கினும் பஞ்சமும், லஞ்சப் பேயும் தலை விரித்தாடியது. நாடெங்கும் ஒரே கொந்தளிப்பு. ஏழை மக்களின் பரிதாப நிலையைத் தத்ரூபமாக விளக்கின ஆநந்த குமாரின் அமர கவிதைகளும் சித்திரங்களும். அவனது பேச்சிலே வீரம் தொனித்தது. மக்களின் உள்ளத்திலே வீரக்கனல் மூளவாரம்பித்தது. குமாரின் விடா முயற்சியும் சேவையும் வீண் போகவில்லை. மக்கள் அடிமை உறக்கத்தினின்று விழித்து வீறுகொண்டெழுந்தனர். பார்த்தான் அரசன் — இனிமேல் சும்மாயிருந்தால் மோசம் வந்து விடும். இந்த விஷவேரை முளையிலேயே கிள்ளி விட வேண்டும் என்று நினைத்து குமாரை ராஜத்துரோகக் குற்றம் சாட்டி கைது செய்ய உத்திர விட்டான். பெயருக்கு விசாரணை நடந்தது. குமாருக்கு மரண தண்டனையளிக்கப் பட்டது.

ஆநந்தாச்ரமத்திலே தற்செயலாகத் தங்கிய யாத்ரீகர்கள் மூலம் குமாரின் மரண தண்டனையைக் கேள்விப்பட்ட மாலா, தன் குழந்தை விஜய குமாருடன் ஓடோடியும் வந்தாள். கம்பீரமாக மேடையிலே, மரணத்தை எதிர்நோக்கி நிற்கும் கணவனின் பாதங்களில் விழுந்து கண்ணீர் பெருக்கினாள். அவளைத் தூக்கி மார்புறத் தழுவிக் கொண்ட குமார் ‘‘மாலா உன் அன்பு தூய்மையானது நான் தேச சேவையிலீடுபட்டேன். நீயோ தீன்ஜன சேவையிலீடு பட்டாய். நீ என்னிலும் சிறந்தவளாகி விட்டாய். பாரதமாதாவின் தவப்புதல்விகள் தியாகத்திலும், சேவையிலும் ஆடவர்களுக்

...குப் பின்னடைந்தவர்களல்ல என்பதை நிரூபித்துவிட்டாய். மாலா, நீ எனக்காக வருந்தாமல் முழு மனதுடன் முன்போல் பொது ஜன சேவை செய்ய வேண்டும் என்பதே என் வேண்டுகோள்" என்றான் பின் ஜனங்களை நோக்கி "சகோதரர்களே கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டின் கடும் புலி வாழும் காடு நன்றே' யாயினும் தன்னலத்தை நாடி வேறு நாடு சென்றால் சுகமாக வாழலாம் என்ற எண்ணத்தை ஒழியுங்கள். பாலூட்டி சீராட்டி அன்புடன் வளர்த்த அன்னையை அடிமையரக்கன் கரங்களில் தவிக்கவிட்டுத் தன் சுகமே பெரிதாக எண்ணுவதுதான் அன்னையின் அளப்பரிய அன்பிற்குப் பரிசா? கத்தியின்றி, படைத்துணையின்றி ஒரு பெரிய சாம்ராஜ்யத்தை எவ்வாறு எதிர்ப்பது என்ற அச்சத்தை விடுங்கள். ஒற்றுமை உங்கள் கவசம், அஹிம்சை ஆயுதம்.

இதைக் கொண்டு அரசனையல்ல, அரசனின் அநீதியை, அதர்மத்தை எதிர்ப்பது உங்கள் கடமை. தர்மமே ஜயம் பெறும். என் தாய் நாடு உங்கள் விடா முயற்சியினால் விடுதலை பெறும் என்ற நம்பிக்கையுடன் உங்களிடம் விடை பெற்றுக் கொள்கிறேன்" என்றான். குமாரின் வம்சத்தையே நிர்மூலமாக்கிவிட வேண்டும் என்று மன்னன் ஆணையிட்டிருந்தபடியால் கொலைஞர், மாலாவையும் மைந்தன் விஜய குமாரையும், குமாரின் கண்ணெதிரிலேயே கொலை செய்து விட்டனர். கூடியிருந்த ஜனங்கள் இதைக் கண்டு மனம் துடித்து கொலையாளிகளையெதிர்க்க ஆரம்பித்தனர். குமார் சிறிதும் மனங்கலங்காமல் அவர்களைக் கையமர்த்தி "சகோதரர்களே, 'பகைவனுக் கருள்வாய் நன்னெஞ்சே' என்ற அமர கவிதையை மறந்து விட்டீர்களா? எய்தவனிருக்க அம்பை நோவதுபோல் மன்னனின் ஆணைக்குக் கீழ்படியும் இந்த ஏழைகளின் மேல் கோபப்படுவதில் பயன் என்ன? என்னை நேசிப்பது உண்மையானால் இச் செய்கையை விடுத்து அமைதியாயிருங்கள்" என்றான். மந்திரத்தால் கட்டுண்டவர்கள் போல் அசையாது நின்று விட்டனர் ஜனங்கள்.

கொலையாளிகள் தங்கள் வேலையை முடித்து விட்டனர். நாட்கள் உருண்டோடி விட்டன. ஆநந்த குமாரின் தியாகம் வீண் போகவில்லை. குமாரின் ஆத்மத் தியாகம் நாட்டின் விடுதலைக்கு வழி காட்டியது. நாட்டிலே பெரும் புரட்சி. மக்கள் யாவரும் ஒன்று சேர்ந்து எதிர்த்தால் அரசன் என்ன செய்ய முடியும். தன் தவறை உணர்ந்து மக்களின் மன்னிப்பைப் பெற்றான் அரசன். குடி அரசு நிலை பெற்றது. வறுமைப் பிணி அகன்றது. ஆநந்த குமார், மாலா, விஜயகுமார், மூவருக்கும் தலை நகரிலே கோயிலமைத்தனர். குமாரைத் 'தியாகி' என்ற பெயரால் தம் குல தெய்வமாகப் போற்றினர் மங்களபுரி வாசிகள்.

சிந்தையறிந்து வாடி....!

எஸ். ஆறுமுகம்

"ஸார் போஸ்ட்!"

அரைத் தூக்கத்தில் அமிழ்ந்திருந்த கண்கள் தபால்காரனது அக்குரலைக் கேட்டதும் மெல்லத் திறந்தன. நாற்காலியில் அமர்ந்திருந்தபடியே அருகிலிருந்த ஜன்னலின் திரையை விலக்கி எதிரே நோக்கினேன். அதற்குள் தபால்காரன் கவர் ஒன்றை வீசி எறிந்துவிட்டு அப்பால் நகர்ந்து சென்றான்.

கவனம் உறையின் மீது சென்றது. எழுத்துக்கள் முத்து முத்தாக அச்சடித்தாற்போல இருந்தன. என் தங்கையிடமிருந்துதான் கடிதம் வந்திருக்கிறதென்பதை அறிந்ததும் என் மனம் வேறு விதத்தில் அடித்துக்கொண்டது. அவளிடமிருந்து சில தினங்களுக்கு முன்பு வந்திருந்த லெட்டருக்கு இன்னும் பதில்கூடப் போடவில்லை. அதற்குள் மற்றொரு கடிதம். மனம் நிலைதடுமாறிச் சுழல ஆரம்பித்தது.

கவரைப் பிரித்துப் பார்த்தேன். விசாலந்தான் எழுதியிருந்தாள்.

அண்ணா,



நான் எழுதிய கடிதத்திற்குப் பதில் தங்களிடமிருந்து கிடைக்கு முன்பே மற்றொன்று எழுதியிருப்பது கண்டு ஒரு வேளை தாங்கள் ஆச்சர்யப் படலாம்.

உங்களுக்கு நினைவிருக்கிறதா வனமாலாவைப்பற்றி? அவள் ரொம்பவும் அதிர்ஷ்டக்காரி; கொடுத்து வைத்தவள்; அதிர்ஷ்டம் வரும்போது நம்மிடமெல்லாம் சொல்லிக் கொண்டா வருகிறது என்றெல்லாம் நான் எவ்வளவு தடவை தங்களிடம் சொல்லியிருக்கிறேன். ஆனால் அதிர்ஷ்டக்காரியாக இருந்ததெல்லாம் அவளுக்கு மணமான அந்த ஒரு சில மாதங்கள் வரையில்தானும். அப்புறம் அவள் பட்ட கஷ்டம் தெய்வத்திற்குத்தான் தெரியுமாம்.

நேற்று எனக்குத் தன் உள்ளத்தைத் திறந்து காட்டி கடிதமொன்று எழுதியிருக்கிறாள். அதையும் இத்துடன் அனுப்பியிருக்கிறேன். படித்துப் பாருங்கள் தெய்வம் அவளை நிரம்பவும் சோதித்து விட்டது.

அவள் உடல் நிலை மிகவும் கவலைக்கிடமாயிருக்கிறதென்றும் தனக்கு ஆதரவாக யாருமே தெரிந்தவர்கள் கிடையாதென்றும் எழுதியுள்ளாள். நான் அங்கு சென்று சில தினங்கள் தங்கியிருந்தால் மனதிற்குக் கொஞ்சம் ஆறுதலாயிருக்குமாம். பாவம்! பழகின தோஷம்! நானும் இன்று சாயங்காலம் புறப்படப் போகிறேன். 'அவரி'டம்கூட கேட்டுவிட்டேன்.

விசாலாட்சி

வனமாலாவைப்பற்றி நினைவிருக்கிறதா? இந்த ஒரு வரியை மட்டிலும் திரும்பத் திரும்பப் படித்தேன். என்னையுமறியாமல் என் இதழ்க் கடையிலோர் முறுவல் இழைந்து சென்றது. அதே சமயத்தில் ஏதோ ஓர்வித ஏக்கம் என்னுள் எழுந்த சமயம் என் மனம் அதிக சஞ்சல மடைந்தது.

கால காரணங்கள் எதுவுமின்றி வாழ்க்கையில் எத்தனையோ விஷயங்கள் சம்பவிக்கின்றன. அவை நேர்ந்ததற்கு நேர்ந்ததுதான் அத்தாட்சி. அம்மாதிரிதான் முன்னும் பின்னுமற்றது எங்கள் சந்திப்பு.

★

வனமாலாவைக் கண்டது சரியாக இரண்டோ அல்லது மூன்றோ தடவைதான். ஆனால் பன்னெடு நாளாக மனமொருமித்துப் பழகினது போன்ற ஓர்வித அன்பு அடிக்கடி என் இதய அந்தரங்கத்தில் உதித்தெழும். என் கருத்திற்கும் புலனாகாதவாறு எப்படியோ என்னுள் அவள் நினைவு அடிக்கடி எழுகின்றது. அவளைப்பற்றி எண்ணும் போதெல்லாம் ஏனோ என் மனம் களிநடம் புரிகின்றது!

அப்போதுதான் ஞாபகம் வந்தது, விசாலம் குறிப்பிட்ட மற்றொரு விகிதம் பற்றி. உரையை உதறினேன். பின்னுமோர் கடிதம் விழுந்தது. எடுத்துப் பிரித்தேன். அது என் தங்கைக்கு வனமாலா எழுதியிருந்த லெட்டர்.

என் அருமை விசாலம்,

நேற்று டாக்டர் வந்து என் உடல் நிலையைப் பரிசோதித்துச் சென்றார். ஜுரவேகம் கொஞ்சம் தணிந்திருந்தது. ஆனால் மனம் மட்டிலும் கருத்திற்கும் சிந்தனைக்கும் பிடிபடாத எண்ணச் சுழலில் சிக்கித் தவித்தது. என்னவெல்லாமோ அசம்பாவிதமான எண்ணங்கள் — நிராசையின் நிழலில் வட்டமிட்ட அற்ப நினைவுகள் தளர்ந்தொடுங்கிப்போன என் பேதை மனதை அரிக்க ஆரம்பித்து விட்டன. புண்பட்டுப் புரையோடியிருக்கும் என் நெஞ்சத்தில் கொந்தளிக்கும் குமுறல்கள் என்னை வாட்டுகின்றன. அத்துயரைச் சகிக்கத்தான் எனக்கு உயிரேது? அல்லது உடலில் உரைந்திட்ட வளமேது?

என் வாழ்க்கைப் பூங்காவில் இளந்தென்றல் என்றென்றும் நிரந்தரமாக இழைந்து செல்லும் என எண்ணி உள்ளம் பூரித்தேன். ஆனால் அதே சமயம், அவ்விளந்தென்றல் பின்னர்ப் புயலாக மாறி இங்ஙனம் மனதை நிலை தடுமாறச் செய்யும் என்று கனவில்கூட கருதவில்லையே.

அன்று "அவர்" என்னை வந்து பார்த்து மனத்திற்குப் பிடித்து விட்டது என்றார். எனக்கும் அவரைப் பிடித்திருந்தது. மேலும் இந்த சம்பவத்தினால் எங்கள் குடும்பத்திற்கும் அதிக ஆதரவாக இருக்குமென்ற எண்ணம். தவிரவும் முகில் நிறைந்த வானம் எப்படியேனும் மழை பொழிந்து தானே தீரவேண்டும்?

என் கணவருக்கு நான் சகதர்மிணியின் ஸ்தானம் வகித்தேன். அவர் என்பேரில் தன் உயிர் முழுவதையும் வைத்திருந்தார். நான் அவருக்கு வாழ்க்கைப் பட்ட புதிதில் நிலவும் ஒளியும் போல, மலரும் மணமும் மாதிரி, தந்தியும் அதன் இனிய நாதமும் போன்று அவ்வளவு அந்யோந்யமாக வாழ்க்கை நடத்தி வந்தோம். ஆனால் அந்த ஒளிதரும் நிலவு பிறகு அஸ்தமித்துவிடும், மணங்கமழும் மலரும் வாடிவிடும், இசைதரும் தந்தி இற்றுவிடும் என்று முன்கூட்டியே அறிந்துகொள்ள நான் என்ன மாமுனியா?

ஆபீஸ் எப்போது முடியும் என்று காத்துக் கொண்டிருப்பாரோ என்னமோ, ஆபீஸ் முடிந்ததும் ஓடோடி வருவார். கையில் காப்பியுடன் அவர் வரவிற்காகக் காத்துக்கொண்டேயிருப்பேன், வசந்தத்தின் வரவு பார்க்கும் வானம்பாடியைப்போல. காப்பி அருந்தக்கூட நினைவின்றி என்னைத்

தனியாக அழைத்துச் சென்று அளவளாவிப் பேச ஆரம்பித்து விடுவார். நிலா மலர்ந்த இரவுகளில் மலர்மணம் உண்டு ஊசலாடிச் செல்லும் மந்த மாருதத்தை அனுபவித்த வண்ணம் காலங்கடந்து போவதுகூடத் தோன்ருமல் இதயத்துடன் இதயம் பேசவிட்டு வாய்மூடிமௌனிகளாக வீற்றிருந்த அந்த இன்ப மிகுந்த நன்னுட்கள் எத்தனையோ! அவர் என்மீது காட்டும் தனிப்பட்ட பிரேமையில் தினந்தினம் புதுப்புது ஆடைவகைகள் விதவிதமான வண்ணமலர்கள் வாங்கியனுப்பத் தவறவே மாட்டார். எனக்குக்கூட அவரிடம் இதைப் பற்றிக் கொஞ்சம் சொல்ல வேண்டுமென்றிருந்தது. யாராகிலும் என்னவேனும் நினைத்துக் கொள்வார்கள் என்ற லஜ்ஜை ஒரு பக்கம். 'மனுஷாள்' கண் பட்டு விட்டால் — ஐயையோ அது மிகவும் பொல்லாததாச்சே என்ற அச்சம் ஒரு பக்கம்.

எனக்கு இதெல்லாம் கனவு போல் தோன்றியது. அப்பொழுது காண்பது கனவல்ல நினைவுதான் என்று மனம் அறிவுறுத்தும் அந்த க்ஷணம் என் பெண்ணிதயம் குதூகல மடைவதை எங்ஙனம் வர்ணிக்க இயலும்?

ஆனல் இவ்விதம் என்மீது தன் அன்பு பூராவையும் வைத்திருந்த அதே என் கணவர்தானு இன்று என்னைப்பற்றி எள்ளளவுங் கவலையில்லாமல் எங்கோ ஆனந்த வாரிதியில் மிதந்து கொண்டிருக்கிருர்? இதுதான் விதியின் விந்தை விளையாட்டா?

சின்னக் குழந்தைக்கு அழகான விளையாட்டுப் பொம்மை ஒன்றைக் கொடுத்து ஏமாற்றுவது போல ஆண்டவன் என் வாழ்வில் இன்பத்தைக் காட்டி வஞ்சித்து விட்டான். என் இதயம் புனைந்த இன்பக் கனவுகள் அனைத்தும் உருக்குலைந்து விட்டன. மனம் கட்டி வந்த மனக்கோட்டைகள் சுக்கல் நூருக வெடித்து மண்ணேடு மண்ணுகித் தரைமட்டமாகி விட்டன.

அன்று ஒரு நாள் அவர் ஊரிலில்லை. எங்கேயோ "ஷூட்டிங்" விஷயமாக வெளியூர் சென்றிருந்தார். அவர் பெட்டியைத் திறந்து பார்க்க வேண்டுமென்றிருந்தது எனக்கு. மெதுவாகப் பெட்டியைத் திறந்துவிட்டேன். எனக்கு தூக்கிவாரிப்போட்டது. எடுத்த எடுப்பில் என் கண்ணில் பட்டவை ஒரு சில போட்டோக்கள் — எறிட்டு விழித்தேன். பெண்களின் பிரதிபிம்பங்கள் அவற்றில் காணப்பட்டன. அவை ஒவ்வொன்றிலும் என் கணவர் — அன்று அக்கினி சாட்சியாக என்றென்றும் என்னையன்றி வேருெரு பெண்ணை மனதில்கூட நினைப்பதில்லையென அறுதியிட்டு உறுதிகூறி என் கை பிடித்த அதே என் பதி — காட்சியளித்தார். எனக்கு விஷயம் விளங்கி விட்டது. அதற்கேற்றுப் போல அவரது செய்கைகள் ஒவ்வொன்றிலும் அதிகமான வித்தியாசம் காணப்பட்டது.

ஒரு நாள் அவர் வருவதற்கு வெகு நாழியாகிவிட்டது. காலந் தவறிக் கடைசியில் வந்து சேர்ந்தார். அவரை வரவேற்க அருகில் சென்றேன். என்னல் சகிக்க முடியவில்லை. 'குப்'பென்று அடித்தது ஒருவித துர்நாற்றம். இதைவிட வேறு என்ன வேண்டும் மனிதரின் மனதைக் குலைக்க?

அன்றிலிருந்து அவர் செய்கை ஒவ்வொன்றையும் வெறுக்க ஆரம்பித்தது உள்ளம். அந்தப் பொழுதில் "கல்லானுலும் கணவன் புல்லானுலும் புருஷன் அல்லவா?" என்ற வேதாந்தம் எழ ஆரம்பிக்கும். உடனே பழைய சுவட்டிலேயே மனம் திரும்பிவிடும். இந்நிலையில் பின்னும் சில மாதங்

கள் மறைந்தன. அன்று ஒரு நாள் 'ப்யூன்' கடிதமொன்றைக் கொண்டு வந்து நீட்டினுன். வாசித்துப் பார்த்தேன். பம்பாய்க்கு ஸ்டுடியோ விஷயமாகச் செல்வதாயும் திரும்பிவரும் நாள் நிச்சயமாக சொல்வதற்கில்லை என்றும், ஆனுல் பணம் மட்டும் மாதா மாதம் தவருது அனுப்புவதாயும் எழுதியிருந்தார். பணம்! இதையா நான் அவரிடமிருந்து எதிர்பார்த்தேன்?

அன்று சென்றவர்தான். முழுசாக ஒரு வருஷம் பூர்த்தியாகப் போகிறது. நாள் தவறினுலும் லெட்டர் தவருமல் எப்படியோ அவர் இருக்கும் இடமறிந்து விகிதம் எழுதினுலும் சாஸ்திரத்திற்குக்கூட அவர் ஒரு பதில்கூட இதுவரை எழுதவேயில்லை. அவருக்கென்ன? இன்பத்தின் உச்சியில் தலை கால் தெரியாமல் மகிழும் அவருக்கு சுருதிகெட்டு மீட்டப்படாத வீணையில் உறங்கிக் கிடக்கும் இன்னிசை போன்ற என்னைப்பற்றி, சோகக் கடலில் சிக்கிக் கரைகாணுமல் துடிக்கும் என்னைப்பற்றி, என்ன கவலை? எந்த மோஹினி விரித்த மாயவலையில் இதுகாறும் சிக்கித் தவிக்கின்ருரோ?

என் தந்தை இந்த அபலை படும் அல்லலின் குவியல்களைப் பார்த்து மனம் நோகாமலிருக்க முன்னமேயே கண்ணை மூடிவிட்டார். திக்கற்ற என்னைத் தெய்வமும் கைவிட்டுவிட்டது. என் உடல் நிலை பற்றி கவலை கொண்ட அடுத்த வீட்டு அம்மாவிற்கும் உடம்புக்கு ஆகவில்லை.

மனம் ஒன்றிலும் நாடவில்லை. தயவு செய்து நீ இங்கு வந்து இரண்டு மூன்று நாட்கள் தங்கிப் போவாயா? அப்போதுதான் எனக்கு மனம் கொஞ்சம் ஆறுதலடையும்போலத் தோன்றுகிறது. எல்லாம் பழகிய தோஷம்! நீ வந்தால் ரொம்பவும் ஒத்தாசையாயிருக்கும். உனக்குக் கோடிப் புண்ணியம் உண்டு.

அதற்குள் என் வாழ்க்கை முடிந்து விட்டால் அந்த ''தர்மராஜனு''க்கு என் அந்தராத்மா செலுத்தும் நன்றி கற்பனைக்கும் எட்டாததாயிருக்கும். அவ்வித விடுதலையை எதிர்பார்த்துத்தானே இவ்வளவு தூரம் தவங்கிடந்ததெல்லாம்!

உன் சினேகிதி

அபலை வனமாலா

கடிதத்தைப் படித்து முடித்தேன். கண்களில் நீர் மல்கியது. கற்பனைப் பறவை சிறகடித்துப் பறந்தது. எங்கேயோ படித்த ஒரு உதாரணம் நினைவிற்கு வந்தது. ஆமாம்; ஆண்களை வண்டினங்கட்கு உவமையாகக் கூறியிருக்கின்ருர் ஓர் பழுத்த அனுபவசாலி.

காலைக் கதிரவனின் கதிர்முத்தத்தில் இதழ் அவிழ்ந்து நிற்கும் வண்ண மலர்களில் தோய்ந்திருக்கும் மதுரத் தேனை அருந்த அவற்றைச் சுற்றி இதயகீதம் இசைத்துக்கொண்டு செல்லும் வண்டுகள் மதுவை உண்டு மாந்தித் திளைத்த பின்னர் வேறு மலர்களை நாடிச் செல்லுகின்றன. இவ்விதமே பின்னும் செல்லுகின்றன மது தோய்ந்த நறுமலர்கள் ஒவ்வொன்றையும் நோக்கி. அதே மாதிரி

தான் ஆண்களும். அந்தோ! என்ன அதிசய உலகம்! வாழ்வின் நியதி: நேர்மை அனைத்தும் இதுதானா?

★

யௌவனத்தின் சோபை புது மெருகிட்டுப் படர்ந்த சமயம். அப்போது நான் திருச்சி காலேஜில் பி. ஏ. இரண்டாம் வகுப்பில் படித்து வந்தேன். கூட என் தங்கை விசாலம் எஸ். எஸ். எல் ஸி வாசித்துக் கொண்டிருந்தாள். சௌகர்யத்தை உத்தேசித்து டவுனில் வீடொன்று வாடகைக்குப் பிடித்துக் கொண்டு வசித்து வந்தோம்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. சர்வ கலாசாலைப் பரீட்சை சமயம். கவனம் 'ஷேக்ஸ் பியரி'ல் ஒன்றியிருந்தது. உள்ளத்தை உருகச் செய்யும் உரையாடலின் கட்டம்.

திடுமென என் கவனம் வேறு பக்கம் திரும்பியது. சலங்கை சப்தம் கேட்டதும் சப்தம் வந்த திசையை நோக்கினேன் மாடியில் நின்று கொண்டே.

நன்றாகத் தெரிந்தது. யாரோ ஒரு பெண் நடனமாடிக் கொண்டிருந்தாள். 'சட்'டென்று எனக்கு நினைவு வந்தது. சில நாட்களுக்கு முன்னர் என்னிடம் கூறின சமாச்சாரம். ஆம்; அந்தப் பெண்ணாகத்தான் இருக்க வேண்டும். அவர்கள் கலாசாலையில் நடக்கப் போகும் வருஷ விழாவிற்காக தயாரித்திருக்கும் நிகழ்ச்சியில் நடனமாடப் போகும் பெண் இவளாகத்தான் இருக்க வேண்டுமென்று முடிவு செய்தேன். விசாலத்திற்கும் அந்நிகழ்ச்சியில் முக்கிய வேஷம் உண்டு.

நடனம் பாட்டு என்றால் எனக்குப் பிராணன். ஆவல் அதிகரிக்கக் கூர்ந்து கவனித்தேன். அவள் அரவுபோல் நெளிந்தாள் கடல் அலைபோல ஆடினாள்.

"சிந்தையறிந்து வாடி
செல்வக் குமரன்
செந்தூரிடம் தங்கும்
பொன்தாள் மலர்க் கந்தன்
சிந்தையறிந்து வாடி......"

என்று பாடிக்கொண்டே அபிநய பாவத்தில் 'ஜம் ஜம்' என்று சலங்கை சப்திக்க ஆடினாள். உணர்ச்சி வசப்பட்டுத் தன்னை மறந்தாடிய அவளது இன்னிசைக் கீதம் என்னுள் இன்பவலை பின்னியது. கண்களைத் தீட்டிக் கொண்டு ஏறிட்டுப் பார்த்தேன். நவயௌவனத்தாற் பொலிவுற்ற எலுமிச்சம் பழம் போன்ற மேனி. பருமனுமில்லாமல் ஒல்லியுமில்லாமல் ரொம்பவும் கச்சிதமாகக் காணப்பட்டாள். அவளது முகச் சாயலிலே ஒரு கவர்ச்சி. அந்த வசீகரத்தில் ஒரு குளுமை. அழகிய சரீரத்தைத் தாங்க தங்களுக்குக் கிடைத்த பவித்திரத் தன்மையை வெகு ரகசியமாய்ச் சொல்வதே போன்று பூமியில் அழகாகப் பதிந்து செல்லும் பாதங்கள் என் கலை வெறியை மிகைப் படுத்திற்று.

யௌவனம் கொழிக்கும் அவ்வனிதையைக் கண்டமாத்திரத்தில் விவரம் விளங்காத ஓர் உணர்வு



என்னுள் எங்கும் பரவிச் சென்றது. அதை வெளியிடுவதற்குத் தேவையான மொழிநயம் இன்னமும் எனக்கு உதயமாக மாட்டேனென்கிறதே!

கணநேரந்தான் சிந்தித்தேன்.

'அவள்! ஆமாம்; செல்வத்தில் புரளும் ஓர் பணக்காரரின் திருக்குமாரியாகத்தான் இருப்பாள். அவள் அணிந்திருந்த ஆடை, அழகுக்கு அழகு செய்யும் ஆபரணங்கள், இவைகள்தான் அதற்குக் கட்டியங் கூறுகின்றனவே! அவளது கொவ்வைக் கனி வாயினின்றும் உதிரும் ஒவ்வொரு கட்டளைக்கும் அந்த க்ஷணமே அடிபணிய எவ்வளவு வேலைக்காரர் காத்திருக்கின்றனரோ? படிப்பு! செல்வக் குடும்பத்திற்குத் தேவையில்லைதான்; எனினும் நாலுபேர் மெச்சவாகிலும் ஆங்கிலப் படிப்பின் வாசனை சிறிதேனும் வேண்டுவது சகஜந்தானே!

என்னமோ நினைத்துக் கொண்டேன். டிராயரைத் திறந்து கைக்காமராவை எடுத்தேன். மறுகணம் அவளது அந்த நாட்டியமாடும் 'போஸ்' படரூபமாக என் கைக்கு வந்து விட்டது. இக்காரியம் குறித்து முன்பின் யோசனை எதுவுமில்லை. ஆனால் நான் செய்தது நல்லதோ கெட்டதோ, ஞாயமோ தவறோ எனக்குப் புரியவில்லை.

அலைபாயும் உள்ளத்திற்கு ஓர் முடிவுதேட எண்ணி மாடிப்படிகளிலிருந்து கீழிறங்கினேன். அவள் விசாலத்தினருகில் தூணில் சாய்ந்திருந்தாள். சற்றுமுன் சர்வாலங்கார பூஷிதையாகப் பரிணமித்த அந்தப்பெண் மிகவும் சர்வசாதாரணமான ஆடையுடன் நின்று கொண்டிருந்தாள். அருகில் நோக்கினேன். அவள் அணிந்திருந்த ஆடைகளும் ஆபரணங்களும் தரையில் கிடந்தன. நகைகள் நகைத்துக் கண் சிமிட்டின.

ஏதேதோ கேட்கவேண்டும்; அவள் குடும்ப சரிதம் முழுமையும் ஒன்று பாக்கியில்லாமல் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டும் என்று எண்ணமிட்டேன். வார்த்தை ஒன்றுகூட வெளிக்கிளம்பவில்லை. அப்படியே வாயடைத்து நின்றேன்.

"அவள் பெயர்!"

வாய் அசைந்தால்தானே. அது தான் சொல்லறியா உணர்ச்சியால் உரம்பெற்றுக் கல்மாதிரி இறுகி ஒட்டிக்கொண்டு விட்டதே. உணர்ச்சியின் வேகம் பேசுந்திறனைக்கூட ஸ்வீகரித்து விட்டது போலும்.

'விசாலம் எல்லாவற்றையும் பத்திரமாக எடுத்து வை. நான் போய் வருகிறேன்' என்று முறுவலித்தபடி சொல்லிவிட்டு நகர்ந்தாள் அவள். அச்சமயம் என் செவிகளைவிட கூர்மை பெற்ற விழிகள் அவள்மீது நிலைத்து நின்றன. அதே சமயம் அவளும் பார்த்து விட்டாள். கணநேரச் சந்திப்பு! ஆஹா! அந்தப் பார்வையில்தான் என்ன குழைவு! அவளது ரோஜா நிறக் கன்னங்களில் நாணம் குமிழிட்டது. என்ன! பருவம் அப்பாவைக்கு நாணத்தைப் போதித்து விட்டதா?

"அண்ணா"

விசாலம் கூப்பிட்ட பிறகுதான் சுய நினைவு வந்தது.

"யார் இந்தப் பெண்?"

"இவளா, என் பள்ளிச் சினேகிதி"

விசாலம் பலே அரட்டை. அவள் வார்த்தையை ரத்தினச் சுருக்கமாக்கிக் கொண்டாள் என் பொறுமையைப் பரிசோதிப்பவள்போல. அத்துடன் நானா விடுபவன். ஏதேதோ கேட்டேன். அவளும் பதில் சொன்னாள்.

அந்தப் பெண்ணிற்கு அப்பா மாத்திரம்தான் இருக்கின்ருராம். அவருக்குக்கூட ரொம்ப தள்ளாத வயசாம். நாட்டியத்தில் அதிக பைத்தியமாம்.

ஆனல் நான் சற்றுமுன் நினைத்ததற்கும் அவளது எழ்மை நிலைமைக்கும் எத்தனை மாறுதல்? அந்த ஆண்டவனுக்கு எவ்வளவு வஞ்சனை? அவள் மாத்திரம் நிதி மிகுந்த குடும்பத்தில் பிறந்திருந்தால் அப்புறம் அவள் நிலை?......

ஆம்; சேற்றிலே செந்தாமரை. நத்தை வயற்றில் விலை மதிக்க முடியாத நன்முத்துக்கள்! வல்லான் வகுத்த வாய்க்காலில் எவ்வளவு மேடுபள்ளங்கள்!

அந்த நிமிஷ முதல் என்னையுமறியாமல் என் மனதில் உயிரோவியம் ஒன்று எழுதி வந்தேன். கற்பனைக் கோல்கொண்டு கனவில் தோய்த்து மனதில் தீட்டிய அந்த வனிதைதான் வனமாலா.

காலச்சக்கரம் கனவேகத்தில் சுழன்றது. பரீக்ஷையை முடித்துவிட்டுப் புறப்பட்டுக் கொண்டிருந்த சமயம், வெளியே அறிமுகமான குரல் கேட்டுத் திரும்பினேன். விசாலத்துடன் வனமாலா நின்று பேசிக்கொண்டிருந்தாள். அதற்குள் என்னைப் பார்த்து விட்டாள். உடனே சிறிது ஒதுங்கித் தலையைக் கீழே தாழ்த்திக் கொண்டாள். நட்புக் கயற்றில் பிணைப்புண்ட இவர்கள் பிரிவாற்ருமையால் மனம் நெகிழப் பேசும் பேச்சில் குறுக்கிட்டு நிற்க மனமின்றி நான் நழுவி விட்டேன். ஆனல் அந்நிலையிலும் அவளைக் கடைக் கண் கொண்டு காணத் தவறவேயில்லை.

ஓடுங் கதிரவனின்பின் நாட்கள் உருண்டோடின. பரீட்சை 'முடிவு' வெளியிடப்பட்டிருந்தது. நான் தேர்ச்சியடைந்து விட்டேன். அந்த ஆனந்தத்தை தகர்த்தெறிய எப்படித்தான் அச்செய்தி காத்திருந்ததோ தெரியவில்லை. மிகவும் சுப செய்தி. அதுவும் மணவிஷயமான மங்களச் செய்தி. இருந்தும் என் மனம் நிலை தப்பிச் சுழன்றது. விசாலம் ஓடிவந்து என்னிடம் திருமண அழைப்பு ஒன்றைத் தந்தாள். அது வனமாலாவின் முகூர்த்தப் பத்திரிகை!

"சௌ. வனமாலாவை......"

மனம் அதற்குமேல் ஓடவில்லை. தலை சுற்றியது. ரத்தம் உடல் பூராவும் வெகு வேகமாகப் பரவிச் சென்றது. எனக்கு உரித்தானதென நான் எண்ணி மனம் பூரித்த ஒன்று பறிபோனது போன்ற நினைப்பு. என் வாழ்க்கையில் பொக்கிஷம் ஒன்றை கைநழுவ விட்டதுபோல் பரதவிப்பு. சொல்லொணுத வேதனை புயல்போன்று பொங்கி எழுந்தது.

வனமாலாவை வாழ்க்கைத் துணையியாக அடையப் பேறு பெற்ற அந்தப் புண்ணியவானை — அவனது இன்பமயமான வாழ்வின் அதியுன்னத மோன நிலை குறித்து அடிக்கடி எண்ணமிடும் மனம். அப்போது அவள் புகைப் படத்தை என் இதய அந்தரங்கத்தை மனச்சவுக்கு வளைத்து முத்தமிட்டுச் செல்லும். நான் அவ் வேதனையைப் பொறுக்கவே மாட்டேன். உடனே அப்பாடத்தை அப்படியே மூடிவிடுவேன். அப்போது விழிகள் மட்டும் நீர்த் துளிகள் சிந்தத் தவறியதேயில்லை!

★

நாலைந்து நாட்கள் கழிந்திருக்கும். வனமாலாவின் உடல் நிலையைக் குறித்து எண்ணமிட்ட வண்ணம் ஆபீசில் பேனவை ஓட்டிக் கொண்டிருந்தேன் வெகு விரைவாக. திடுமென தந்திச் சேவகன் தந்தி யொன்றைக் கொணர்ந்து என்னிடம் நீட்டினன்.

சிந்தையறிந்து வாடி...

'தந்தி' எனக்கு வயிறு பகீரென்றது. நடுங்கும் கைகளுடன் போராடிக் கையெழுத்திட்டுத் தந்தியைப் படித்தேன். என் உயிரே போய்விட்டது.

"வனமாலாவிற்கு உடல்நிலை மிகவும் அபாயம். உடனே புறப்படவும்"

— விசாலம்

சித்தம் தடுமாறியது. லீவு எழுதிக் கொடுத்துவிட்டு அடுத்த ரயிலில் புறப்பட்டேன்.

படபடக்கும் நெஞ்சை அழுத்திப் பிடித்துக் கொண்டு அவ்வீட்டினுள் நுழைந்தேன். உள்வெளியில் மெலிந்த எலும்புக் கூடு போன்ற ஓர் உருவம் காட்சியளித்தது. அதனருகில் என் தங்கை விசாலம் மட்டிலும் உட்கார்ந்திருந்தாள். அவள் முகத்திலே சஞ்சலத்தின் ரேகைகள் படர்ந்திருந்தன. அப்போதுதான் டாக்டர் பரிசோதித்துவிட்டு வெளியே வந்தார். நிலைமையைக் கேட்டேன். உதட்டைப் பிதுக்கிக் கைகளை அகல விரித்தார். என் மனம் பதைத்தது.

அவளை உற்றுக் கவனித்தேன். அன்று அழகினது உருவமெனத் தோற்றமளித்த அதே வனமாலா தானா இன்று இங்ஙனம் காணப்படுகிறாள்? வசந்த மல்லிகை போன்ற அவளது மேனியா இப்படி எலும்புந் தோலுமாக ஒட்டியுலர்ந்து விட்டது? உணர்ச்சி நெளியும் அவளது செவ்வதரங்களா இன்று இவ்விதம் வெளிறிப் போயிருக்கின்றன? குறுகுறுத்த அந்தக் கருவண்டுக் கண்களா இப்போது அதள பாதாளத்தில் இருப்பது போன்று பார்ப்பதற்கும் அச்சத்தை விளைவிக்கின்றது. ஐயோ! என்ன கோரமான மாறுதல்.

கவிழ்ந்திருந்த தலையை எதேச்சையாக உயர நிமிர்த்தினேன்.

அவளது கணவனின் போட்டோ சுவற்றில் மாட்டியிருந்தது. படத்தைச் சுற்றிலும் மாலை தொங்கவிடப்பட்டிருந்தது. அவ்வுருவத்தைக் காணவும் எனக்கு மனம் தாளவில்லை. மறுகணம் தலையைத் தாழ்த்திக் கொண்டேன்.

அப்போதுதான் அவள் மெல்லக் கண்களைத் திறந்தாள். எனக்குச் சந்தோஷம் தாங்கமுடியவில்லை. ஏதோ காணுததைக் காண்பது போலிருந்தது. இதழ்களிலே சிறிது அசைவு காணப்பட்டது. ஒரு கணம் என்னை வெறித்துப் பார்த்தாள். ஒரு சிறு முறுவல் பூத்தது. ஏதோ சொல்ல வாய் எடுத்தாள். கடைசியில் சிரமப்பட்டு "தாங்களா, பாலகிருஷ்ணனு?" என்ருள். அவள் குரல் தழுதழுத்து விட்டது.

வீறிட்டு அலறினுள் விசாலம், முகத்தை வனமாலாவின் மார்பில் புதைத்துக் கொண்டு. என்மனம் நைந்துருக நெஞ்சம் விண்டது. ஆமாம் வனமாலா போய் விட்டாள். உயிர்ப் பறவை உடற் கூண்டினின்று பறந்து விட்டது.

அப்போதுதான் தபால்காரன் கடிதமொன்றை வீசியெறிந்து விட்டுப் போனுன். வனமாலாவிற்கு — அல்ல இறந்த அவளது உடலுக்கு — அவள் கணவனிடமிருந்து வந்திருந்தது அது! ஆனுல் பயன்? எந்த ஒருவித இன்பமயமான செய்தியைக் கேட்க, அந்த விஞடிவரை எமனுடன் போரிட்டுக் கொண்டிருந்தாளோ; எந்தவொரு செய்தியைக் கேட்க அவள் அத்தனை நாளும் ஏங்கித் தவித்து உயிர் ஊசலாடும் நிலையிலிருந்தாளோ, எந்த ஒரு செய்தியை எதிர்பார்த்து அவள் இதயம் உயிரை அதுவரை இறுகப் பற்றியிருந்ததோ, அந்தச்செய்தி அதோ கிடக்கின்றது. மாண்டுபோன அவளது மாண்புற்ற மேனியின் அருகிலே, மிகவும் அனுயாசமாக.

அதில் ?

ஆருயிர் வனமாலா,

நெடு நாளைக்குப் பின் இங்ஙனம் உன்னை அழைப்பது ஆச்சர்யமாக இருக்கின்றதா? ஆமாம் இருக்கலாம். "கோடையிலே இளைப்பாறும் குளிர் தரு" இருக்கப் பாலைவனத்திலே அலைந்த பாவி தானே நான்? "ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத் தண்ணீர்" இருக்க கானல் நீர் கருதியலைந்த காட்டுமான்தானே நான்? அனிச்ச மலரினும் மென்றன்மை வாய்ந்த உனது அன்பிதயத்தை இரக்கமின்றி எனது அறியாமையென்னும் பாறையினுல் அடித்து சுக்கு நூருகச் சிதறச் செய்த அற்பன், அறிவிலிதானே நான்?

நீ அன்பின் பொக்கிஷம்; ஆரணங்குகளின் ஜோதி; பொறுமையின் சிகரம்; கனவிலும் கிட்டாத உனது அத்யந்த பிரேமையின் உண்மை நிலையறிந்தும் உன்னை அன்று உதாசீனம் செய்த இந்த உலுத்தன் அப்பாதகத்திற்கு உரிய தண்டனையெல்லாம் பெற்று விட்டான். சீ! தண்டனையெல்லாமா பெற்று விட்டான்? கடவுளின் சினம் அதோ காத்திருக்கிறதே! விரல் வழி வழிந்த தேன் போல் உன் வாழ்வை வீணுக்கிய பெரும் பாபத்திற்குப் பிராயச் சித்தம் வேறேயா?

வனமாலா, விளக்கைப் பழமென எண்ணிய விட்டில் பூச்சியின் கதிதான் எனக்கும் நேர்ந்து விட்டது. என் மனதை மறைத்து வந்த மாயத்திரை இன்றுதான் மாயமாக மறைந்தது. என்னுல் எள்ளளவும் உனக்கு மகிழ்ச்சியில்லைதான். இருந்தாலும் மன்னிப்புக் கேட்டுக் கண்ணீரால் உன் கால்களைக் கழுவும் இக்காதகன் உன்னிடம் நானை நேரில் வரும் போது ஏறெடுத்துப் பார்க்காமல் இருந்துவிட மாட்டாயல்லவா? குற்றங்கள் செய்வது மனித இயல்பு. ஆனுல் அதை மறந்து மன்னிப்பதுதானே தெய்வீகம்? கண்மணி, உன் உள்ளத்திலே இந்தப் பாவிக்கு மறுபடியும் இடங்கிடைக்குமா?

ரகுநாதன்



ஊஞ

★

அதோ அந்தக் கிணத்தடி மூங்கில் தூரில் தொங்கிக் கொண்டிருக்கிறதே – ஒரு பில்லுக் கூடு, அதுதான் அந்த இரண்டு தூக்கணங் குருவிகளின் சொர்க்கம். காற்றிலே ஊஞ்சலாடி, கவலை என்பது ஒரு துளி இல்லாமல், கருத்தொருமித்துக் காலமெல்லாம் இன்பக் கதை பேசிக் காலங் கழிக்கும், இதைவிடவா, சொர்க்கம் ருசியாக இருந்து விடப்போகிறது.

வீரி தன் புருஷன் வீரப்பனுடன் செய்துவரும் தனிக்குடித்தன வாழ்க்கையும் ஒரு சொர்க்கம்தான், மேலே சொன்னோமே, அதே தூக்கணங் குருவிகளுடையதைப்போல.

இரண்டு பேருக்கும் காணியோ காப்பணமோ கிடையாது. அன்றாடக் கூலிதான் அவர்களுடைய சுக ஜீவனம். ஆனால் சொந்தமாக ஒரு சின்னக் குச்சு வீடு உண்டு. பூமியிலே இருந்து பிய்த்துக் கொண்ட சந்திர மண்டலத்தைப் போலச் சுவர்க்கத்திலிருந்து பிய்த்துக் கொண்டு வந்து விட்ட ஒரு சின்ன மண்டபமோ என்னமோ அந்த வீடு.

கே. வி. துரைசாமி ராஜா

சோற்றுக்குக் கொஞ்சம் தவசம், உப்பு, புளி, வேண்டுமானால் கொஞ்சம் மிளகாயுங் கூட, அதற்குமேல் விறகு, இவ்வளவுதான்; பெரிய சமஸ்தானாதிபதிகளுங் கூடப் பெருமைப் படும் அளவில், சாப்பாடு தயார் ஆகிவிடும். வீரியும் — வீரப்பனும் சாப்பிட்டும் ஆகிவிடும்.

இவ்வளவு பெரிய கஷ்ட காலத்தில், உலகமே பூராவும் கஷ்டம் கஷ்டம் என்றுக் கூக்குரல் இடுகின்ற இந்தச் சமயத்திலும், வீரி வாயிலோ அல்லது வீரப்பன் வாயிலோ கஷ்டம் என்ற சொல்லே வந்திருக்காது. ஏனென்றால் கஷ்டம் என்றால் அர்த்தம் என்ன என்றே அவர்களுக்குத் தெரியாது.

காலையிலே சூரியோதயத்துக்கெல்லாம் சுடச்சுடச் சோழக் கூழ் தயாராகிவிடும். அத்துடன் தன் பெண்ஜாதியின் அன்பையும் கலக்கி வயிறு வெடித்துப்போகும் வரையில் குடித்துவிட்டுக் கொஞ்சம் கலயத்திலும் ஊற்றிக் கொண்டு கூலிக்குப் போய்விடுவான் வீரப்பன்.

வீரியும் சும்மா இருக்க மாட்டாள், நம்ம பெண்களைப்போல அவளும் கூலிக்குப் போய்விடுவாள். ஒண்ணேகாலும் முக்காலுமாக மொத்தம் சொளையாக இரண்டு ரூபாய் துள்ளிக்கொண்டு வீட்டுக்கு வந்துவிடும்.

ஒரு பெண் புத்திசாலியாக வேண்டுமானல் கலாசாலைப் படிப்பு வேண்டுமா என்ன? வீரி சுத்தத் தற்குறிதான். நாலு குழந்தை குட்டிகள் ஆகிவிட்டால் அப்புறம் காப்பணமும் மிச்சம் வைக்கவே முடியாது என்ற ரகசியத்தை அவள் சின்ன வயதிலேயே கெட்டுப் பிழைத்தவர்களை உத்துப் பார்த்துக் கண்டு பிடித்து வைத்திருந்தாள்.

குடும்பத்தை முன்னுக்குக் கொண்டுவருகிற சக்தி பெண்ணுக்குத் தான் உண்டு என்பதையும் எந்த வாத்தியாரிடமும் கற்றுக் கொள்ளாமல், தானகவே நன்கு தெரிந்து வைத்திருந்தாள் வீரி.

நாலு காசை மிச்சம் வைத்து, ஒரு பெரிய மனுஷனிடம் கொடுத்து அதை உருப்படியாக்கி இரண்டுகாளை வாங்கிக் கொடுத்து எவனுகிலும் மஹாராசனிடம் ஒரு வள்ளம் அரை வள்ளம் குத்தகை சத்தகைக்குப் பிடித்துக் கொண்டு பண்ணையம் ஓட்டவேண்டும் என்பதுதான் வீரியினுடைய ஆசை.

வீரப்பன் தன் பெண்சாதிக்கு எதிர்மாருக ஒருநாளுங்கூட நடந்திருக்கமாட்டான். எந்தவிதமான போஜன உணத்தியும் அவன் இதுவரையிலும் பழகிக் கொண்டிருந்ததில்லையாகையால், வயிற்றுக்குக் கிடைக்கும் சோற்றைப் பற்றிக் கொஞ்சங் கூடக் கவலைப் பட்டதே கிடையாது. பசி நேரத்திற்குப் பெண்சாதி இரண்டு கை மண்ணை யள்ளிப் போட்டாலும், அதையும் இரண்டு வாய் சாப்பிட்டு விட்டு, ஒரு கைத் தண்ணீர் அள்ளிக் குடித்துவிட்டு அக்கடா என்று வேலைக்கு ஓடி விடுவான்.

கட்டிக் கொள்ள நாலு முழம், மேலே போட்டுக் கொள்ள சின்ன துண்டு. அதற்கு மேல் விரும்பியதில்லை வீரப்பன். இத்தியாதி காரணத்தினுல்தான், ஜவுளிக் கடைக்கு முன்னுல் இந்தக் "க்யூ" வரிசையிலும் வேலையைக் கெடுத்துக் கொண்டுபோய் நின்றுவிட்டு வருகிற அவஸ்தை அவனுக்கு இல்லாமல் போயிற்று.

நூத்துக்கு மேலே ஊத்து, ஆயிரத்துக்கு மேலே ஆறு என்று வளர்ந்து கொண்டு போகும் குணம் பணத்துக்கு உண்டல்லவா? மாதம்ஆறு திரும்புவதற்குள் ரூபாய் நூற்றுக்கு பதம் பட்ட கடாரி மாடு ஒன்றை வாங்கி வாசலிலே கட்டியிருந்தாள் வீரி.

களைக்குப் போய்விட்டு வருகிற வழியிலே, ஒரு தாவுப் பச்சைப் பில்லை அறுத்துக்கொண்டு வந்து விடுவாள். வேலைக்குப்போகிற இடத்திலே மாட்டையும் பிடித்துக் கொண்டுபோய் அங்கே மேய்ச்சல் காட்டிலே மேய விட்டு விட்டுப் பொழுது விழுகக் கையோடு பிடித்துக் கொண்டு வந்து விடுவான் அவன்.

மாட்டைக் கட்டுத் தரையில் கட்டித் தண்ணீர் காட்டித் தேய்த்து விட்டுத் தீவனம் போட்டுவிட்டு வீரப்பன் வீட்டிற்குள் வருவதற்கும் வீரி சோறுக்கி வைப்பதற்கும் அளவாக இருக்

கும். பொழுதெல்லாம் பாடு பட்ட அலுப்பிலே சாப்பிடச் சாப்பிடத் தூங்கிப்போவான் வீரப்பன். வீரியும் அப்படித்தான் இந்த ஒரே காரணத்தினால்தான், மோக அவஸ்தையில் அவர்கள் அடிக்கடி கிடத்திக் கொள்ளாமல், உடல் கட்டுக் குறையாதவர்களாகவே இருந்தார்கள்.

அதே கிராமத்துக்கு மூன்று மைலுக்கு அப்பால் புதிது புதிதாகப் பஞ்சாலை ஒன்று கட்டி முடிக்கப் பட்டிருந்தது. அதில் வேலை செய்ய, சுற்றுக் கிராமத்து ஜனங்கள் ஆயிரக் கணக்கில் போய்ச் சேர்ந்தார்கள். எப்படி எப்படியோ வேலைக்குப்போய்ச் சேர்ந்த காட்டாள்கள், சில நாட்களுக்குள் மைனர்கள் மாதிரி கிராப் வைத்துக் கொண்டு சுற்றுவதைப் பார்த்த வீரப்பனுக்கும் நாக்கில் கொஞ்சம் ஜலம் ஊறிற்று. பஞ்சாலையிலே ஆளுக்கு அம்பது ரூபாயுக்கு மேல் சம்பளம் கிடைத்துக் கொண்டிருந்ததால், தானும் போய் ஆலையில் சேர்ந்து விடுவதென்ற தீவிரம் வைத்து விட்டான்.

வீரப்பன் ஆலைக்குப்போவதில் வீரிக்குக் கடுகு அளவுங்கூட இஷ்டம் கிடையாது. அவனும் பெண்ஜாதியினுடைய பேச்சை மீராதவனாய் இருந்ததனாலே, இப்படி ஒரு மூன்று மாதம் கழிந்து போய்விட்டது.

நாலு மைனர்கள் சேர்ந்து கொண்டு போட்ட தூபத்தில் சொக்கிப்போன வீரப்பன் வீரியை மீறிவிட்டுப் பஞ்சாலைத் தொழிலாளியாக மாறிவிட்டான். வீரி அழுதுங்கூடப் பார்த்தாள். அவளுடைய கண்ணீரால் ஒன்றுமே செய்ய முடியவில்லை!

கொஞ்ச நாள் தான் சென்றிருக்கும். வீரியினுடைய சொர்க்க மண்டபமாயிருந்த சின்ன வீடு நரக மண்டலமாக மாறிக் கொண்டு வந்தது. பஞ்சாலையில் வேலை துவங்கிய நாளில் இருந்து, காலையும் மாலையும் 'வர் வர்' என்று ஊதும் சைரன் சத்தம் அந்த கிராமத்திற்கு நன்றாகவே கேட்கும். சைரன் சத்தத்தைக் கேட்டதுதான் கேடு வீரிக்கு உடனே உஷ்ணம் பொங்கிவிடும். "இந்த அனாச்சாரம் ஏன் தானாகை சும்மா ஊளை வச்சுக்கிட்டே இருக்கு. ஒலகத்துக்கு என்ன சனீஸ்வரன் புடிச்சுக்கிச்சோ இது இப்படிக் காத்தாலையுஞ் சாயந்திரமும் ஊளை போட்டுப் போட்டுத் தொலையுது" என்று பஞ்சாலையை வைவாள்.

பாவம் வீரி வையாமல் என்ன செய்வாள். அவளுடைய வாழ்க்கையிலே இருந்த நிம்மதியையும் சந்தோஷத்தையும் இடித்துவிட்டுப்போனது, பஞ்சாலையின் ஊளைச் சத்தந்தானே?

காலங்கருக்கலிலே ஊளை நொய் என்று கேட்டவுடனே, வீரப்பன் அவதி அவதியாக எழுந்து சாப்பிட்டுவிட்டு. மத்தியானத்துக்கும் தூக்குப் போணியில் போட்டுக் கொண்டு ஓடுவான். முன்னெல்லாம் கூழுடன் திருப்தியாய்ப் போன அவன், இப்போது உணத்தியாய்த்தான் வேண்டும் என்கிறான். நெல்லம் பருக்கையல்லாமல் வேறு ஒன்றும் அவனுக்குப் பிடிக்காது. வீரி உணத்தியாய்ச் செய்து போடவில்லையென்றால் அவனுக்குப் பிரமாதமாகக் கோபம் வந்து அவளைச் சக்கை வெழுத்துப் போடுவான்.

வீரப்பன் பஞ்சாலைத் தொழிலாளியான பிறகு எவ்வளவோ மாறுதல் அடைந்து போயிருந்தான். தலை நிறைய அள்ளி முடிந்திருந்த குடுமியைப் பிய்த்து விட்டுச் செம்மறி யாட்டுக்கிடாய்க் கிராப் வைத்துக் கொண்டான். முன்னெல்லாம் அவன் பீடிப்

புகை யென்றால் மயக்கம்போட்டு விழுந்து விடுவான். இப்பொழுது மடியிலே ஒரு கட்டும் தீப்பெட்டியும் ஜோடி போட்டுக் கொண்டே இருக்கும். ஐந்து நிமிஷத்துக்குஒரு பீடியாக உறிஞ்சி உறிஞ்சி அவனுடைய உதடுகள் சமையலறைப் புகைப் போக்கிபோல இருந்தன.

அனுதினமும் ஓயாத நடை. இந்த லக்ஷணத்திலே ராத்திரி வேலை, பகல் வேலை வேறு. வச்சிரத்தை வார்த்தெடுத்தது போல் இருந்த அவன் உடல் உருக்கெட்டுக் கொண்டு வந்தது. கண்ணெல்லாம் செத்துப்போன பிணத்துக்கு உள்ளுக்கு விழுந்து கிடக்கிற மாதிரியாய் இருக்கும்.

முன்பெல்லாம் வீரிக்கு மன்மதனைப்போலக் காட்சி கொடுப்பான். இப்பொழுது அவளால் அவனைக் கண்கொண்டு பார்க்க முடியாமல் இருந்தது. அதுவும் பஞ்சாலைக்கு ராத்திரி வேலைக்குப் போய்விட்டு காலையிலே வந்து வீட்டு வாசலை மிதிக்கும்போது, அவன் முகம் சாக்ஷாத் கடிக்க வருகிற கருமந்திக் குரங்குமாதிரி தோற்றம் அளித்துக் கொண்டிருக்கும்.

வீரப்பன் எப்பொழுது நாக்கின் உணத்திக்கு அடிமைப்பட்டுத் திண்டி ருசிக்குத் தோப்புக் கரணம் போட்டானோ, அன்றைக்கே அவனுடைய வாழ்க்கையில் இருந்த திருப்தி காற்றாய்ப் போய் விட்டது. திருப்தியே இல்லை யென்றால் அந்த வாழ்க்கையைச் சுடுகாடு என்று சொல்லாமல் வேறு என்ன என்றுதான் சொல்வது?

மாதவனாயர் மில்டேரிக்கடை சாமான்கள் என்றால் வீரப்பன் உயிரையே விட்டு விடுவான். ஒரு "சாபீஸ்" துண்டை வாங்கிக் கடித்துவிட்டு, அரையணாப் பக்க வடையை நொருக்கி வாயில் போட்டு ஒரு சிங்கிள் சாயாக் குடித்து விடுவானேயானால்தான், அந்த நாள் அவனுக்கு அமரநாள்.

மாதச் சம்பளத்திலே பாதியை எப்படியோ மாதவ நாயர் ஏப்பம் போட்டு விடுவான். வெற்றிலை பாக்குப் பீடிக் கடைக்காரன் பாக்கி யுள்ளதில் பாதியில் பாதி, மீதி யுள்ளதும் வீட்டுக்கு வந்து

சேர்ந்தால் உண்டு இல்லையென்ருல் இல்லைத்தான்.

இது மட்டும் அல்ல. சீட்டாடவும் பழகியிருந்தான். மில்லுக்குப் போய் உழைத்துவிட்டு வருகிற பாக்கி நேரத்தில் எல்லாம், சீட்டாட்டந்தான் அவனுக்குப் பொழுது போக்கு.

வீரி ஏதாகிலும் பேசினல் போச்சு, பல்கில் எல்லாம் உதிர்ந்து விடும். வீட்டுக்கு வந்தானே இல்லையோ எல்லாம் தயாராக இருக்க வேண்டும். வீரிக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. வீட்டில் இருந்தால் தானே வேளா வேளைக்குப் போடலாம். ஒவ்வொரு மாதமும் ஒரு ஐந்து ரூபாய் நோட்டைக் கொண்டுவந்து வீசி எறிந்துவிட்டுப் போய்விடுவான். அதை வைத்துக் கொண்டு நிம்மதியாய் எப்படித்தான் பெண் காலம் போடுவாள். வைத்திருந்த மாட்டையும் பாங்கு பார்க்க முடியாமல் போகவே அதையும் விற்று விட்டாள். ஆனல் அந்தப் பணத்தை, ஆபத்துக் காகிலும் உதவட்டும் என்று பதுக்கி விட்டாள்.

அதையும் கைப்பற்றிக்கொண்டுவிட எவ்வளவோ நயமும் பயமும் செய்து பார்த்தான் வீரப்பன். அவன் ஜபம் சாயாமல் போகவே



அவளை வீட்டை விட்டுத் துரத்தி விட்டான்.

கொஞ்ச நாள் மனம் போன போக்கிலே அல்லுப் பொருக்கிக் கொண்டு திரிந்தான். உடல் நலங் கெட்டு இருமல் வந்து படுக்கை யோடு படுக்கையாய் விழுந்து கொண்டான். வீரப்பன் கூப்பி டாமலே, வீரி வீட்டுக்கு வந்து விட்டாள். அவளைப் பார்த்ததும் அவனுக்கு அழுகை வந்துவிட்டது "வீரி நான் செய்ததை யெல்லாம் மறந்திட மாட்டாயா, நீ வச்சிருக் கற ரூபாயைச் செலவழிச்சுப் பண்டுதம் பாரு. எல்லாரும் பெரிய சீக்குனு சொல்ராங்கோ. எப்படியாச்சி என்னைக் காப்பாத் திப் போட்டீன்னா, அப்புறம் உம் பேச்சுக்குக் கட்டுப்பட்டே இருந்து பொழச்சுக்கிறேன். எனக்கு இப்பத்தான் புத்தி வந் தது" என்று கண்ணீர் விட்டான்.

"என் ராசா, உனக்குதவாத காசு எனக்கெனத்துக்காகுது? அப்பவே குடு குடுன்னு உபத்ர வப் படுத்துனையே, குடுத்திருந்தா உதரிப்பிட்டு இப்போ ஆபத்துக்கு இல்லாமே நீயுஞ் சாகோணும். அப்பறம் நானுஞ் சாகோணும் பயப்படாமெ இரு. வீரி உம்பக் கத்திலே இருக்கற வரைக்கும் எமன் பக்கத்துலே வந்திடுவானா என்ன. என் மன்னன், சேர மஹாராசா மாதிரி இருந்தையே எப்படி எப்படி யெல்லாம் போ யிட்டே. நான் சொல்றப்படிக் கேட்டு புத்தியோட பொழச்சிருந் தையானா, இன்னேரம் முன்னூறு ரூவா மிச்சம் வச்சு ரெண்டுகாளை வாங்கித் தந்திருப்பேன். நீயும் பத்துப் பேத்துக்கு ஒரு பண்ணா டியா பண்ணாட்டுப் பண்ணிட் டிருப்பையே. இன்னேரம் நாலு கூலி நாயும் வந்து நம்மகிட்டக் கையேந்தி வாங்கிக் கிட்டிருக்கும் இப்போ நீபோயி இன்னொருத்தங் கிட்டே மாசாமாசம் கை யேந்தி வாங்கிக் கிட்டிருக்கறையே. எல் லாம் தலை விதி தலை விதி" என்று தலையில் அடித்துக் கொண்டு பதி லுக்குக்கண்ணீர் விடுத்தாள் வீரி.

"இந்தா பாரு வீரி, நான்தான் கொழுத்துப் போயிக் கெட்டுக் குட்டிச்சுவராப் போயிட்டதுக் காக அழுகுறேனே, நீயுங்கூடவா அழுகறே. எங்கண்ணு, காட்டு ரோஜாப் பூவாட்டமா இருந்தை யே, உன்னை எப்படி யெல்லாம் பழியெடுத்து உசுரை வாங்கிட் டேன். இந்த பாவிக்கு வேணும் வேணும்"

இப்படி வீரப்பனும் வீரியும் மாறி மாறி ஒப்பாரி வைத்துக் கொண்ட பின் கடைசியாக ஒரு முடிவுக்கு வந்து ஒப்பாரியை நிறுத்தினார்கள். கையிலிருந்த இருநூறு ரூபாயையும் செலவு செய்ததோடு நில்லாமல் போட் டிருந்த நகை நட்டையும் விற்று வைத்தியம் பார்த்தாள் வீரி. வீரப்பனுடைய மூக்கிலும் காதி லும் நுழைந்திருந்த பஞ்செல்லாம் எடுக்கப் பட்ட பின்புதான், ஆள் ஒருமாதிரியாக ரத்தம் பிடித்துக் கொண்டு வந்தான்.

ஆறு மாதங்கள் சென்றன. ஒரு மாதிரியாக ஆளாகி வீதியிலே நடக்கும் நிலைக்கு வந்தான். அவ னுக்குப் பஞ்சாலை மறந்துபோய் இருந்தது என்றாலும், மாதவ நாயர் மில்டேரி கிளப் மட்டும் அவனுக்கு மறக்க முடியாது போல் இருந்தது! ஒரு துண்டுச் சாலீசும், சிங்கிள் சாயாவையும் மறந்து விட்டு உலகத்தில் வாழ்வ தென்றால் அவனால் முடியாத காரியமாய் இருந்தது. அதற்காக வாகிலும் மறுபடியும் பஞ்சாலைக் குப் போவோமா என்றுங்கூட அவன் மனது தீர்மானம் செய்யத் தான் செய்தது. ஆனால் வீரி சொன்னபடி கேட்பதாகச் சத் தியம் செய்து கொடுத்தாய் விட் டதே!

மன்னாதி மன்னர்களுங் கூடத் தான் வாக்குத் தவறி நடந்திருக்கிறார்கள். சாதாரண மனிதனான வீரப்பன் அதுவும் வேறு யாரிடமாவதா பெண் ஜாதியிடம் வாக்குத்தவறிப் போனதில் என்ன முழுகிப் போயிற்று? இப்படியெல்லாம் வீரப்பன் நினைக்கத்தான் செய்தான். அந்த நாயர் கடைச் சாபீஸ், சாயா நினைவில். ஆனால் வீரி தன்னுடைய உயிரைக் காப்பாற்றிக் கொடுத்து உதவி செய்து கொண்டுவரும் அன்பை நினைத்துப் பார்க்கும் பொழுது தான், பெண்ஜாதியின் வாக்குத் தவறி விடக்கூடாது என்று தீர்க்கமான முடிவுக்கு வந்து விட்டான்.

மற்றும்ஒரு ருசியை வீரி ஊட்டி வைத்திருந்தாள். நாலு பேர் தன்னை அண்டித் தன்னிடம் வாங்கித் தின்னும் நிலையில் ஒரு பண்ணாடி ஆக்கி விடுவதாக வேறு சொல்லியிருக்கிறா. அதையும் அவன் நினைத்துப் பார்க்கும் பொழுதுதான், உண்மையிலேயே மேலாள் இல்லாத ராஜா மாதிரித் தன்னை நினைத்துக் கொண்டு, என்ன ஆனாலும் வீரி பேச்சை மட்டும் மீறி நடப்பதில்லை என்று அதி தீவிரமாக முடிவு செய்து விட்டான்.



வீரி கூலிக்குப்போய் விடுவாள். வீட்டைக் காத்துக் கொண்டே கிடக்கும் வீரப்பனுக்குப் பொழுது போகாமல் அப்படியே ஊருக்குள் ஊசாடி விட்டு வருவான். அவன் பழைய பஞ்சாலைத் தொழிலாள நண்பர்களுடன் மறுபடியும் பொழங்கி வருகிறான் என்ற சமாச்சாரத்தைத் தெரிந்து கொண்டு, குடி இருந்த வீட்டை போக்கியம் வைத்து ஒருமாட்டை வாங்கி அவன் கையில் கொடுத்தாள்.

வீரப்பனைப் பார்த்து "இந்த மாட்டைப் போயி மேச்சுக்கிட்டுவா, நான் சொல்லறதைத் தானாகேளு; அந்தப் போக்கிரிப் பசங்க உன்னைக் கலைச்சு மறுபடியும் மில்லுக்குக் கூட்டிப் போயிடுவானுக" என்றாள்.

"ஏ வீரி, எனக்கா புத்தி சொல்றே, என்னமோ பொழுது போகலேன்னுதான் அந்தப் பசங்ககிட்டப் போனேனேயல்லாமே, வேறெதுக்கும் போகல்லை. நீ தான் மாட்டை வாங்கிக் குடுத்துட்டையே அதுக்குப் பின்னாலே அலைஞ்சா, பொழுதும் போகும், பசியும் ஆகும்."

"ஆமா, மேலைக்கு இந்த நாளைக் கெல்லாம் உனக்கு ஒரு ஏர் காளையை வாங்கி உன் கையிலே தர்லேன்னா, எம்பேரை மாத்தி வச்சுப்போடு. மாட்டைப் புடிச்சுக்கிட்டுப்போ."

மாட்டுக் காலுக்குப் பின்னாலே திரிந்து திரிந்து கொறையான கொறையெல்லாம் சுற்றியடித்து வருவதனாலே வீரப்பனுக்குக் குண்டோதரப் பசி யாகிவிடும். பசிக்கு ருசி இல்லை என்பார்கள். அது வாஸ்தவம்தான். வீரப்பன் தன்னுடைய பசியின் வேகத்திலே எது கிடைத்தாலும் சரி யென்று ஒரே வெகாறியுடன் வீட்டுக்கு வருவான். பானையிலே நல்ல சுடச் சுடக் கூழ் பொங்கிக் கொண்டிருக்கும். அளவில்லாத ஆனந்தம் பொங்க வீரி எடுத்தெடுத்து

ஊற்ற ஊற்ற அளவில்லாமல் குடித்து விட்டுத் திண்றிப்போவான்.

பசியின் தீவிரத்திலே பழகிப் பழகி, வீரப்பன் மாதவ நாயரைக் கூட மறந்து விட்டான். வெகு சீக்கிரத்தில் பழைய வீரப்பனுகி, வீரியின் கண்களுக்கு முன்னல் பழைய மன்மதனுகி விட்டான்.

"ஏ வீரி, இனிமே என்னல் சும்மா இருக்க முடியாது; உடம்பெல்லாம் பரபரன்னு இருக்கு. நாளையிலே இருந்து வேலைக்குப் போகணும்."

"மஹராசனுப்போ. ஆனுப் பாரு, மில்லுக்குப் போனுயா, நான் போயி குளங்குட்டைதான் பாத்திடுவேன்."

"சே, சே, அதுதான் இனிமே இல்லே. வீரி, நான் பழைய வீரப்பன் ஆயிட்டேனு நம்பமாட்டங் கரையே. எத்தனையிரம் சாமிக வந்து ஒதட்டைக் கடிச்சுக்குட்டு உருமுனுக்கூட வீரி கீரிப்போட்ட கோட்டை மட்டும் தாண்ட மாட்டனுக்கும்."

"இல்லே இல்லே அந்த மில்லு ஊளையிட்டாப் போதும், உனக்கு புத்தியே மாறிப்போயிடும்."

"அதுதான் எனக்குக் காது கேக்காமையே போயிடிச்சே. வைத்தியன் காதிலே இருக்கற பஞ்செல்லாந் தோண்டுன நாளிருந்து தானே காது மந்தமாயிருச்சு. இனி அந்த மில்லு என்னதான் "ஊளே" வைச்சாலும் எங் காதுலே ஏறவா போகுது. அதோ அங்கே கிணத்து வெளியைப் பாரு வீரி. அந்த ரெண்டு தூக்கணங் குருவியும் புதுசாக் கூடு கட்டிக் கிட்டிருக்கு."

"ஆமா, முந்தா நாள் அடிச்ச அந்த சண்டாளக் காத்து, அதோட பழைய கூட்டைப் பிச்செரிஞ்சுட்டுப் போயிட்டது. பாவம், அதுதான் இன்னிக்கு ரெண்டும் சேர்ந்துட்டுப் புதுக் கூடாக் கட்டிக்கிது; நாமளும் அது மாதிரிப் புது வீடு கட்டிப் பொழைக்க வேண்டாமா?"

"ஆமாம், என்னே என்ன செய்யச் சொல்றே" என்றவுடன், வீரி மண்வெட்டி எடுத்துக் கொடுத்து அருகு வெட்ட அனுப்பினுள். மண்வெட்டியை வாங்கித் தோளில் சாத்திக் கொண்டு பீமசேனன் மாதிரி நடந்தான் வீரப்பன்.

கிராமமும் நகரமும்

கிராமத்தைப் படைத்தார் கடவுள். நகரத்தைப் படைத்தான் மனிதன். — கௌப்பர்

கிராமம் கவிதை போன்றது. நகரம் நாடகம் போன்றது. இரண்டும் சந்திக்கும் இடத்தில் கவிதா நாடகம் பிறக்கிறது. — லாங் பெல்லோ.

இரண்டு சொட்டுக் கண்ணீர்

[வி. கிருஷ்ணன்.]

இரண்டு சொட்டுக் கண்ணீர்; ஆமாம், இரண்டு சொட்டுக் கண்ணீர்தான். கண்களிலிருந்து சொட்டிய இரண்டு சொட்டுத் தான்! வேறு யார் கண்களி லிருந்துமல்ல. என் கண்களி லிருந்து மளமள வென்று பெருகி, வளர்ந்து தரையில் பிரவாகமாகி விடாமல் சொட்டுச் சொட்டாக விட்ட அந்த இரண்டுதுளி கண் ணீர்தான்.

இந்தக் கண்ணீர் என் குடும்பத் தின் வறுமை நிலை தாங்காமல் விட்ட கண்ணீரல்ல. என் பெற் றோர்களின் கஷ்டங்களைக் கண்டு விட்ட கண்ணீரல்ல. என் அன்னை யைப் பிரிந்து இங்கே வந்து அல் லற் படுகிறோமே என்று மனம் நொந்து விட்ட கண்ணீரல்ல. நாம் இங்கே இப்படி கஷ்டப்படுகி றோமே நம் எதிர் காலத்தை எப் படிக் கடக்கப்போகிறோம் என் றெல்லாம் அனுதினமும் நினைத்து நினைத்து ஏங்கி வாடும் நிலையில் விட்ட கண்ணீரல்ல. உற்றார்தான் என்னைக் கரிக்கினார்கள் என்றால் ஊராருமா என்னைக் கரிக்க வேண் டும் என்று மனம் வெதும்பி விட்ட கண்ணீரல்ல.

ஒருபக்கம் கோரப்பல்லைக் காட்டிக்கொண்டிருக்கும் சிங்கம் இன்னொரு பக்கம் புலி, மற்றொரு பக்கம் பாம்பு, அதற்கப்புறம் தேள். மேலே ஈட்டி. பக்கத்தில் கூறிய வாள். கீழே குத்தும் முள் கள். இவைகளுக்குள் அகப்பட் டுத் தவித்துக் கொண்டிருக்கும் போது விட்ட கண்ணீரல்ல. பிறந்த நாளிலும் வளர்ந்த நாளி லும் ஏதாவது சுகம் என்ற பதத் தையாவது எப்படியிருக்கிறது என்று அனுபவித்ததுண்டா? என்று ஏங்கிக் கலங்கிக் கொண் டிருக்கும்போது விட்ட கண்ணீ ரல்ல.

உத்தியோகம் என்று இப் போது பார்த்து வரும் உபயோக மில்லாத உத்தியோக காலத்திலும் நன்றாக மன அமைதியுடன் வாழ முடியாமல் இருக்கிறதே என்று உள்ளம் குமுறி வெடித்து நிற்கும் போது உண்டான கஷ்டகாலங் களில் கூட விட்ட கண்ணீர் அல்ல.

பின் எதற்காக, யாருக்காக கண்ணீர் விட்டேன் என்றால் அது உங்களுக்காகத்தான். உங்க ளின் அன்புகலந்த உள்ளத்தை மறக்க முடியாமையினால் தான். இது வெறும் பசப்பு வார்த்தை யல்ல. பெருமை பேசி, பகட்டி மினுக்கி உங்களை வசப்படுத்தும் நோக்கத்துடன் அல்ல.

உண்மையாகவே என் முழு மனதுடனேயேதான். உங்கள் பால் கொண்டுள்ள தளராத உள் ளன்பினால்தான் குமுறிக்கொண்டு வரும் சோக உள்ளத்தைத் தடுத்து நிறுத்த முடியாததினால்தான்.

நான் இதுவரை யாருக்காகவும் கண்ணீர் சிந்தியதில்லை. ஆனால் இங்கே இரண்டு சொட்டுக் கண் ணீர் உங்களுக்காக உகுத்தேன் என்றால் என் மனம் உங்கள் விஷ யத்தில் எவ்வளவுதூரம் அக்கறை காட்டிச் சென்றிருக்கிறது என் பதை அந்த முருகப் பெருமான் தான் அறிவான்.

அன்பரே, இதுவெறும் கற்பனை கதையல்ல. உள்ளத்திலே ஊறிக்

கொண்டுவந்த அளவற்ற அன்பின் வேகத்தில் அப்படியே வரையப்பட்டது. தயவு செய்து ஊன்றிப் படியுங்கள்.

உள்ளன்புடன் நேசித்த எத்தனையோ என் பால்ய நண்பர்களுக்காகக் கூட நான் இவ்வளவு பரிவு காட்டியதில்லை. அவர்கள் இன்னும் என்னை ஆதரிக்க பல இடங்களில் இருந்து கொண்டு உள்ளன்பை மறக்காமல் என்னை ஆயிரம் தடவைகள் அழைக்கிருர்கள். அவர்கள் கூட என் லக்ஷியத்தை வரவேற்கிருர்கள். ஆனல் சுபாவத்தை சிறிது வெறுக்கத்தான் செய்கிருர்கள். என்ன செய்வது? உடன் பிறந்த என் நல்ல சுபாவத்தை மாற்ற முடிவது அவ்வளவு சுலபமாக இல்லையே! என்னுடைய சுபாவம் அப்படி என்ன கெட்ட சுபாவம் என்பது எனக்குப் புரியவில்லை.

சமீபத்தில் டெல்லி சென்ற நண்பர் ஒருவர் எழுதுகையில் நீங்கள் சொன்ன கருத்துகளெல்லாம் ரொம்ப சரியாகத்தான் இருக்கின்றன. என் அனுபவத்தை முன்பே நீங்கள் சொல்லி விட்டீர்கள். உங்களை அனுபவ சோதிடர் என்று சொன்னுலும் பரவாயில்லை என்றும் சொல்லியிருக்கிருர். நான் என்ன அப்படி அவருக்கு அனுபவ பூர்வமான காரியங்களை செய்யச் சொல்லி யோசனை கூறினேனே தெரியவில்லை.

இன்னெரு நண்பர் – நம் சமீபத்திலிலேயே இருக்கும் நண்பர் தான் – சொன்னர்:— நாம் ஒன்ருக கூடியிருக்கையில் உங்களை வெறுத்தேன். உங்கள் யோசனைகள் கடினமானது என்றும் நடக்காது என்றும் நினைத்து ஏமாந்து முட்டாள் தனமாக நடந்து கொண்டேன். உங்கள் அபூர்வமான லக்ஷியங்கள் அடைய இன்னும் அநேக நாட்களாகும். உங்கள் மனதைப் புண்படுத்தி நான் கண்டது ஒன்றுமில்லை. கூடியிருக்கையில் ஒன்றும் தோன்றவில்லை. வெளியில் வந்ததும்தான் தெரிகிறது, கஷ்டமும், நஷ்டமும். உங்கள் அன்பு மாத்திரம் என்றைக்கும் நிலைத்திருக்க வேண்டும் என்று மன்ருடிக் கேட்டுக் கொள்கிறேன்.

மேல் கூறியபடி அவர் சொல்வது எனக்கே ஆச்சரியமாகத் தான் இருக்கிறது.

இப்படியாக என்னை வெறுத்து ஒதுக்கியவர்கள் இன்று ஆதரிக்கிறேன் வாருங்கள் என்று கோணமல் குறுகாமல் கூறுகிருர்கள். எந்தப் பொருளும் சமீபத்தில் இருக்கையில் அவைகளின் அருமை — நுட்பம் – சக்தி முதலியவை ஒன்றும் சரிவரத் தெரியாது போலும். அது விலகி நழுவிப் போய்விட்டாலோ அவைகளுடைய பெருமை, மேதை யெல்லாம் தெரியும் போலும். இது இன்றைய உலகத்தின் போக்கு. பெரிய பெரிய அறிவாளிகளும், கலைஞர்களும் அவர்கள் உயிருடன் வாழும் போது அவர்கள் வறுமையிற் சிக்கி அவதியுறும்போது – கண்களை நன்ருக மூடிக்கொண்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த உலகம் அவர்கள் மறைந்தபின் அவர்களுக்காக எதை வேணுமானுலும் செய்யக் காத்துக் கிடக்கிறது.

உதாரணமாக மறுமலர்ச்சி எழுத்தாளரும், எழுத்தாளர் உலகில் பிரசித்தி பெற்றவருமான ஸ்ரீ கு. ப. ராஜகோபாலனை எளிதில் நாம் மறந்து விடமுடியாது. அவரை வறுமை வாட்டித்தின்றது உடல் நலம் குன்றியது. தரித்திரத்தின் உச்ச நிலையில் வாழ்ந்து வந்தார். அவரை அந்த ஏழ்மை நிலையில் இருந்த அவரை இலக்கிய உலகம் சும்மா பார்த்துக்கொண்டு தான் இருந்தது. அவரது வறுமையைப் போக்க எந்தப் புத்தக

பிரசுராலயங்களும் தீவிரமாக இறங்கவில்லை. அவர் மறைந்த பிறகோ அவரிடம் அபார அநுதாபம் காட்டுகிருர்கள்.

மகாகவி பாரதியாரின் விஷயத்திலும் இப்படியேதான் அனுதாபப் பட்டார்கள். என்னே இந்த உலகத்தின் விசித்திரப் போக்கு.

நான் நினைத்ததை உள்ளபடியே சொல்கிறேன். நம் நட்பு பயனுள்ளதாக இருக்க வேண்டும் நம் நட்பு அழியாத அன்பின் சின்னமாக விளங்க வேண்டும். நம் நட்பின் பொற் சங்கிலி என்றுமே துண்டிக்கப்படாமல் இருக்க வேண்டும். வெறும் வறட்டு மனப் பான்மைகளையோ, சோம்பேரித்தனமான செயல்களையோ, உபயோகமில்லாத உதவாக்கரை யோசனைகளையுடையதாகவோ இருக்கக் கூடாது. நம் நட்பின் அடிப்படையில் ஒரே லக்ஷியத்தை அடிப்படையாகக் கொண்டு, அதன்படி காரிய சித்திக்கு பாடுபட வேண்டும். ஆனல் நீங்கள் ஒருவழியில் போகலாம், நான் வேறு வழியில் போகலாம். முடிவில் நாம் ஒன்று சேர்வது ஒரே இடத்திலாக இருக்கவேண்டும். ஒருவருக்கொருவர் சகாயம் பண்ணுதல் மூலம் நம் நட்பை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அன்பரே! நான் உங்களை என் மனதுடன் திட்டியோ, ஏசியோ, காட்டியதில்லை. சில சமயங்களில் பரிகாச மாக சில வார்த்தைகள் கூறி யிருக்கலாம். அதை யெல்லால் மனதில் வைக்கலாமா? இன்று நாம் பேசாமல் இருந்தாலும் உங்களைப் பற்றி பிறரிடம் ஏதாகிலும் ஒரு வார்த்தை உங்கள் மனம் புண்படும்படி பேசினது கிடையாது.

நான் தன்னந் தனியாயிருக்கும் வேளைகளில் உங்கள் நினைவுவரும். உங்கள் மலர்ந்த முகமும், மாசற்ற அன்பும் என்னை அப்படியே ஒரு உலுக்கு உலுக்கிவிடும் உள்ளத்திலிருந்து குமுறிவரும் துக்கம் அழுகையாக மாறி சொட்டுச் சொட்டாகக் கண்ணீர் மல்கி அது தரையில் விழும். எத்தனையோ தடவைகளில் மனத் துணிவுடனும், திடத்துடனும் இருந்த நான் தங்கள் விஷயத்தில் கோழையாக மாறிவிடுகிறேன்.

'அவர் என்ன செய்தார் பாவம் களங்கமில்லா மனம் படைத்தவர். சிறுபிள்ளைத்தனமாக ஏதாவது சொன்னல்தான் என்ன? நாம் ஏன் அதைப் பொருட் படுத்த வேணும். ஒன்றுமறியாத அவரை ஏன் நாம் கண்டபடி சொல்லிக் காட்ட வேண்டும். அந்த இளம் மனசு என்னபாடு பட்டதோ? என்னென்ன நினைத்து அவதிப் பட்டதோ?'' என்றெல்லாம் நினைத்து நானே மனதை தைரியப் படுத்திக் கொள்வேன்.

நேற்று வந்த உங்கள் கடிதத்தில் தொனிக்கும் கோபம் நன்ருகத் தெரிகிறது. ''சற்றுக் கூட யோசனை செய்யாமல் என்னை இப்படி நினைத்து விட்டீரே?'' என்றவாக்கியத்தை படித்துவிட்டு நான் அப்படியே இடிந்து போனேன்.

நான் என்ன அப்படி சற்றுக் கூட யோசனை செய்யாது உங்களை பற்றி நினைத்தேன் என்று எனக்கே தெரியவில்லை.

நான் ஒன்றும் தங்களைத் தவராக நினைக்கவில்லையே. மிகவும் உயர் தரமான நோக்கங்களும் ஆழ்ந்த கருத்துக்களோடும் கூடிய உன்னதமான நண்பர் என்றல்லவோ நினைத்தேன்.

மிகவும் உயர்ந்த பண் பட்ட முற்போக்கு யோசனைகளுடன் கூடிய முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கும் முற்

போக்கான நண்பர் என்றல்லவோ நினைத்தேன்.

ஆழ்ந்து யோசனை செய்த பிறகே நீங்களும் முன்னேற மார்க்க மிருக்கிறது என்று திட்ட மிட்டேன்.

பணம் இன்று கிடைக்கும், நாளை போகும் என்பதுதான் உமக்குத் தெரியுமே! சிநேகம் நாளைக்கு திடீரென 'வா' என்றால் வந்து விடுமா? எத்தனை தேடினலும் உயர்ந்த சிநேகிதர்கள் கிடைப்பது துர்லபம்தான். அப்படியே கிடைத்தாலும் அது நீடித்து நிற்பது அதை விடக் கடினம்தான். ஆனல் அதற்கு மாருக எத்தனையோ பேர்கள் சிநேகம் பிடித்துக் கொள்ள போட்டி போட்டுக் கொண்டு வருவார்கள். அவைகள் எல்லாம் நம்மிடம் பசையுள்ளவரைதான் நிலைக்கும் என்பது யாரும் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயமல்ல.

நீர் என்ன சொன்னலும், உம்முடைய விஷயத்தில் என் மனம் அடைக்கலம் புகுந்து விட்டது. அதை அழிக்கவே முடியாது.

போனது போகட்டும். உம்முடைய பரிபூர்ண நம்பிக்கையின் மீது உம்முடன் தாராளமாக பேச ஒப்புக்கொள்கிறேன். ஆனல் ஒன்றை மட்டும் ஞாபகம் வைத்துக் கொள்வேன். புண்பட்ட என் மனதிற்கு சாந்தியை அளிக்க வல்லது அதுதான். முன்பு இருந்த பரிகாசம் கலந்த வார்த்தையாடல்களும் கருத்துடன் பேசப்படும் பயித்தியக்கார யோசனைகளும் இனி என்பேச்சில் தொனிக்காது. உமது மனதை கருகப் பண்ணி வேக வைக்க வேண்டுமென்பது என் விருப்பமல்ல.

நீங்கள் உமது லக்ஷியப்பாதையில் யாருக்கும் பயப்படாமல் தலை நிமிர்ந்து செல்லும் உதவாக் கரை உபதேசங்களை உதறித்தள்ளி விட்டு உத்வேகத்துடன் உங்கள் காரியத்திலேயே கண்ணுயிருங்கள். முருகன் அருள் புரிவார். வாழ்க நம் நட்பு.

தங்கள் அன்பன்,

....

★

மனித இதயம்

மனித இதயத்தோடு அதிகமாக விளையாடக் கூடாது. அது ஒரு அபாயமான வஸ்து. அதை முறுக்கேற்றுவதும். கலைத்துச் சின்ன பின்னப்படுத்துவதும் அழிவிற்கு வழி. ஆனல் அன்போடு அதைப் பழக்கினல் அற்புதங்களைச் செய்யும். நெருப்பைப் போல ஜ்வாலையும் நிறைந்ததாகவும் தண்ணீரைப் போல குளுமையும் தருவதாயும் இருக்கும். கண்ணிமைப்பதற்குள், ஏழு கடலுக்கும் அப்பால் போய் நிற்கும்; உணர்ச்சியில் பயந்தால் வான முகட்டிற்கும் அப்பால் முட்டி நிற்கும்; முரட்டுக் குதிரை போல, அடக்காதபடி சண்டித்தனம் செய்யும். இது தான் மனித மனம்!

தத்துவ ஞானி

'அரவிந்தன்'

அந்த நாய் என்னுடைய உயிர். இல்லை இல்லை உயிரினும் மேலானது. என் உயிரினும் மேலானது என்றால் நான் அதை மரணக் குழிக்குப் போகாமல் பிடித்து வைத்துக் கொள்ள முடியுமா? ஆம்......அது இறந்துபோய் விட்டது. இனி திரும்பவும் வராது. நேற்றுதான் இறந்தது. கழுத்தில் கட்டி போன்ற ஒன்று உண்டாக ஆரம்பித்தது. நேராக கால்நடை வைத்திய சாலைக்கு கொண்டு போய்க் காட்டினேன். முதல் ஒரு வாரம் என்னவெல்லாமோ மருந்து தடவினார்கள். கடைசியில் ஆபரேஷன் செய்ய வேண்டும் என சொன்னார்கள் நானும் சரி என்று ஒப்புக் கொண்டு விட்டேன். இந்த மாதிரி நடக்கும் என்று தெரிந்திருந்தால் ஒப்புக்கொண்டே இருக்க மாட்டேன். கட்டியை ஆபரேஷன் செய்கிறேன் என்று கழுத்தையே ஆபரேஷன் செய்து விட்டான். கால்மணி நேரம் துடி துடி என்று துடித்தது. அப்பொழுது அது எத்தனை கஷ்டப் பட்டிருக்கும் என்று என்னால் சொல்ல வாய் எழுவில்லை. கடைசியாக என்னை ஒரு பார்வை, என் மனம், மதி, மடமை எல்லாவற்றையுமே ஊடுருவுவது போல் பார்த்தது. அந்தப்பார்வை எனக்கு "உனக்கு முக்கியமான காரியத்திலெல்லாம் நன்மை செய்தேனே. அதற்கு எனக்கொரு நன்மை செய்யா விட்டாலும் கொன்று விட்டாயே!" என்று என்னைப் பார்த்து ஏளனம் செய்வது போலத் தோன்றியது.

நான் அவருக்குத் தொண்டைத் தண்ணீர் வறண்டு போகும் வரை ஆபரேஷன் செய்ய வேண்டாம் என்று முட்டிக் கொண்டேன். கேட்டால்தானே! இந்தப் புருஷர்களே இப்படித்தான். அவருக்கு அந்த நாயின்மேல் அன்பு உள்ளது போல், கருணை உள்ளது போல் எனக்கும் அன்பு, கருணை கிடையாதா ஆபரேஷன் வேண்டாம். கொஞ்சம் பிசகினாலும் கழுத்து என்று சொன்னேன். தனக்கு எல்லாம் தெரியும் என்று அகம்பாவமாக ஆபரேஷன் செய்யச் சொன்னார். அதன் பயன்.........இப்பொழுது உட்கார்ந்து கொண்டு துக்கப் படுகிறார். முதலில் தலையை விடுவானேன். அப்புறம் ஐயோ! தலை! தலை! என்று கத்துவானேன்?

அவன்

அவளுக்கும் அந்த நாயின் மேல் கருணை இருக்கிறதாம்! கருணை! எப்பவும் இந்தப் பெண்களே

தாங்கள் சொன்னதுதான் சரி என்று சாதிப்பார்கள். அப்படி அவளுக்கு அதன்மேல் கருணை இருக்குமானால் போன வருடம் எதற்காக அதை விட்டை

விட்டுத் துரத்தியேதான் தீரவேண்டும். இல்லா விட்டால் விவாகரத்து செய்து விடுவேன் என்று ஒற்றைக் காலில் நின்றாளாம்?

அந்த டாக்டர் தனக்கு நன்றாக ஆபரேஷன் செய்யத் தெரியும் என்று சொன்ன பிறகுதான் 'சரி' என்றேன். அப்படி ஒன்றும் அறிவில்லாமல் போய்விடவில்லை.

அவள்

அந்த டாக்டர் சொன்னாராம். இவர் சரி என்றாராம். ஒருவன் தன்னைத்தானே "நன்றாகச் செய்

வேன். நல்லவன்" என்று சொல்லிக் கொள்ளா விட்டால் வேறு யார்தான் அவனைப் புகழ்வார்கள்? நான் அன்று அந்த நாயைத் துரத்தும்படி சொன்னது உண்மைதான். இல்லா விட்டால் விவாகரத்து செய்வேன் என்றதும் உண்மையே. ஆனால் இப்பொழுது அவர் செய்தது நியாயமா? அன்று நான் செய்தது நியாயமா? நீங்களே சொல்லுங்கள்.

அவன்

இம்மாதிரி கேள்வி போட்டு விஷயத்தை மாற்றுவதெல்லாம் மழுப்பல் வேலை. அன்று அவள் செய்ததைவிட ஒன்றும் நான் செய்துவிடவில்லை. சீக்கிரமாக சொஸ்தமடைய வேண்டும் என்ற ஆசையால்தான் ஆபரேஷன் செய்யச் சொன்னேன். அது தப்பல்லவே. ஆனால் அவள் செய்ததையும் கேட்டுவிட்டு எது நியாயம் எது அநியாயம் என்று சொல்லி விடுங்கள்.

★

அவன்

நான் அப்பொழுதும் இதே கம்பெனியில் தான் உத்தியோகத்திலிருந்தேன். கோடை வெய்யில் பிளந்து கொண்டிருந்தது. உஷ்ணம் தாங்க முடியவில்லை. கம்பெனியோ கோடைக்காக சாத்தப்பட்டு விட்டது. "இதென்னடா இது சனியன். இன்னும் ஒண்ணரை மாதம் இதே அவஸ்தையா?" என்று சங்கடப்பட்டுக் கொண்டிருந்தேன். எங்கேயாவது மலை வாசஸ்தலம் போகலாமா? என்ற பிரச்னையில் இறங்கினேன். நல்ல வேளையாக என் நண்பன் ஜான் "ஏண்டா! கிரஹாம்டனுக்குத்தான் போயேன். இந்தக் கோடைக்கு அது தேவலோகம் போல இருக்கும்" என்றான். "நிஜமாகவா?" என்றேன். "பின் என்ன பொய்யா? தேவலோக அப்சரஸ்களைப்போல் நவநாகரீக நாரீமணிகளும் உலாவுவார்கள் ஜாக்கிரதை" என்று கண்ணைச் சிமிட்டினான். "எனக்குத் தெரியாதாடா" என்று பதிலுக்கு கண்ணைச் சிமிட்டி வைத்தேன். அன்று சாயங்காலமே கிரஹாம்ப்டன் எக்ஸ்பிரஸில் மூணாவது பெட்டியில் யாராவது தலையை நீட்டியிருந்தால் முதலில் என்னுடைய தரிசனம்தான் அவர்களுக்குக் கிடைத்திருக்கும்.

அவள்

கோடைக்காகப் பள்ளிக்கூடத்தை மூடித் தொலைத்து விட்டார்கள். எப்படியோ என்னை யறியாமல் இரண்டு வாரத்தைக் கழித்தேன். இன்னும் ஒரு ஐம்பது நாள் இருக்கிறதே இதையும் தூக்கத்திலேதான் கழிக்க வேண்டுமா? என்று துடித்துக் கொண்டே இருந்தேன். நல்ல வேளையாக தகப்பனார் "இங்கு விடுமுறையைக் கழிப்பது கஷ்டமாக இருந்தால் ஏதோ மீதி நாட்களை கிரஹாம்டனில் கழித்துவிட்டு வாயேன். என்னுடைய நண்பர் ஒருவரும் போகிறார்" என்றார். நடுக்கடலில் மூழ்கித் தத்தளித்துக் கொண்டிருப்பவன் கையில் ஒரு மரக்கட்டை கிடைத்தது போல் சந்தோஷத்திலேயே மூழ்கி விட்டேன்.

அவன்

கிரஹாம்டன் ரொம்ப நன்றாகத்தான் இருந்தது. மலைச்சரிவு, அதன் வழியாக ஓடும் நீரோடை, அந்த சீதோஷ்ண நிலை, இடையிடையே அமைந்திருந்த பழத்தோட்டங்கள் எல்லாம் மிக ரம்மியமாகத்தான் தோன்றிற்று. எனக்கு மட்டுமல்ல என் ஜிம்மிக்கும் (நாய்) அப்படித்தான் தோன்றிற்று போலிருந்தது. இல்லா விட்டால் எப்பொழுதும் என் பின்னால் வாலைக் குழைத்துக் கொண்டே வரும் ஜிம்மி இப்

பொழுது என் பக்கத்திலேயே காணமல் வீட்டிற்குத் திரும்பும் சமயம் நான் அதைத்தேட வேண்டி நேருமா? எந்த விதத்திலும் அந்த ஊர் என் நண்பன் சொன்னபடி தேவலோகமாகத் தான் பட்டது. வந்து நான்கு நாட்கள் ஆனலும் நான்கு நிமிஷங்கள் போலச் சென்று விட்டன.

அவள்

முதலில் என் தகப்பனரின் நண்பருடன்தான் கிரஹாம்ப்டன் சென்றேன். கிரஹாம்ப்டனிலும் இரண்டு நாளை அவருடன்தான் கழித்தேன். என் தகப்பனர் நண்பரின் பையன் என்னைவிட ஆறுவயது பெரியவன். அவனுடைய நடைமுறை எனக்கு கொஞ்சமும் பிடிக்கவில்லை. போதாக்

குறைக்கு ஒரு நாள் "நான் உன்னை......காத......லிக்கிறேன்" என்று இல்லாததை எல்லாம் உளறத் தொடங்கினன். மறு நாளே நான் தனியாக வேறு ஒரு ரூமை எடுத்துக் கொண்டேன். அதற்கப்புறம் இரண்டு நாள் ரொம்ப அருமையாகத்தான் இருந்தது. கையில் பணம் வேறு அதிகம் கேட்கவா வேண்டும். மறு நாள் சாயங்காலம் மலைச்சரிவு நீரோடையைப் பார்த்துவரலாம் என்று போனேன். கையில் அந்த நாகரீகப் பையையும் எடுத்துச் சென்றேன். பைத்தியக்காரி! கொண்டு வந்த பணத்தை யெல்லாம் ரூமில் ஒரு ரூபாய் கூட வைக்காமல் எல்லாவற்றையும் அதிலேயே வைத்திருந்தேன். நீரோடையைக் கண்ட சந்தோஷத்தில் பையை எங்கேயோ தவற விட்டுவிட்டேன். அதில் என்னுடைய அட்ரஸும், போட்டோவும் கூட இருந்தது. எது இருந்தால் என்ன? கிடைத்தவன் திருப்பிக் கொடுப்பானு என்று நினைத்தேன். இரவு ரூமிற்கு வந்தவள் மறுநாள் சாயங்கால ரயிலிலேயே ஏற உத்தேசித்தேன். பணம்......? ரயில் சார்ஜுக்கு என் தகப்பனரின் நண்பரிடம் கேட்கலாம் என்று நினைத்தேன்.

அவன்

வழக்கம்போல நீரோடைக்குச் சென்றேன். என்னுடைய நாயை ரூமிற்குப் போகும் நேரம் வந்தும் காணேம். சிறிது நேரம் காத்திருந்தேன். "ஜிம்மி, ஜிம்மி" என்று சத்தம்போட்டேன். நான் கத்துவதற்கு முன்னமே அது வாயில் ஒரு பையுடன் ஓடி வந்து கொண்டிருந்ததை நான் கவனிக்கவில்லை. நான் கத்தியவுடன் இன்னும் வேகமாக ஓடி

வந்து பையை என் காலுக்கடியில் போட்டது. ஒரு நவநாகரீகப் பெண்ணின் பை! அதில் அந்தச் சொந்தக்காரியின் போட்டோவும், அட்ரஸும் கூட இருந்தது. யாரிடமிருந்தாவது விளையாட்டாகப் பிடிங்கிக் கொண்டு வந்திருக்கும். யாராவது வந்து கேட்டால் கொடுத்து விடலாம் என்று காத்திருந்தேன். அரைமணி நேரமாகியும் ஒருவரும் வரவில்லை. என் ரூமிற்கு வந்து விட்டேன். பையைத் திறந்தேன். எண்பது ரூபாயும் சில்லரையும்! பாவம் அவள் எப்படி வருத்தப் பட்டுக் கொண்டிருக்கிறாளோ? நாளைக்கே கொடுத்து விடலாம் என்று தீர்மானித்தேன். ஆனால் என்னையறியாமலேயே அந்தப் போட்டோவை அடிக்கடி எடுத்துப் பார்த்தேன். காரணம்.........? கடைசியாக...... இந்தப் போட்டோவிலுள்ள பெண்ணைப் பார்ப்பதற்காகவாவது கொண்டு போய் கொடுக்கலாம் என்பது என் முடிவு.

அவள்

என் தகப்பனாருடைய நண்பர் பலே பேர்வழி! ஏதோ ஒரு பெண்மணி பர்ஸை தொலைத்து விட்டாளே, ஊருக்குப் போகவும் பணமில்லையே என்று கடன் கேட்கிறாளே என்று அவருக்கு மனம் வரவில்லை. அவருடைய மகனைக் கலியாணம் செய்து கொள்ள விரும்பவில்லையா? காதலைப் புறக்கணிக்கிறாயா? என்றெல்லாம் பிரசங்கம் அடிக்க ஆரம்பித்து விட்டார். மறுபேச்சுப் பேசாமல் என் ரூமிற்கு வந்து விட்டேன். ஜன்னல் பக்கத்தில் உட்கார்ந்து இனி என்ன செய்வது என்று மண்டையை யோசனைச் சுத்தியால் உடைத்துக் கொண்டிருந்தேன். அந்த சமயம் தான் அவர் அந்தப் பக்கமாக வந்து கொண்டிருந்தார்.

அவன்

அன்றிரவு யோசனை செய்தபடியே மறுநாள் அந்தப் பையை எடுத்துக்கொண்டு அவள் ரூமை நோக்கிப் புறப்பட்டேன். என்னையறியாமலேயே அவளுடைய போட்டோவை எடுத்து

வைத்துக் கொண்டேன். பதிலுக்கு என்னுடைய போட்டோ ஒன்றை............ வீட்டு ஜன்னல் பக்கத்தில் அவள் கவலை தோய்ந்த

முகத்தோடு உட்கார்ந்திருந்தாள். அந்தக் கவலை தோய்ந்த முகத்திலும் ஒரு அழகைக் கண்டேன். தலையை நன்றாக நிமிர்த்தி அழகைப் பருக ஆரம்பித்தேன். அதற்குள் அவளும் என் பக்கமாக எதற்கோ தலையைத் திருப்பினாள். இரு கண்களும் சந்தித்தன. அவளுடைய வெண்மையான முகம் நாணத்தால் சிவந்தது. அதிலும் ஒரு தனி அழகு பொருந்தியிருந்தது. ரூமிற்குள் சென்றேன். பையை அவளிடம் கொடுத்தேன். மலர்ந்த முகத்துடன் "தாங்க்ஸ்" சொன்னாள். அவளுடன் கை குலுக்கிய போது என் தேகம் சில்லிட்டது. அதற்கப்புறம் என் ரூமிற்கு மத்தியானந்தான் திரும்பினேன். ஏனோ...?

அவள்

நல்ல வேளையாக என்னுடைய மணிபர்ஸ் கிடைத்து விட்டது. ஒரு காசு கூடப் போகவில்லை, என் போட்டோவைத் தவிர. ஆள் கைகார ஆள். என்னுடையதை திருடியதுமல்லாமல் அவருடையது ஒன்றையும் போட்டு வைத்திருந்தார். ஆனாலும் அது எனக்கு உபயோகமாயிருந்தது என்று வைத்துக் கொள்ளுங்களேன். பேச்சு வாக்கில் "நான் தனியாகத்தான் இருக்கிறேன். இந்த ஊரைச் சுற்றிக் காட்டுவதற்கு யாராவது இருந்தால் நல்லது" என்று சொல்லி வைத்தேன். அந்த வார்த்தைகள் எப்படித்தான் என் வாயிலிருந்து வந்ததோ? அது எனக்கே தெரியாது. ஆனாலும் இப்படியாவது சொன்னால் அவருடன் எங்காவது வெளியே போகலாம் என்ற எண்ணந்தான். அதுவும் வீண் போகவில்லை.

அவன்

மறு நாளிலிருந்து அவளுக்கு ஊரைச் சுற்றிக் காட்டுவதிலேயே ஒரு மாதமும் கழிந்து விட்டது. இன்னும் ஒருமாத விடுமுறை இருந்தால் தேவலை என்று மனம் நினைத்தது. மனது எதைத் தான் நினைப்பதில்லை. எது எப்படி நடந்தாலும் என் நாயை மறக்க முடியுமா? அது தானே இத்தனைக்கும் காரணம். அவளும் நானும் சேர்ந்தே அவரவர்கள் ஊருக்குப் புறப்பட்டோம். முதலில் அவள் ஊரில் அவள் இறங்கி விட்டாள். அடிக்கடி கடிதம் எழுதும்படி அன்பாக உத்திர விட்டாள். ஆம்! அதை உத்தரவாகவும், கடமையாகவும் மேற்கொண்டேன். ரயில் மறையும் வரை இருவரும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். மறுபடியும் நாம் சந்திப்போமா? நமது எண்ணம் ஈடேறுமா? என்ற ஏக்கம் என்னை அடிமைப்படுத்த ஆரம்பித்தது. ஆனாலும் தவறாமல் கடிதம் போட்டு வந்தேன். அவைகளுக்கு அவள் பொன்னெழுத்துக்களால் பதில் வந்து கொண்டே இருந்தது. ஒரு சமயம் அவளிடமிருந்து பதில் வழக்கமான காலத்தில் வரவில்லை. சற்று பரபரப்பை ஏற்படுத்தியது. ஒரு வாரமாயிற்று. அப்படியும் வரவில்லை. கடைசியாக பழக்கமில்லாதவர் கையெழுத்துடன் ஒரு கடிதம் வந்தது. அவள் தகப்பனாரே எழுதியிருந்தார். "எதற்காக இத்தனை நாள் என்னிடம் சொல்லாமலேயே ஒளித்து வைத்திருந்தீர்கள். இத்தனை நாள் நடந்தது போகட்டும். உங்கள் கலியாணத்தை அடுத்த மாதம் நடத்தி விடலாம் என்று நிச்சயித்திருக்கிறேன். உறவினர்களின் சம்மதத்தைக் கேட்டு எழுதவும்" எனக்கு "சரி வேண்டும்" "சீ கூடாது" என்று சொல்ல யார் இருக்கிறார்கள்? தாய், தகப்பன் கண் மூடி பத்து வருஷத்துக்கு மேலாயிற்று. அண்ணன் ஒருவன் தான். அவன்தான், நான் கலியாணம் செய்து கொண்டால் போதும் என்றிருக்கிறானே!

அவள்

அவர் வழக்கம் போல கடிதம் போட்டுக் கொண்டேதான் வந்தார். தபால்காரனிட மிருந்து நானே நேராக கடிதங்களை வாங்கி விடுவது வழக்கம். அன்று என் சிநேகிதி வீட்டுக்குப் போய் விட்டேன். கடிதம் தகப்பனார் கையில் கிடைத்து விட்டது. ஒரு வேளை அவர் சிநேகிதனின் பையனைக் கலியாணம் செய்து கொள்ளச் சொல்லுவாரோ என்று பயந்தேன். என்ன ஆனாலும் அவரையே கலியாணம் செய்து கொள்வது இல்லாவிட்டால் தற்கொலை செய்து கொள்வது என்ற முடிவுக்கும் வந்தேன். ஆனால் நல்ல வேளையாக அந்த மாதிரி ஒன்றும் நடந்து விடவில்லை. சரி உன் சம்மதம். இத்தனை நாள் ஏன் என்னிடம் சொல்லவில்லை? என்று என்னைக் கேட்டார். கடைசியாக அவருக்கும் கடிதம் எழுதி வரவழைத்து விட்டார். பக்கத்து சர்ச்சிலே (Church) யே விவாகம் முடிந்தது. அப்புறம் என்ன நடந்தது என்று சொல்ல வேண்டுமா? முடிந்த அன்றே அவரோடு ஊருக்கு வந்து விட்டேன்.

அவன்

கலியாணம் நடந்து ஒரு மாத மாவதற்குள்ளேயே இந்த மாதிரி பூசல் நடந்து விடும் என்று நான் எதிர்பார்க்கவே யில்லை. நான் என்னவோ அவளைக் காதல், கீதல் என்று சொல்லி மோசம் பண்ணி விட்டேனாம்! அவள் மேல் நிஜமாகக் காதல் கொண்டிருந்தால் இந்த மாதிரி நடந்து கொள்ள மாட்டேனாம். நாயுடனேயே கொஞ்சிக் கொண்டு அவளோடு ஒரு வார்த்தை கூடப் பேசுவதில்லையாம். பின் நாயுடன் கொஞ்சாமல் என்ன செய்வதாம். அவளை அடைவதற்கு அது தானே காரணமாயிருந்தது. அன்று அந்தப் பையை அது எடுத்து வந்திரா விட்டால் அவள் யாரோ? நான் யாரோ? அப்படியுந்தான் அதிகம் என்ன கொஞ்சி விட்டேனாம்? ஏதோ இரண்டு மூன்று தடவை அவள் எதற்கோ கூப்பிட்டாள். அதனுடன் விளையாடிக் கொண்டிருந்த சுவாரஸ்யத்தில் அவள் கூப்பிட்டதைக் கவனிக்காமலே இருந்து விட்டேன். அதனால் அவள் மேல் எனக்கிருந்த அன்பு குறைந்து விடுமா? அதற்காக வெட்டிப் பூசல். அந்த நாயை வீட்டை விட்டே துரத்திவிட வேண்டுமாம். இல்லா விட்டால் ஒரு மாத நோட்டீஸில் விவாக ரத்து செய்து விடுவாளாம். ஒரு வேளை ஸ்திரீகளின் தன்மையே இதுதான் போலிருக்கிறது.

அவள்

என்ன வெல்லாமோ கோட்டைகளை கட்டி வைத்திருந்தேன். அத்தனையும் பொடி தான். அருமையான தண்ணீர் என்று நினைத்துச் சேற்றில் காலை விட்டு விட்டேன். வந்த முதல் இரண்டு வாரம் ஏதோ அதன் மேலிருக்கும் அன்பு மிகுதியால் இருக்கிறார். அப்புறம் திருந்திவிடுவார் என்று எத்தனையோ பொறுத்துப் பார்த்தேன். வந்ததும் வராததுமாகச் சண்டை வேண்டாம் என்று நினைத்தேன். இன்னும் இரண்டு வாரமும் காலம் கடத்தினேன். அதற்கப்புறம் என்னால் பொறுக்க முடியவில்லை. எப்பொழுது பார்த்தாலும் நாய், நாய், நாய்தானா? நான் என்ன நாயைவிட கெட்டு விட்டேனா? அப்படிக் கெட்டு மோசமாக இருந்தால் அந்த நாயையே காதல் செய்து கல்யாணமும் செய்து கொள்வதற்கென்ன? பின் எதற்காக என்னை காதல் செய்து கல்யாணம் செய்து கொண்டீர்கள்? ஆத்திரம் தீரக் கேட்டேன். அதற்கு சாவகாசமாக நானும் ஒரு நாயாக இருந்தால் கட்டாயம் காதல் உண்

டாகியிருக்கும் என்றார். எப்படியிருக்கிறது? கம்பெனியிலிருந்து வீட்டுக்கு வந்தால் "ஜிம்மி" "ஜிம்மி" என்று சத்தம் போட்டுக் கொண்டுதான் வருகிறார். அவர் வருகைக்காக காத்திருக்கும் என்னை அவர் கண்ணுக்குத் தெரிந்து கொள்ள முடியவில்லை. எங்கேயே தோட்டத்தில் அலையும் அதுதான் புலப்படுகிறது. இதையெல்லாம் பார்த்தால் அவர் உண்மையாக என்னை நேசிக்கிறாரா? என்று எனக்குச் சந்தேகம் உண்டாகத்தான் செய்தது. உடனே விவாக ரத்து செய்து விட்டு என்னுடைய ஊரிலேயே ஏதாவது வேலையில் சேர்ந்தால் போகிறது என்ற முடிவுக்கு வந்தேன். பின் வேறு என்ன செய்வதற்கு இருக்கிறது?

அவன்

இன்னும் ஒரு வாரத்திற்குள் ஜிம்மியை வீட்டை விட்டே துரத்த வேண்டுமாம். இல்லாவிட்டால் விவாக ரத்து செய்து தன் வீட்டிற்குப் போய் விடுவதாகச் சொல்லி விட்டாள். அவள் மேல் எனக்கு அன்பு இல்லையாம்! என்ன பேச்சு! அவள் மேல் அன்பு இல்லாவிட்டால் எதற்காக முதல் முதல் அவளுடைய போட்டோவைப் பார்த்ததுமே அப்படியே பணத்தைக் கொண்டு போய் அவளிடம் கொடுத்தேனாம்? பிரிந்த பிறகும் கூடத் தவறாமல் இரண்டு நாளைக்கு ஒரு கடிதம் போடத் தவறுவதில்லையே! அதிலிருந்து என் அன்பு விளங்கவில்லையா? பேதை. பாவம், என்ன செய்வாள்? ஸ்திரீகளுக்கு உள்ள இயற்கைக் குணம் அது. தன் கணவனின் அன்பை இன்னொருவர் பெற்று விட்டார்களென்றால் அவர்கள் மேல் பொறாமைப்பட்டு எப்படியேனும் கொன்றேனும் விட வேண்டும் என்பது இயல்புதானே! இப்படிப்பட்ட மனம் வருவதற்கும் அந்நாயே என்னுடைய முழு அன்பையும் பெற்று விடவில்லையே! அது பெற்றது வாஞ்சை! அவள் பெற்றது காதல்! இதில் சந்தேகமென்ன? எந்த விதத்தில் பார்த்தாலும் அந்த நாயால் அவள் ஒரு தீங்கையும் அடைந்து விடவில்லை. அது அவளையும் நேசிக்கத்தான் செய்கிறது. வாயில்லா ஜீவன் பாவம்! நேற்று அவள் பின்னாலேயே வாலைக் குழைத்துக் கொண்டு போய் அதற்குப் பதில் ஒரு உதையுடன் திரும்பியது. பெண்கள் பிடிவாத குணமுடையவர்கள் என்பதைக் காதால் கேட்டிருக்கிறேன். இப்பொழுது பார்த்தே விட்டேன். நான் ஒரு இருதலைக் கொள்ளி எறும்பு. நேசனைப் பிரிய மனமில்லை. அதே சமயம் காதலியையும்......

அவள்

நான் ரொம்ப முட்டாள். பெண் புத்தி பின் புத்தி என்பதை என் வாழ்க்கையிலேயே காட்டி விட்டேன். அன்று மத்தியானம் என் தகப்பனாருக்கு நான் விவாக ரத்து செய்து விடப் போவதாகக் கடிதம் எழுதிக் கொண்டிருந்தேன். அப்பொழுது ஜிம்மி வாலை ஆட்டிக் கொண்டு என் பக்கத்தில் வந்து நின்றது. எனக்கிருந்த ஆத்திரத்தில் "சீ நாயே! உன்னால்தானே இத்தனை தூரத்திற்கு வந்து விட்டது. கட்டிய கணவனைக் குலவ விடாமல் நீ ஒரு போட்டியா?" என்று அதன் முதுகில் ஒரு அறை பலமாக வைத்தேன். இன்னொரு அறைக்குக் கையை ஓங்கினேன். அதிலிருந்து தப்புவதற்காகச் சற்று பின் பக்கமாக ஓடிற்று. ஓடின வேகத்தில் இங்க் பாட்டிலைத் தட்டியது. அதிலிருந்த மை முழுவதும் கடிதத்தின் மேல் கொட்டியது. என்னுடைய கோபம் பன்மடங்கு அதிகமாயிற்று. நன்றாகப் புடைத்து விட்டுத்தான் மறுகாரி

யம் என்று கையில் குச்சியுடன் அதைத் தொடர்ந்தேன். நேராக அவர் அறைக்குள் ஓடி ஒளிந்தது. நானும் சென்றேன். அதுதான் முதல் தடவை அவர் அறைக்குள் சென்றது. உள்ளே போனதும் போகாததுமாக ரோஜாப் பூ வாசனை மூக்கைத் துளைத்தது. நாயை அடிக்க வந்ததையும் மறந்து ரோஜா எதற்கு என்று என் மனம் நாடலாயிற்று. எதிர் சுவரில் ஒரு ஸ்டாண்ட். அதில் படம் தெரியாதபடி ரோஜா மாலையால் மூடப்பட்டிருந்தது. ஒரு வேளை கடவுளின் திருவுருவமோ என்று புஷ்பத்தை விலக்கினேன். அந்தப் போட்டோ...... ஆம்...... என்னுடையதுதான்.!

அவன்

இன்னும் இரண்டே இரண்டு நாள்தான் அவள் என் வீட்டில் இருப்பாள். அல்லது என் ஜிம்மி இரண்டு நாள்தான் இருக்கும். வீட்டிற்குச் சென்றதும் செல்லாததுமாக நான் கண்ட காட்சி என்னைப் பிரமிக்கச் செய்தது. கண்ணை நன்ருகக் கசக்கிப் பார்த்தேன். கனவா, நனவா? எந்த நாய் எந்தப் பெண்ணால் துரத்தப்படவேண்டும் என்று பிடிவாதம் செய்யப்பட்டதோ அதே நாய் அதே பெண்ணின் கைகளில் வாலைக் குழைத்துக் கொண்டிருந்தது. ஆனால், "இந்தக் காயத்தைப் பாருங்கள்" என்று மனைவி சொன்னதும், மனம் துணுக்குற்றது. பிறகு ஆஸ்பத்திரிக்கு இட்டுச் சென்றேன். நாய் அத்தியாயம் முடிந்தது...... இடையே நின்ற திரை அகன்றது. மனைவிக்கு மகிழ்ச்சி. எனக்கோ....?

★ • ★ ★

நெஞ்சு நெக்குருகி நீர் சொரிந்த

எழுத்தாளத் திலகம் தூரன்

எட்டயபுரம் பாரதி விழாவின் போது, பாரதியார் வீட்டின் மேல் தேசீயக் கொடியேற்றுவித்து நண்பர் தூரன் பேசுகையில் அவருடைய உணர்ச்சிப் பிரவாகம் கரை கடந்து விட்டது. பாரதி பக்தர்களையும், பாரதி வீட்டையும், பாரதியார் கனவையும் கண்டவுடன் தம்மை மறந்து இதயம் பொங்கக் கண்கள் நீர் மழையெனக் கொட்ட பாலனைப் போல் கதறி விட்டார். அந்த உணர்ச்சி வேகம் யாவரையும் பதுமைகளாக்கிக் கல்லாய்ச் சமைத்து விட்டது.

பாரதி விழாவில் நம் கவிதா நிருபர் தேக்கித் திளைத்த அற்புதங்களும் நம் 'காமிரா' நிபுணர் 'கண்டு எடுத்த' காட்சிச் சித்திரங்களும் விரிவாக வருகிற இதழில் வருகின்றன.

இருபத்தாறு ஆண்களும்

மூல ஆசிரியர்:
மாக்ஸிம் கார்க்கி

நாங்கள் இருபத்தாறு பேர்கள் — இருட்டறையில் அடைக்கப் பட்ட இருபத்தாறு உயிர் யந்திரங்கள். காலை முதல் இரவு வரை மாவு பிசைந்து, ரொட்டி தயாரிக்க வேண்டும். எங்கள் அறையின் ஜன்னல்கள் திறந்திராது; ஜன்னல் கம்பிகளின் வழியே சூரிய வெளிச்சங்கூட உள்ளே வராதபடி இரும்பு வலையால் ஜன்னல்கள் அடைக்கப் பட்டிருந்தன. எங்கள் முதலாளி, வேலையில்லாது பசியால் வாடும் எங்கள் சகோதரர்களுக்கோ, பிச்சைக்காரர்களுக்கோ ஜன்னல் வழியாக ரொட்டியைக் கொடுத்து விடாதபடி தடுத்து அடைத்திருந்தார். அவர் எங்களை "அடிமைக் கூலிகள்" என்றே அழைப்பார்; எங்களுக்கு சாப்பாட்டிற்கு பதிலாக கடைகளில் விற்கப்படாது போகும் மடிசல் ரொட்டித் துண்டுகளையே ஆகாரமாய்க் கொடுப்பார்.

வெளிச்சமும், காற்றோட்டமும் இல்லாத கற்சுவர்களுக்குள்ளேயே தான் புழுங்கி வேதனைப் படுவோம். மேலெங்கும் ஒரே ஒட்டடையும், சிலந்தி வலைகளும் தான்! இருண்ட, ஆபாசமான அந்த இடத்திலிருந்து நன்கு மூச்சு விடக்கூட முடியாதபடி சதா நோயால் துன்புறுவோம். போதிய நித்திரைகூட இன்றி காலை ஐந்து மணிக்கெல்லாம் எழுந்திருக்க வேண்டும்; ஆறு மணிக்கு முன்பே, இரவெல்லாம் கண் விழித்து எங்கள் தோழர்கள் பிசைந்து வைத்திருக்கும் மாவை எடுத்து ரொட்டி தயாரிப்போம்; காலை முதல் இரவு பத்து மணி வரையிலும், எங்களில் சிலர் பலகையில் உட்கார்ந்து கொண்டு பக்குவம் கெட்டுவிடாதபடி, மாவை பிசைந்து பக்குவப் படுத்திக் கொண்டிருப்போம்.

காலை முதல் இரவு வரை அடுப்பு எரிந்து கொண்டேயிருக்கும். அந்தத் தீயினின்று எழும் பொறிகளும், ஜ்வாலையும் சுவற்றில் வீசி, அது எங்களைப் பார்த்து பரிகசித்து ஆடுவதைப் போலிருக்கும். அந்த அடுப்பு பழைய புராணக் கட்டுக் கதைகளில் வரும் பெரிய பூதத்தின் தலையைப் போன்று — அகலத் திறந்த வாயால் நெருப்பைக் கக்கிக் கொண்டு பூமியிலிருந்து வெடித்து வெளியே வருவதைப்போல் அது எங்களுக்கு பயங்கரமாய்த்தோன்றும்; அது அதன் வாய்க்குமேல் உள்ள இரண்டு துவாரங்களின் வழியாக எங்கள் ஓய்வற்ற வேலையைக் கண்டு சீறி அனல் மூச்சு விடுவதைப் போன்றிருக்கும். அந்த இரண்டு துவாரங்களும் ராக்ஷஸனுக்கு உள்ளதைப் போன்ற இரக்கமற்ற, கொடிய இரண்டு கண்களைப் போலிருந்தன. அவைகள் அடிமைகளைப் பார்த்து அலுத்துப் போயிருந்த போதிலும், அதே இருண்ட பார்வையோடு எங்களைச் சதா பார்த்துக்கொண்டே இருக்கும்.

நாளுக்கு நாள் புகை சூழ்ந்து போய், மாவும், வெளியேயிருந்து வரும் எங்கள் காலடி மண்ணும் நிரம்பிப்போய் ஒரே புழுதியும் துர்நாற்றமும் ஏற்பட்டது. அதிலே தான் நாங்கள் மாவைப் பிசைந்து

ஒரு பெண்ணும்

மொழி பெயர்ப்பு:

அ. சிங்காரவேலு.

ரொட்டியை தயாரிப்போம். எங்கள் வேலையை மிக்க ஆத்திரத்தோடு நாங்கள் வெறுத்த போதிலும், எங்கள் கைகளால் தயாரிக்கும் அந்த ரொட்டித் துண்டில் ஒன்றைக்கூட நாங்கள் தின்ன மாட்டோம். நீண்ட பலகைகளில், ஒன்பது ஒன்பது பேர்களாக எதிர் எதிராக உட்கார்ந்து கொண்டு பூட்டிவிட்ட யந்திரங்களைப்போல் வேலை பார்ப்போம். நாங்கள் எங்களில் ஒருவரைப் பற்றி யொருவர் நன்ருக தெரிந்து கொண்டிருந்தோம்! ஒருவர் முகத்தில் ஏற்படும் சுருக்கத்தைக்கூட நாங்கள் பூரணமாய்த் தெரிந்து கொள்வோம். நாங்கள் ஒருவருக்கொருவர் வாய் பேசாதபடி, மௌனமாகவே வேலை செய்வோம். நாங்கள் எப்போதுமே, பேசாது மௌனத்தை கடைப்பிடித்தே வருவோம். ஏனெனில் பேசுவதென்ருல் எப்போதுமே யார் பேரிலாகிலும் குற்றம் சாட்டிப் பேசுவதாய்த் தான் ஆகும்.

அதுவும் எங்கள் தோழர்களுக்குள்ளேயே. ஆனல் எங்களுக்குள் வாய்ப்பேச்சு முற்றி சண்டையுண்டாவதென்பது ரொம்ப அபூர்வமாக இருக்கும். ஒரு மனிதன் அரை உயிராய் இருக்கும் போது அவன் எப்படி பிசகு செய்வான்; அவன் ஊமையைப் போலிருந்தாலும் அன்ருட அவனது வேலைக் கொடுமையின் ஒவ்வோர் உணர்ச்சியையும் எப்படி மனதில் திணித்து அடைத்து வைத்திருக்க முடியும்? பேசாமை என்பது எல்லாம் பேசித்தீர்த்து பேசுவதற்கு ஒன்றுமே இல்லாதவர்களுக்குத்தான்; ரொம்ப கஷ்டமாயும், துக்கமாயும் தெரியும்; ஒன்றுமே பேசாதவர்களுக்கு பேசாமை என்பது ரொம்ப சாதாரண காரியமாகும்.

சில சமயங்களில் நாங்கள் பாடுவோம்; வேலையின் மத்தியில் திடீரென்று, பாட்டை ஆரம்பிப்போம். எங்களில் ஒருவன் ஓடிக்களைப்படைந்த குதிரைபோன்று பலத்த பெரு மூச்செறிவான்; மெதுவான குரலில் நீட்டிப்பாடும் பாட்டைப் பாடும்போது, அந்தப் பாடகனின் இதயத்தை வருத்திக் கொண்டிருக்கும் கனம் வர வரக் குறைந்து வருவதைப் போலிருக்கும். எங்களில் ஒருவன்தான் பாடுவான்; நாங்கள் முதலில் அமைதியாக அவனது தனித்த பாடலைக் கேட்டுக் கொண்டிருப்போம்; பின் இன்னொருவனும் அவனேடு சேர்ந்து கொள்வான்; அவர்கள் இருவரும் சேர்ந்து பாடுவார்கள்; மிருதுவான அந்த இரண்டு குரல்களிலும் துக்கம் தொனித்து வரும். உடனே இன்னும் பலரும் சேர்ந்து பாடுவார்கள்; அது அலைகளைப் போன்று வேகமாய் எழும்பி, எங்கள் சிறை போன்ற கனத்த கற்சுவர்களையெல்லாம் தகர்த்தெறிவது போலிருக்கும்.

பின் நாங்கள் இருபத்தாறு பேரும் பாடுவோம்; எங்கள் உரத்த குரல்கள், அப்பியாசத்தால் ஒன்ருய்ச்சேர்ந்து, அந்த அறையில் ஒரே மாதிரியாய் ஒலிக்கும்; எங்கள் பாடல் அங்கே, அந்தக் கற்சுவர்களை இடித்துத் தள்ளுவதைப் போலிருக்கும்..........பாடகர்கள் ஆழ்ந்த, பெருமூச்சு விடுவார்கள்

ஒருவன் தன் பாட்டை முடித்து விட்டு, மற்ற தோழர்களைக் கவனித்துக் கொண்டிருப்பான். ஒருவன் கண்களை மூடிக் கொண்டு மிக்க வேதனைக் குரலோடு 'ஆ' வென்று அலறுவான்;......

அடுப்பில் நெருப்பு ஜ்வாலை விட்டு எரிந்து கொண்டிருக்கும். கொப்பரையில் தண்ணீர் கொதித்துக் கொண்டிருக்கும்; தீயின் ஜ்வாலை சுவற்றில் படர்ந்து எங்களைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்கும்... நாங்கள் கற்றுக் கொண்டிருந்த பாட்டோடு, எங்கள் துயரம் மிகுந்த வாழ்கைக்குரிய வெளிச்சத்தையும் காணாதபடி, அடிமைகளாகவே ஆழ்த்தி வைத்திருந்தது. இவ்விதம், நாங்கள் இருபத்தாறு பேர்களும் வாழ்ந்தோம்......

2

எப்படிக்கும், எங்கள் பாட்டுக்களோடு மற்றும் ஓர் இனிய விஷயமும் இருந்தது. எங்கள் கிடங்கின் இரண்டாம் தளத்தில், தங்கப் பூவேலை செய்யும் கடை ஒன்றிருந்தது. அங்கே அநேகம் பெண்கள் வேலை பார்த்து வந்தார்கள்; அவர்களில் தான்யா என்னும் பதினாறு வயதுள்ள ஒரு பெண்ணும் வேலை பார்த்தாள். ஒவ்வொரு நாள் காலையிலும், நீலக் கண்களுடைய ரோஜா மலர் போன்ற ஓர் அழகிய முகம்; கதவுக்கும் பின்னால் நின்று தலையை நீட்டி "சின்னக் கைதிகளே, எனக்குக் கொஞ்சம் ரொட்டி கொடுங்கள்" என்று இனிய குரலில் கேட்கும்.

நாங்கள் எல்லோரும் சந்தோஷத்தோடு திரும்பி வசீகரமான, சந்தோஷம் மிளிரும் அந்தப் பெண்ணின் முகத்தை உற்றுப் பார்ப்போம். அவளது ரோஜா இதழ்களைப் போன்ற இரு உதடுகளுக்கும் இடையே உள்ளே வெண்ணிறப் பற்களையும், அவள் கண்களில் அணிந்திருக்கும் மூக்குக் கண்ணாடியையும் பார்த்து விட்டு நாங்கள் ஆனந்த பரவசமடைவோம். நாங்கள் ஒருவரை ஒருவர் இடித்துப், பிடித்துத் தள்ளிக் கொண்டு, அவளுக்குப் போய் கதவைத்திறந்து விடுவோம்; அவள் தலைத்துணியை எடுத்துக் கொண்டு உள்ளே வந்து நிற்பாள்; எங்கள் முன் நின்று கொண்டு சதா சிரித்துக் கொண்டேயிருப்பாள். அவளது நீண்ட ஜடை பின்னல் தோளின் வழியாய் மார்பில் ஒதுங்கிக் கிடக்கும். நாங்கள் — அழுக்குப் பிடித்த விகாரமான கறுத்த பையன்கள் — அங்கு எட்டயிருந்தபடியே தலையைத் தூக்கி அவளைப் பார்த்து அவளுக்கு காலை வந்தனம் சொல்வோம். (அவள் நிற்கும் அந்தத் தாழ்வாரம் நாங்கள் இருக்கும் இடத்தை விட நாலடி உயரம் அதிகம்.) நாங்கள் அவளுடன் பேசும் பொழுது, எங்கள் தமாஷ்களை அடக்கிக் கொண்டு, மிருதுவாகப் பேசுவோம். அவள் எங்களோடு இருக்கும் பொழுது எங்களுக்கு எல்லாமே சந்துஷ்டியாகத் தோன்றும். எங்கள் ரொட்டி சுடுபவன், கரண்டியால் ஓர் துண்டை எடுத்து, நைசாக அவள் குல்லாயில் போடுவான்.

அவளிடம் நாங்கள் சொல்லுவோம் "இந்தா! இப்படி எல்லாம் நீ செய்யக் கூடது, பார்த்துக்கொள்" என்று. அவள் ஒரு விதமான சிரிப்புச் சிரித்து விட்டு, "உங்களுக்கு வந்தனம், சின்னக் கைதிகளே" என்று சொல்லிக் கொண்டே சுண்டெலி மாதிரி சுருக்காகப் போய் விடுவாள்.

அது அவ்வளவுதான் ... அவள் போன பிறகு நாங்கள் ஒருவருக்கொருவர் அவளைப் பற்றி சந்தோஷத்தோடு பேசிக் கொள்வோம்; ஏனெனில் அவளும், நாங்களும்,

மற்றும் உள்ள எல்லாமே, நேற்று முன் தினம், அதற்கு முதல்நாள் இருப்பதைப் போன்று தான், அப்படியிருந்தது. ஓர் மனித னுக்கு அவன் சூழ் நிலையில் ஒன் றும் மாறுதல் இல்லாதபடி சதா ஒரே மாதிரியாய் வாழ்வதென்பது மிகக் கொடிய, வருந்தத்தக்க விஷயமாகும். அதிலும் அது அவன் உயிரைக் கொல்லாத வரை அந்த மாறுதல் சுற்றுச் சார்பு கள் வளர்ந்து போய் அவன் உயி ருள்ளவரை அவனை வருந்தாத நில மையிலே வீணாக்கி விடுகிறது...... நாங்கள் எப்பொழுதுமே, பெண் களைப் பற்றி ஒரு விதமாகவே பேசி வருவோம். நாங்கள் சமயங் களில், அப்படிப் பேசுவதால் நாங் களே எங்கள் வெட்கக் கேடான பேச்சுக்களைக் குறித்து மன வேத னைப் படுவோம். ஆனால் தான்யா வைப் பற்றி நாங்கள் என்றுமே தவருகப் பேசியது கிடையாது; அவள் எங்களிடம் பெரியதமாஷ் பேச்சு ஒன்றையும் கேட்டே யிருக்க மாட்டாள்; நாங்கள் யாரும் அவள் மேல் ஓர் விரல் வைக்கக் கூடத் துணிய மாட் டோம். அவள் எங்களிடம் அதிக நேரம் நிற்பதில்லை; வானிலி ருந்து விழிக்கும் நட்சத்திரத்தைப் போன்று அவள் வந்ததுமே சீக் கிரத்தில் மறைந்து போய் விடு வாள். அவள் சிறு பெண்ணும், அழகாயுமிருந்தாள்; சாதாரணநிலை மையிலுங்கூட, அழகுக்கே தனி மரியாதையுண்டு. ஆனால் நாங்கள் புழுக்கை வேலையால் சீரழிந்து கிடந்த போதிலும், நாங்கள் மனி தர்களைப் போலத்தான்; எல்லா மனிதர்களையும் போன்று எதை யாகிலும் போற்றுதபடி எங்க ளால் வாழ முடிய வில்லை. எங்க ளுக்கு அவளைத் தவிர வேறு எவ ரும் எங்களைத் திரும்பிப் பார்ப்ப தும் இல்லை. அங்கே அந்த வீட்டில் சுமார் ஒரு டஜன் பேர்வழிக்கு மேல் இருந்துங்கூட எங்களை யாரும் கண்ணெடுத்துப் பார்க்க மாட்டார்கள் ஆகவேதான் அவளை நாங்கள் எல்லாவற்றிலும் மேலாக மதிக்க ஆரம்பித்தோம்; அவளை எங்கள் சொந்தமாக் பாவிக்கலானோம்; அவளை ஓர் தெய்வம் போல நினைத்து அதற்கு நைவேத்திக்க தினம் ஓர் ரொட் டித் துண்டை வைப்பதைப் போன்று, அவளுக்கு எங்கள் நித் தியக் கடமைகளில் ஒன்ருக ஓர் ரொட்டித் துண்டை எடுத்து வைப்போம். அவளுக்கு ரொ ட்டி கொடுக்கும் பொழுதும் சும்மா கொடுப்பதில்லை. அவ ளுக்கு நன்ருக உடை உடுத்திக் கொள்ளும் படிக்கும், அடிக்கடி வேகமாக மாடியில் ஏறி இறங்கக் கூடாதென்றும், அவ்வளவு அதிக மாக விறகைக் கட்டித் தூக்கிக் கொண்டு போகக் கூடாதென் றும், சில புத்திகளையும் சொல்லிக் கொடுப்போம். அவள் எங்கள் புத்திமதிகளை சிரித்துக் கொண்டே கேட்பாள்; பதிலுக்கும் ஓர் சிரிப்பு சிரித்து விடுவாள்; ஆனால் நாங்கள் சொல்வதை அவள் கேட் பதில்லை. என்ருலும் அது எங்க ளுக்குக் குற்றமாகத் தோன்ருது. நாங்கள் நினைப்பதெல்லாம், அவ ளைப் பற்றி நாங்கள் எவ்வளவு அக்கரை கொண்டுள்ளோம் என் பது அவளுக்குத் தெரிய வேண் டும் என்பதற்காகவே.

[அடுத்த இதழில் முடியும்]

★

சிப்பாய் ஹிருதயம். ஆசிரியர்: சுகி. பிரசுரம்: கார்த்திகேயினி பிரசுரம், ராமச்சந்திரபுரம், புதுக்கோட்டை. விலை ரூ. 1-8-0

ஹாஸ்யத்திற்குப் பிரதானம் கொடுத்து அத்துடன் கதையையும் சுவையாகக் கொண்டு செல்லும் நாவல்கள் தமிழ் நாட்டில் அதிகம் வெளிவரவில்லை. குறிப்பாகச் சொன்னால் இரண்டே இரண்டு தான் வெளி வந்திருக்கின்றன. 'சிப்பாய் ஹிருதயம்' அந்த வகையில் மூன்றாவது புத்தகம்.

'சுகி'யின் பிரத்தியேகமான ஹாஸ்ய வெடிகளும், துணுக்குகளும், பிரயோகங்களும் 'சிப்பாய் ஹிருதயத்தில்' நிறைந்திருக்கின்றன. புத்தகத்திலுள்ள முன்னுரைக்கே ஒன்றரை ரூபாய் கொடுக்கலாம்.

வெள்ளி மணி: ஆசிரியர்: சாவி. பிரசுரம்: தமிழ்ப் பண்ணை, தியாகராய நகர், சென்னை. விலை ரூ. 0—4—0.

பத்திரிகை விஷயத்தில் நல்ல அனுபவம் பெற்ற ஒரு ஆசிரியர்; புத்தகப் பிரசுரத்தில் பொலிவும் புதுமையும் காட்டும் ஒரு பிரசுரகர்த்தா; நல்ல முறையில் அழகாக, கவர்ச்சியாகப் பிரசுரிக்கும் ஒரு பிரசுராலயம். இந்த மூன்று வசதிகளையும் குறைவறப் பெற்ற 'வெள்ளி மணி' சிறந்த முறையில் நிறைந்த விஷயங்களோடு எல்லோரையும் மகிழ்விக்கும் முறையில் வெளி வந்து அரிய தமிழ்ப் பணி புரிகிறது.

குயில்: பதிப்பாசிரியர்: தி. ந. இராமன். பிரசுரம்: குயில் நிலையம், திருவல்லிக் கேணி, சென்னை. விலை ரூ. 0—8—0.

புதுமை. ஆசிரியர்: இளங்கோவன். காரியாலயம்: திருவள்ளூர் எம். எஸ். எம். விலை ரூ. 0-2-0

சிறு கதை. ஆசிரியர்: எச். சுப்பிரமணியம். காரியாலயம்: வேப்பேரி, சென்னை. விலை ரூ. 0-2-0.

வெண்மதி. ஆசிரியர்: டாக்டர் டி. எஸ். ராஜலக்ஷ்மி. காரியாலயம்: 103, அரண்மனைக்காரத் தெரு, சென்னை. விலைரூ. 0—6—0.

கலை முரசு. ஆசிரியர்: இ. ரெ. கரிகாலன். காரியாலயம்: கலை முரசு காரியாலயம், கோயமுத்தூர். விலை ரூ. 0—6—0.

முன்னேற்றம். ஆசிரியர்: எம். ராதா கிருஷ்ண பிள்ளை. காரியாலயம்: பிராட்வே, ஜி. டி, சென்னை. விலை ரூ. 0—4—0.

தேச சேவை. ஆசிரியர்: ஸ்ரீ பிக்ஷு சுவாமிகள். காரியாலயம்: பிரேகர்ஸ்கொயர், கோயமுத்தூர். விலை ரூ. 0—6—0.

★

தீராத தாபம்

ப. தனுஷ்கோடி

“திருமணம் நிச்சயமாகிவிட்டது அனு! மனதில் எதையும் நினையாமல் கட்டாயம் என் கலியாணத்திற்கு நீ வரவேண்டும். நீ வராவிட்டால் எனக்கு அது கொஞ்சங்கூட சோபிக்காது.''— என்று ரங்கசாமி சற்று தழுதழுத்த குரலில் கூறினர். அவர் கரத்திலிருந்த அழைப்புத் திருகம், மேஜையின் மீது தானுக விழப் போயிற்று.

ஆனல் அனுராதா சட்டென்று தன் கையில் அதை வாங்கிக் கொண்டாள். அவள் படித்து விபரம் தெரிந்த பெண். திருமண அழைப்பை அவராகக் கையில் கொடுக்க வேண்டிய முறையிருந்தாலும், சந்தர்ப்பப் பேதத்தால் தயக்கமடையும் அவரின் சபல மனதைக் கேவலப்படுத்தக் கூடாது என உணர்ந்து கொண்டாள். பத்திரிகையைத் தானே பெற்றுக் கொண்டதன் மூலம் அவரைக் கௌரவப் படுத்தினதுடன், அவளும் திருப்தியடைந்தாள்.

பிறகு சிரித்த முகத்துடன் கலகலப்பாகப் பேசினள். ''என்ன மிஸ்டர் ரங்கசாமி! இதுக்காக இவ்வளவு ஆயாசப் படுகிறீர்களே! நீங்கள் எல்லாம் 'எஜுகேடட் பீபிள்' அல்லவா? இதெல்லாம் இயல்புதானென்று மனதைத் திடப்படுத்திக்கொண்டு, சந்தோஷமாக ஆக வேண்டிய காரியங்களைப் பாருங்கள்!''

அவளுடன் அந்நியோன்யமாகப் பழகியிருக்கிறர் அவர். படிப்பிலும், அந்தஸ்திலும் சமநிலையுடையவள் என்ற முறையில் அவள் பெயரிட்டழைப்பது வழக்கமாகி விட்டது. ஆனலும் களங்கமற்றுப் பேசுவது போல், மகிழ்ச்சியை வரவழைத்துக் கொண்டு ஆறுதல் கூறியதை அவர் நம்பவில்லை என்ருலும் அதைத் தவிர வேறு என்ன விதமாகவும் அவளால் பேசியிருக்க முடியாது என்பதையும் அவர் மனம் ஒப்புக் கொண்டது. பெண்ணுக இருந்தாலும் அவளைப் போன்ற அறிவும், அடக்கமும் சேர்ந்தாற் போல் வேருெருவருக்கு வருவது கஷ்டம்.

சமையல்க்காரச் சிறுவன் காபி கொண்டு வந்து கொடுத்தான். இருவரும் வேறு எதைப் பற்றியோ பேசிக் கொண்டே அதைச்

அன்பாக இருப்பவள் மனம் கலங்குவதை விட அன்பு செலுத்துபவர் துன்பத்தை ஏற்றுக் கொள்வது சிறந்த அஹிம்சை என நம்பினார் ரங்கசாமி. ஆனால் பெண் மனத்தின் பயங்கர ஆழத்தை உணராத ரங்கசாமியை "என் காதல் தீ அணையாமல் சாம்பல் கலந்திருக்கிறது என்பதை அறிந்திருக்க முடியுமா?" என்று கேட்கிறாள் அனுராதா. சிந்தனையைக் கிளறும் இச்சிறு கதையைச் சுவைத்துப் படிக்கலாம்.

சாப்பிட்டனர். தனக்கே இஷ்டம் இல்லாமல் நடைபெறப் போகும் சங்கடத்தைப் பலமுறை வெளிப்படுத்த முயன்றார். ஆனால் அதன் காரணம் அனுராதாவிற்கு நன்றாகத் தெரியும். முடிவு செய்யப்பட்ட பின், அதே விஷயத்தைப் பற்றி, திரும்பத் திரும்பப் பேசுவது பலஹீனமான தோல்வியல்லவா?

எப்படியாவது தன் மனப் போராட்டங்களை அள்ளித் தெளித்துவிட வேண்டும் என்று இருந்த அளவு கடந்த ஆர்வம், அனுவிடம் பலிக்காமலேயே போய்விட்டது. மணப் பேச்சை எடுத்தாலே அலாதியான 'குஷி' பிறந்தது அவளுக்கு! வெறுப்போ, துன்பத்தின் சாயலோ காட்டியிருந்தால் ரங்கசாமியின் தாபம் தணிய ஹேதுவாக இருந்திருக்கும். "நீ இல்லாமல் கல்யாணமே இல்லை. முதல் நாள் மாலையே வண்டி அனுப்புகிறேன். தவறாமல் வந்து விடு!" என்று கூறி விட்டு ரங்கசாமி விடை பெற்றுக் கொண்டார்.

அவர் வாசல் கதவைத் தாண்டியதுதான் தாமதம். அவ்வளவு சிரிப்பும், கலகலப்பும் எங்கேயோ மறைந்து விட்டன. அழுகையும், துக்கமும் அடக்க முடியாமல் பீறிட்டு எழுந்தன. மேஜையின் மீது கைகளை நீட்டி முகத்தைப் புதைத்துக் கொண்டாள். விக்கலும், விம்மலும் ஆற்றுவார் தேற்றுவாரின்றி அறை முழுவதும் வியாபித்துக் கொண்டிருந்தன.

★

பார்க்கப் போனால் அவள் இப்படி வருந்த வேண்டிய அவசியமே இல்லை. பெண்களுக்கே உரிய இந்த துர்ப்பல நிலைதான் அவளையும் இப்படி தடுக்கச் செய்தது. ஒரே ஒரு வார்த்தை! அவரை இப்போதுகூட கூப்பிட்டுச் சொன்னால் போதும். அவ்வளவு கூட வேண்டியதில்லை. "முன்னால் விட்டு, பின்னால் வருந்துகிறாள்" என்று யாராவது போய்ச் சொன்னாலும் போதும். அவரின் விவாகம் நின்றுவிடும். அவள் மனம் நோக அவர் ஒரு நாளும் சந்தோஷப்பட விரும்ப மாட்டார். அதற்காக ஆயுள் முழுவதும் பிரம்மச்சரியாக இருக்கவும் தயாராக இருப்பார்.

ஆனால் அதனால் அவள் திருப்திப்பட முடியுமா? அவளும் கன்னியாகவே பிடிவாதம் பிடித்து விடலாம். அதனால் யாருக்கு நன்மை? இருவரும் சுகப்பட முடியாவிட்டாலும் ஒருவராவது சுகப்படட்டுமே! இதுதான் அவள் ஏக்கத்திற்கும் துக்கத்திற்கும் காரணம்.

வாரம் இரண்டு மூன்று தடவை யாவது சந்திக்கும் அவர் சென்ற பதினைந்து தினங்களாக வரவே யில்லை. அப்போதே அவளுக்குச் சந்தேகம் தட்டியது. கல்யாண விஷயமாக அலைவதில்தான் வர அவகாசமிருந்திராது என எதிர் பார்த்தாள். அது நிஜமாயிற்று. இன்று திருமணத்தாளுடன் அழைக்க வந்துவிட்டார்.

அன்று போன தடவை சந்திப் பின் போது அவள் கூறியது மீண் டும் அவள் நினைவிற்கு வந்தது. "ஆமாம்; நமது நிலைமை அப்படி யிருக்கிறது. நீங்கள் நிச்சயம் கல்யாணம் செய்து கொள்ளுங் கள். உங்கள் சந்தோஷ முகத் தையும், வாழ்க்கையையும் பார்த் தாவது நானும் ஆறுதலடைவேன். உண்மையானபேச்சுத்தான் இது! இதற்காக உங்கள் அன்பைக் கேவலமாக நான் நினைத்து விட மாட்டேன்; என் அன்பையும் விட்டுவிட மாட்டேன். இன்னும் அதிகமான பிரியத்துடன் கூட பிறகு உங்களுடன் பழக முடியும் அல்லவா?" என்று கூறியிருந் தாள். இப்படிக் கேட்ட பின் அவர் என்ன சொல்ல முடியும்? அப்பா, அம்மா பார்த்து வைத்தி ருந்த எத்தனையோ பெண்களில் ஒன்றை உறுதிப் படுத்த சம்மதம் தெரிவித்து விட்டார். மணவித ழும் அச்சிட்டு விநியோகமாகிக் கொண்டு வந்தது.

2

சென்னை சர்க்கார் காரியாலயத் திலே அனுராதாவின் தந்தை உத்தியோகம் பார்த்துக் கொண்டி ருந்தார். உயிருக்குயிராக இருந்த அன்பான மனைவியை இளமையி லேயே இழந்த பின் அவருக்கு வாழ்க்கையே கசந்து விட்டது. அனுராதா மட்டும் பச்சைக் குழந்தையாக இருந்திருந்தால் எங் காவது அனாதை விடுதியில் சேர்ப் பித்துவிட்டு, சந்நியாசம் பெற்றுக் கொண்டிருந்திருப்பார். மனைவி இறந்த போது அனுவிற்குப் பத்து வயது. பெண் குழந்தைக் குரிய சகல லக்ஷணங்களும் அமை யப்பெற்று லக்ஷ்மீகரமாக விளங் கினாள். அத்துடன் கலைவாணி யின் கடாட்சமும் பூரணமாகப் பெற்று சுத்தமான வாக்கு வன் மையுடன் விளங்கினாள். அந்தக் குழந்தைப் பருவத்திலேயே நாளெல்லாம் அவளுடன் பேசிக் கொண்டிருக்கலாம் போல் தோன் றிற்று. நாடோடியாக மனம் வெறுத்து ஓடி விட்டால், உத்தம மான வருங்காலப் பெண்ணின் கதி என்ன? ஆதரவற்ற பச்சிளம் இதயம் எப்படி யெல்லாம் வக்க ரித்து விடுமோ? மனைவியுடன் வாழத்தான் கொடுத்து வைக்காத பாவியாகி விட்டார். மகளைத் தனிமையில் தவிக்க விடும் பாவத் தையுமா அவர் ஏற்றுக் கொள்ள வேண்டும்?

அனு ஹைஸ்கூல் படிப்பை முடிக்கும் வரையில் ரொம்ப ரொம்பச் சிறு பெண்ணாகவே தானிருந்தாள். தானுண்டு; தன் படிப்புண்டு என்பதற்கு மேல் உலகத்தைப் பற்றி அவள் ஒன் றுமே அறிந்திருக்க முடியவில்லை. அந்தக் காலத்தில் படித்த பிள்ளை களும் ஏறக்குறைய அப்படித்தா னிருந்தார்கள். அனாவசியமாக மற்றவர்களிடம் தலையிடுவதோ அரட்டை யடிப்பதோ கிடை யாது. ஆணும், பெண்ணும் கலந்து கிரப்பயமாகப் படிக்க முடியும் என்று பத்து வருடத் திற்கு முன்னால்கூட கூற முடியும். இந்தக் காலத்திலோ, முதல் பாரம் மாணவன் கூடவல்லவா காதற் கடிதம் எழுதக் கற்றுக் கொண்டி ருக்கிறான்!

அனு மேலும் மேலும் படித் தாக வேண்டும் என்ற கட்டாயம் ஒன்றும் இருக்கவில்லை. ஆனால் படிக்கக் கூடாது என்ற அவசியம்

இருப்பதாகவும் தெரியவில்லை. வீடென்று ஒன்றும், அதற்கென்று ஒரு தலைவியும் இருந்தால் தான் எந்தக் குடும்பமும் காலாகாலத்தில் செய்ய வேண்டியதைக் கருத்துடன் செய்ய முடியும். அவள் அப்பா வீட்டிலிருக்கும் போதுகூட ஆபீஸ் அலுவலாகத் தான் இருப்பார். சீரும் சிறப்புமாக வாழ தாயிருந்தால் தானே பெண்ணுக்குச் சவுகரியம்? அனுவிடம் அனுதினமும் கொஞ்ச நேரமாவது கொஞ்சிப் பேசத் தவறுவதில்லை அவர். ஆனல் அது போதாது என்பதும் அவருக்கு அடிக்கடி மனதில் உறுத்தும். அதற்காக என்ன செய்வது? சமையல்க்காரியாக அடுப்பங் கரையில் போட்டு வேலை வாங்கிக் கொள்ளவும் இஷ்டப்பட வில்லை. ஒரே பெண்ணல்லவா? குமாரியின் சாப்பாட்டுச் சுகத்தை அனுபவித்த பின், அவளைப் பிரிய மனமே வராது. அதற்காக அவள் கல்யாணத்திற்குப் பலவித இடையூறுகள் தோன்றும். மாப்பிள்ளை வீட்டோடு வரக்கூடியவராகப் பார்த்தால், அது புருஷன் வீடு என்று ஒன்றில்லாதக் குறையாகப் பெண்ணுக்கும் போய் விடும்.எவ்வளவு அன்பும், பாசமும் இருந்தாலும், போக வரச் சவுகரியம் இருந்தால் தானே பிரீதி இருக்க முடியும்? இது அவரறியாததல்ல. ஆனல் தற்காலிகமாக வயது வந்தபெண்ணை என்ன செய்வது என்று தோன்றவில்லை.

அதன் பயன்தான், அனு ஹாஸ்டல் சாப்பாட்டுடன் காலேஜ் வாழ்க்கையில் பிரவேசமானது. அழகும், இளமையும், சுறுசுறுப்பும் உள்ள பெண் சென்ற விடமெல்லாம் முதல்த் தரம் என்று பெயர் வாங்கியதில் அதிசயமில்லை. அதிலும் அனு அலாதி தினுசு. எட்டுவருட கலாசாலை வாழ்க்கையிலே எத்தனையோ நண்பர்கள், விரோதிகள், குரோதிகள் எல்லாவற்றையும் சமாளிக்க வேண்டியிருந்தது. படிப்பில் கவனம் செலுத்த முடியாத வயதுக்கு வந்த காளைப் பிள்ளைகளின் காமச் சுவை செறிந்த கடித விளையாட்டுக்கள் அடிக்கடி அவளைத் தாக்கின. பல சமயங்களில் பள்ளியை விட்டே ஓடிப் போய் விடலாமா என்று கூடத் தோன்றும். நண்பர்களாகவும், சகோதரர்களாகவும் பழகியவர்கள் கூட, ஒரு நாளில் "நட்பிலிருந்து காதல்" பிறந்து விட்டதாகக் கதை கூறத் தலைப்பட்டனர். ஆனால் பாவம்! கல்வி ஒன்றிலேயே கவனம் செலுத்தி முன்னுக்கு வரவேண்டும் என்று இருக்கும் அனுவிற்கு இதெல்லாம் சிரிப்பாக இருக்கும். இவர்களெல்லாம் படிக்க வந்தார்களா? வேட்டையாட வந்தார்களா? என்று சந்தேகப்படுவாள். "நான் ஒருவரையும் விரும்பாதிருக்கும் போது இத்தனை பேர் என்னை ஏன் விரும்புகிறார்கள்?" என்று தன்னையே கேட்டுக்கொள்வாள். சுயமாகக் கேள்வி போட்டு சிந்திப்பது நல்ல பயிற்சி தான். ஆனல் பிறரைப் பற்றித் தானே கேட்டுக் கொள்ளும் அனேக வினக்களுக்கு விடை கிடைப்பது துர்லபம் தான்!

பி. ஏ. பட்டம்பெற்று வெளியே வருவதற்குள் மேல் மூச்சு, கீழ் மூச்சு வாங்கி விட்டது அவளுக்கு என்று சொல்லலாம். மாணவர்களின் கேலிக்கும், இளக்காரத்திற்கும், சேஷ்டைகளுக்கும் தப்பித்து ஒரே சங்கோஜப் பிராணியாக அடங்கி ஒடுங்கி நாளைக் கழித்ததை இன்று நினைத்துக் கொண்டால் கூட தானகச் சிரிப்பாள். அப்போதெல்லாம் மற்றவர்கள் அவளை எவ்வளவு 'அசடா'க மதித்தனர்? அவளுக்கு யார் எப்படிப் பேசினலும் பரவாயில்லை. தன்னை நெருங்கி தொந்

தரவு படுத்தாமலிருந்தால் போதும்!

3

படித்து பட்டம் பெற்ற பெண் வீட்டில் சும்மா இருக்க முடியுமா? இதற்குள் எத்தனையோ வரன்கள் வந்தன. ஆனல் அவற்றைச் சிரத்தையுடன் சீர் தூக்கிப் பார்த்து முடிவு செய்யும் ஆற்றல் அவள் தகப்பனுருக்கு இல்லே. புதல்வியின் மீது அக்கரை இல்லே என்பதல்ல. வாழ்வில் தோன்றிய அசக்திதான் காரணம். மேலும் கலாசாலே வாழ்க்கையை கண்டபடி துர்விநியோகப் படுத்தாமல், கௌரவமாகக் கழித்ததில் அவருக்கெவ்வளவோ திருப்தி. அந்த நன்னடத்தையின் காரணமாகப் புத்திரியின் மீது இன்னும் அதிக மதிப்பும், விசுவாசமும் ஏற்பட்டிருந்தது. ஆகவே மண விஷயத்தையும் அவளுக்கிஷ்டப்பட்ட போது முடிவு செய்யலாம் என்றிருந்து விட்டார். வயது வந்த பெண்ணனல் என்ன, சுய அறிவும், பக்குவமும் அவளிடம் இல்லேயா?

அவர் சிபார்சின் மீது வெளியூர் கலெக்டர் ஆபீஸ் ஒன்றில் வேலே கிடைத்தது அனுவிற்கு. அவளும் அதைச் சந்தோஷமுடன் ஏற்றுக் கொண்டாள். அப்பாவும் மகளும் ஆழ்ந்த நேச பாவத்துடன் ரயிலடியில் பிரிந்த காட்சி மனதை உருக்குவதாக இருந்தது. என்ன தான் தந்தையும் குமாரியுமானலும், படித்து விபரம் தெரிந்தவர்கள் தனக்குத் தானே வாழ்க்கையை நடத்திக் கொள்ளும் சுதந்தரத்தை அங்கீகரிப்பார்கள் என்பதற்கும், அது எடுத்துக் காட்டாக இருந்தது.

ஆபீஸிலே எல்லோரும் ஆண்கள். அவள் ஒருவள்தான் பெண். இயற்கையிலேயே சங்கோஜியான அவள் இப்படித் தனியாக மற்றவர்களுடன் பழகுவது கஷ்டமாகவே இருந்தது. சில காலத்திற்கு முன் இரண்டு பெண்கள் அங்கு வேலே பார்த்தார்களாம். ஆனல் அவர்களும் இப்போது இல்லே. டைப் அடிப்பது, சுருக்கெழுத்தில் எழுதுவது, காபி எடுப்பது முதலிய பல வேலேகளேயும் பிறர் குறை சொல்ல இடமின்றி செய்துவந்தாள். படித்து உத்தியோகம்பார்ப்பதால் மட்டும் எல்லா ஆண்களும் ஒழுங்காக நடந்து கொள்ளுவார்கள் என்று கூற முடியாது. அப்படித்தான் அவளுக்கு அங்கும் சிலரால் சிறிய தொல்லேகள் இருந்தன.

"கன்னிப் பெண்! தனியாக வேலே பார்க்கிருள்; தடிப் பிரம்மச்சாரிகள் சும்மா இருக்க மாட்டார்கள். ஜாக்கிரதையாக இரு அம்மா!" என்று சில வயதான கிளர்க்குகள் அவளுக்கு அனுதாபமுடன் எச்சரித்தனர். அப்படி அவர்கள் சொல்லுவது அவளுள்ளத்திற்குத் தெம்பாக இருக்கும். ஒரு உண்மையான தந்தை அருகிலில்லாவிட்டாலும், எத்தனே தந்தைமார்கள் அவளுக்காக சிரத்தை காட்டுகின்றனர்?

சிலர் ஆபீஸ் அலுவல்களேச் சாக்கிட்டுக் கொண்டு அவள் அறைக்கும் அடிக்கடி வருவார்கள். ஆனல் எவரிடமும் அனவசியமாக வார்த்தையாடிக் கொண்டிருக்கமாட்டாள். காதலிக்க முயற்சிக்கலாம்; அது இயற்கை. ஆனல் அது இரு பாலருக்குமல்லவா இயற்கையாகத் தோன்ற வேண்டும்? இதைப் பட்டவர்த்தனமாகப் பலரிடம் சொல்லி மறுத்து விட்டாள். சிலரோ எப்படியும் அவளே வசப்படுத்த வேண்டும் என்ற குரூர எண்ணம் கொண்டிருந்தனர். காமச் சேற்றில் விழுந்து கறைபட்ட பின் கைவிடப்படும் கேவலமான மனிதர்களேக் கண்டாலே அருவருப்

பாக இருந்தது அவளுக்கு. அவர்களிடமிருந்து விலகிக் கொள்வது கஷ்டமாக இருந்தது. இதற்கெல்லாம் காரணம் அவள் கல்யாணமாகாதவள் என்ற ஒரு அபிப்ராயம் தானே? மனம் பிடித்தவராகப் பார்த்து அவள் ஏன் செய்து கொள்ளக் கூடாது?

இந்த மாதிரி அவள் இதுவரை சிந்தித்ததே கிடையாது. ஆனல் இப்படிச் சிந்தனை செய்யத் துவங்கியவுடன் அதிகநாள் சும்மா இருக்கவும் முடியவில்லை. ஆபீஸிலே இத்தனை நாளாக யாருடனும் வீண் பேச்சுப் பேசாமல் வேலை பார்க்கும் ரங்கசாமி என்பவர் மேல் அவள் நாட்டம் சென்றது. ரோஜாச் செடியில் தானே

ரோஜா பூக்கும்? ஆண் சகவாசத்தை அவள் ஒதுக்கி வந்தது போலவே, அவரும் பெண் சகவாசத்தை விலக்கி வந்திருக்கிருர். விசாரித்ததில் அவரும் மணமாகாதவர் என்று தெரிந்தது.

அடிக்கடி அவள் அவரிடம் சென்று எதையாவது பேசி

நட்பை வளர்க்க முயன்றாள். பெண் மனம் வைத்தால்தான் ஆகாததொன்றும் இல்லையாமே! அந்த மூலதனம் அனுவிடம் மட்டுமில்லையா? மெல்ல மெல்லப் நெருங்கிப் பழகி, அந்தரங்க நட்பையும் பெற்றுவிட முயன்றாள். அவரோ பரம சாது. ஒருவரை வெறுக்கவும் மாட்டார்; ரொம்ப விரும்பவும் மாட்டார். பெண் என்ற காரணத்திற்காக மட்டும் அவளை அலட்சியப்படுத்த அவர் விரும்பவில்லை. ஒரு வேளை தன்னழகில் கர்வப்பட்டு ஆளை மயக்கும் இழிவான நடத்தையில் அவள் பிரவேசித்திருந்தால், அவர் அவளை உதறித் தள்ளியிருப்பார். பெண்ணுடன் அதிகமாகப் பழகுகிறோமே என்பதைத் தவிர, அவள் குணத்தில் எதுவும் குறை கண்டு பிடிக்க அவரால் முடியவில்லை. நியாயமான காரணமில்லாமல் தானாக வளரும் நல்ல நட்பைச் சிதைத்துக் கொள்ளலாமா? அது கல்வி யறிவுள்ளவர்களின் லட்சணம்தான் ஆகுமா?

உண்மைக்கு எக்காலத்திலும் மதிப்பும் செல்வாக்கும் ஏற்படும். யோக்கியமான அவ்விருவர்களின் ஆழ்ந்த நட்பைப் பார்த்து, யோக்கியர்கள் நல்லவிதமாகச் சிந்தித்தனர். கண்ட அழகில் கருத்தை இழந்து காமச் சுவை அனுபவிப்பதில் நாட்டம் கொண்ட யுவர்கள், அவர்களைக் கண்டு பொறாமைப் பட்டனர். மாசு கற்பித்துப் பழி சுமத்தினர். அம்மாதிரியான சொல் ரங்கசாமியின் காதில் விழுந்த போது திடுக்கிட்டு விட்டார். யுவதியிடம் நட்புக் கொள்வதில் இவ்வளவு விபரீதம் உண்டு என்பதை அவர் இதுவரை உணரவேயில்லை. இவர்கள் சொல்லுகிறபடி அவள் அவரை மனமாறக் காதலிக்கிறாளா? ஆம்; அப்படித் தானிருக்க வேண்டும் என அவர் மனம் அறிவுறுத்தியது. எவரிடமும் இல்லாத முறையில் ஏன் அவரிடம் மட்டும் அவ்வளவு அந்நியோன்யமாகப் பழக வேண்டும்? நல்லவர் என்பதற்காகவா?

ஒரு நாள் பேசிக் கொண்டிருக்கும் போது தன் கருத்தையும் பிரஸ்தாபித்தார். "நம் உறவைப் பற்றிக் கண்டபடி எல்லாம் உளறுகிறார்களே! நாம் அப்படியா நடந்து கொள்ளுகிறோம்? பின் எதற்காக இவ்வளவு அவமானமுடன் நம் சினேகிதத்தை நீடிக்க வேண்டும்?"

அவள் இலேசாக சிரித்து விட்டுப் பதிலளித்தாள்: "வாஸ்தவம்தான். ஆனால் இதில் இழுக்கு எனக்குத்தான் அதிகம்! நீங்கள் ஆண்பிள்ளையாக இருந்து இப்படி ஏன் அஞ்சுகிறீர்கள்?"

அது போதுமான சமாதானமல்ல. ஆணாயிருந்தாலும் ஒழுக்கம் கெட்டவன்" என்று பெயரெடுக்க அவர் விரும்பவில்லை. உலகப் போக்கை ஆதாரமாக வைத்துக் கொண்டு அவள் சமாதானம் கூறுகிறாள். ஆகவே அவளைப் பற்றியே அவர் சந்தேகிப்பதாகக் கூறினால்...?

அதை இப்படிக் கேட்டார். "இத்தனை ஆண்களின் இடையிலே நீ வேலை பார்க்கிறாயே? இவ்வளவு நாளில் ஒருவர் பேரிலுமா உனக்கு உணர்ச்சி ஏற்படாமல் போயிற்று? பலரின் பல விதமான கேலிகளில் கூடவா மரக்கட்டை போல உன்னால் இருக்க முடிந்தது?"

அவள் படித்த பெண்ணல்லவா? அதிஜாக்கிரதையுடன் இதை அர்த்தம் செய்து கொண்டு பதிலளித்தாள். அது பதிலல்ல; பொதுவான தத்துவம். அவளைப் போல் தனிமையில் உத்தியோகம் பார்க்கும் பெண்கள் எல்லோரைப் பற்றியுமே, அது கௌரவமாக எண்ணச் செய்தது.

"பொதுவாக பல ஆண்களுடன் பழகினால் பெண்ணின் உணர்ச்சி கிளறி விடப்படும் என நினைப்பது பரம பிசகு! ஒண்டியாக இருந்து பழகும் என்றால் பலருக்கு துர் எண்ணங்கள் ஏற்படலாம். ஆனால் மற்றவர்களுடன் நான் பழகும் போது அவர்களையும் பெண்பாலாகவே களங்கமின்றித்தான் என்னால் பழக முடிகிறது. ஆண்களுடன் கலந்து பழகுவதில் கல்லூரித் தன்மை வேறு; உத்தியோகத் தன்மை வேறு. முன்னதில் உள்ள தீய நினைவுகள், பெண்ணைப் பொறுத்தவரை பின்னதில் இல்லை!"

அவர் பெண்ணாக இருந்தால் தானே இதில் பொய் இருப்பதாக மறுக்க உரிமை இருக்க முடியும்?

கூண்டுக் கிளி "சுதந்திரம்! சுதந்திரம்!" என்று கத்திக் கொண்டேயிருந்தது. அந்த பரிதாபத்தைச் சகிக்க மாட்டாமல் ஒருநாள் அதை வளர்க்கும் இளவரசி கூண்டைத் திறந்து விட்டு விட்டாள். வேகமாகப் பறந்து வெளியேறிய சுதந்திரக் கிளி, எங்கெங்கோ அலைந்து திரிந்து விட்டு மூன்றாம் நாள் திரும்பத் தன் கூண்டிலேயே வந்து புகுந்து கொண்டது. அதைக் கண்டதும் ராஜகுமாரி ஆச்சரியம் அடைந்தாள். கிளி சொல்லிற்று: "என்னதான் கூண்டில் சதா அடைபட்டிருந்தாலும், வேளா வேளைக்கு உன் மிருதுவான கரஸ்பரிசம்பட்ட பழங்களைப் புசிப்பதில் உள்ள ஆனந்தம், காட்டுப் பழங்களை நானே என் காலில் பற்றித் தின்பதில் இல்லை. உன் இனிமையான குரலில் எப்போதும் என்னுடன் என்னென்னவோ பேசி மகிழ வைக்கிறாய்! என்னால் நீயும், உன்னால் நானும் பெறும் இந்த அன்பான இன்பம் காடுகாடாகச் சுற்றி அலைவதில் எனக்குக் கொஞ்சங்கூட இல்லை!"

விசித்திரமாக சுயேச்சையை வெறுக்கும் இந்தக் கிளியின் மனோபாவம் போல்தான் அனுவின் காதலும் மாற்றமடைந்தது. "ஊம்" என்று ஒரு வார்த்தை சொல்ல மாட்டாரா என ஏங்கித் தவித்த அவளுள்ளம். அவர் சம்மதித்த பிறகு, பற்பல சிந்தனைகளில் மனம் ஓடியது. அப்பாவுக்குத் தெரியாமல், அவர் அனுமதியில்லாமல் இப்படி எல்லாம் மனதைச் சிதற விடுவது நியாயமா? இவ்வளவு காலமாகக் கஷ்டப்பட்டு அவர் அவளைப் படிக்க வைத்ததற்கு இதுதான் பிரதியா? இது அவரை மதிக்காத தான்தோன்றிச் செய்கையல்லவா? இதை அவர் அறிந்தால் மனசு என்ன பாடு படும்? ஏன் இப்படி என் சித்தம் மாறு பட்டது? இப்படி எல்லாம் எண்ணி யெண்ணித் தடுமாறுகையில் அவரும் பல புதிய பிரச்னைகளைக் கூறிக்கொண்டே வந்தார். அதாவது வீட்டிலே பெற்றோர்கள் மணம் செய்து கொள்ளும்படி கட்டாயப் படுத்துகிறார்கள் என்று. தொழில் முறையில் நேசமான அனுவை மணக்க அவர்கள் ஒப்பமாட்டார்கள். அப்படியானால் இந்த பந்தம்...? பழக்கம்...? வியர்த்தமாவதா?

எவ்வளவுதான் படித்து முற்போக்கடைந்திருந்தாலும், ஹிந்து பண்பாட்டில் ஊறிய இரத்த சுபாவம் சுலபத்தில் விலகுவதில்லை. அதிலும் பெண்கள் சபல சித்தத்தை மாற்றி எதிலும் ஸ்திரமான அபிப்பிராயம் கொள்வார்கள் என எதிர்பார்க்க முடியாது. அந்த பலஹீனம் அனுவிடமும் பூரணமாக இருந்தது. தன்னால் அவர் காதலைப் பூர்த்தி செய்ய முடியாவிட்டாலும், அவரையாவது வேறொரு பெண்ணுடன் சுக

மாக இருக்கும்படி செய்ய லாமே என நினைத்தாள்.

"நான்தான் முதலில் உங்கள் மனதைக் கலைத்தேன். தெரியாமல் செய்துவிட்ட அந்தப் பாபத்தை தயவு செய்து மன்னித்து விடுங்கள். நீங்கள் உங்கள் பெற்றோர் இஷ்டப்படி நடந்து குடும்ப கௌரவத்தைக் காப்பாற்றுங்கள்!" என்று அவளுக்கு அவர் அன்பராயினும், எவரிடத்தும் அவர் நல்ல பெயர் வாங்க வேண்டும். அதற்கு அவள் ஒத்தாசை செய்வதுதான் கடமை. இத்தனை நாள் பெற்ற அன்பின் செல்வாக்கினால், அவளின் ஒவ்வொரு வார்த்தையையும் உண்மையாக நம்பி பின்பற்ற அவர் தயாராக இருந்தார். விவாகம் வேதனையை அளிக்கக் கூடி



அவள் தீர்க்கமான முடிவைப் போலக் கூறிய போது அவரும் பளிச்சென்று உடனே பதிலளித்தார். "யார் முதலில் நெருங்கி அன்பு கொண்டார்கள் என்பது பிரச்னை அல்ல அனு! இன்று யாரிடம் அன்பு குறைவாக உள்ளது என்று சொல்ல முடியுமா? எப்படியோ உள்ளம் ஒருமித்தவர்கள், பிரிய நேருவது நல்லதா?"

உயர்ந்த பண்பில் லயித்தவர்கள் வார்த்தைகளின் வாதத்திற்குக் கட்டுப்பட மாட்டார்கள். யது என்று தெரிந்தும் அவள் வார்த்தைக்காக, திருப்திக்காக, சம்மதித்தார். அன்பாக இருப்பவள் மனம் நலுங்குவதைவிட, அன்பு செலுத்துபவர் துன்பத்தை ஏற்றுக் கொள்வது சிறந்த அஹிம்சை என நம்பினர்.

5

குறித்த தேதியில் ரங்கசாமியின் கல்யாணம் தடையின்றி நடைபெற்று முடிந்தது. வாக்களித்தபடி அனுராதா மணவிழாவிற்கு

வரவில்லை. இரண்டு நாள் இருக்கும் போதே லீவு எடுத்துக் கொண்டு அப்பாவைப் பார்க்கப் போய் விட்டாள். இப்படி அவள் செய்தது அவருக்குச் சொல்ல முடியாத வருத்தமாக இருந்தது. ஆனால் அவள் வெளியூர் சென்ற காரணம் நிச்சயமாகத் தெரியாததால், அவளைப் பற்றித் தவருக எண்ணத் துணியவில்லை அவர் மனம்.

பிறகு அவளைச் சந்திக்கும் சந்தர்ப்பம் பதினைந்து தினங்கள் கழித்துத்தான் ஏற்பட்டது. பழையபடி புன்முறுவலுடன் வரவேற்ருள்; உபசரித்தாள்: ஆனல் அதில் உயிர் இல்லை; களையில்லை. இது அவருக்கும் தெரிந்தது. அதனல் விவாக சமயத்தில் வரவில்லையே என்ற கோபத்தைக் காட்டத் துணிவு வரவில்லை. அவளாக ஏதோ மன்னிப்புக் கோரினள். தலையை அசைப்பதைவிட அதிகம் பேச முடியவில்லை அவரால். "என்னிடம் இருந்தது போலவே அவளுடனும் அன்பாக இருங்கள்! என் ஆசி அவளுக்கு எப்போதும் இருக்கும். ஒரு நாளைக்கு வந்து பார்க்கிறேன். இனி நீங்கள் இங்கு வருவது உசிதமாயிராதல்லவா?" என்று விடை கொடுத்தாள். ஒன்றும் புரியாமல் வந்தனம் செலுத்தி விட்டு வீட்டை நோக்கி நடந்தார் அவர்.

அனுராதா தன் டைரியை எடுத்து ஒரு பக்கத்தை விரித்துப் படித்தாள். "நான்தான் பெண்! பேதை மனம் படைத்தவள். என் மீது உண்மையான ஆழ்ந்த காதல் அவருக்கு இருக்குமானல், நானே வற்புறுத்தினலும் வேறு ஒருவளுடன் வாழ எப்படி மனம் வரும்? பொல்லாத ஆண்களே இப்படித்தான். நிலையாக ஒன்றில் பற்று வைக்க முடியாத சபல சித்தம் நிச்சயமாக ஆண்களுக்குத்தான்! வெற்றியோ தோல்வியோ அதைப் பற்றிக் கவலைப்படாமல் அவர் என்னையே எண்ணிக் கொண்டிருந்தால் என் மனம் எவ்வளவு சாந்தியடையும்? அப்படி உறுதியுடனிருந்தால் ஆயிரம் தடைகள் வந்தாலும் தோல்வியடைய முடியுமா?..."

இதை இதற்குள் எத்தனையோ தடவை படித்து விட்டாள். ஆனல் பெண் மனத்தின் இந்தப் பயங்கர ஆழத்தை அவர் உணருவாரா? அவளின் காதல் தீ அணையாமல் சாம்பல் கவிந்திருக்கிறது என்பதை அறிந்தால் அமைதியாக இருக்க முடியுமா? முன்னைவிட அதிகமாக அவர்கள் நட்பு உண்மையில் பிரகாசிக்க முடியும் என்றுதான் நம்ப முடியுமா?

நிஜத்தைச் சொல்லுங்கள்! இந்த நிலைக்குக் குற்றவாளி யார்? அவளா? அவரா?

★

காதல்

காதலைப் புஸ்தகத்தில் புகுத்துவது ரொம்ப நியாயம். வேறெங்கு அது உயிர் வாழ முடியும்?

இரண்டு ஆத்மாக்கள் ஒரே எண்ணத்தோடும், இரண்டு இதயங்கள் ஒரே துடிப்போடும் இருப்பதே காதல்.

— வில்லியம் பால்க்கனர் —

இயற்கை இன்பம்

[அ. கி.]

[ஒருநாள் அந்திப்போதில் காதல் நிறைந்த குடும்பத்தினர் அம்மை, அப்பன், மக்கள் மூவரும் வயல்களின் நடுவே உலாவப் போயினர். அங்குள்ள ஓடை, கழனி, கரும்பு, மா, மயில், குயில், பசு இவற்றைக்கண்டு களித்தனர். அவை ஒவ்வொன்றிலும் தமது குடும்பமாகிய அம்மை, அப்பன், மக்கள் தோற்றங்களைக் கண்டு ஆமாம், ஆமாம், ஆமாம் என மூவரும் மகிழ்ந்தனர். அம் மகிழ்ச்சி பாட்டாகப் பெருகிற்று. ஒவ்வொரு பாட்டிலும் முதல் அடி அம்மாள் சொல்வது, இரண்டாம் அடி அப்பன் சொல்வது மூன்று, நான்காம் அடிகள் மக்கள் சொல்வது.]

பொன்னின் அந்திப் போதினிலே ஒருநாள்
பொழுது போக்காய் உலாவுங்கால்
மன்னும் இயற்கை எழில் நடுவண்
மகிழ்ந்து கண்ட துரைக்குவமே.

ஆமாம் ஆமாம் ஆமாம் என்றே
அம்மை அப்பன் மக்களெலாம்
தேமாம் கழனி வயல்களிலே
சிந்தைக் காதல் தெளித்தனரே

மகிழ்ந்த ஓடை நானன்றோ அதனுள்
மணக்கும் மலரும் நானன்றோ
நெகிழ்ந்த காதல் இரண்டினுளும்
நின்ற தேனும் நாமன்றோ ஆமாம்

நிறைந்த கழனி நானன்றோ அதனுள்
நிமிர்ந்த செல்நெல் நானன்றோ
அமர்ந்த இரண்டின் களிப்பினிலே
அன்பாம் விளைவு நாமன்றோ

ஓங்கு கரும்பு நானன்றோ அதனுள்
உயர்ந்த சாறு நானன்றோ
தேங்கிவ் விரண்டின் திரட்சியெனத்
தெளிகற் கண்டு நாமன்றோ ஆமாம்

தேமாங் கொத்து நானன்றே   அதனுள்
சிரித்த பூவும் நானன்றே
தாமாங் காதல் வடிவமெனத்
தழைக்கும் பிஞ்சு நாமன்றே   ஆமாம்

ஆலும் மயிலு நானன்றே   அதனின்
அழகார் தோகை நானன்றே
சாலும் இரண்டின் சாயலெலாம்
தாங்கிய வடிவம் நாமன்றே   ஆமாம்

கண்ணார் குயிலும் நானன்றே   அதனின்
கழுத்தின் அமைப்பும் நானன்றே
உண்ணார் அமைப்பில் உதிக்கின்ற
உருக்கும் இசையும் நாமன்றே   ஆமாம்

ஆரும் ஆவும் நானன்றே   அதனுள்
அடங்கும் மடியும் நானன்றே
தேரும் மடியில் ஊறிவரும்
தேனா ரமிர்தம் நாமன்றே   ஆமாம்

முதலும் தொழிலும் இலாபமுமாம்   நாங்கள்
மூவர் போல மூதுலகும்
நிதமும் குடும்பச் சுவையமுதை
நிறைய அளித்தல் நுகர்ந்தோமே.

Printed at the Vasantha Mills Press, and Published by K. P. Sundaram, at 4/12 A. Trichy Road, Coimbatore. Editor: R. Thirugnanasambandam.


நகைகளில் பெயர் பெற்ற
PAR
சீல் நகைகளே சிறந்தவை
P.A. ராஜு செட்டியார் & பிரதர்
ராஜா. கோயமுத்தூர். 139.

இன்றைய பட உலகின் இணையற்ற
வெற்றிச் சின்னம்!

ஜூபிடர் பிக்சர்ஸ்

இனி வரும் படங்களின் அமோக
வெற்றிக்கும் அடையாளம்!

கஞ்சன்....
அபிமன்யு.....
வேலைக்காரி.....
விப்ரநாராயணா...
கிருஷ்ணவிஜயம்